ஹரிதாச விஜயம்

மாத இதழ்

Haridasa Vijayam - Monthly

மலர் 1 ** அக்டோபர் 2019 ** இதழ் 1



ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ், பெங்களூரு

இதுவரை வெளியாகியுள்ள புத்தகங்கள்

1. ஸ்ரீஹரியின் 40 அவதாரங்கள். 352 பக்கங்கள். ரூ.200
2. பஞ்ச பரிசுத்த தேவதைகள்(பரசுக்ல த்ரயர்கள்) 290 பக். ரூ150
3. தந்தெமுத்து மோகனதாசர் (பரமப்ரிய சுப்பராய தாசர்). 270 பக்கங்கள். ரூ.150
4. ஸ்ரீசத்யவீர தீர்த்தர். 64 பக்கங்கள். ரூ.40
5. ஸ்ரீசத்யபோத தீர்த்தர். 164 பக்கங்கள். ரூ.70
6. ஸ்ரீசத்யத்யான தீர்த்தர். 216 பக்கங்கள். ரூ.110
7. மத்வகதாம்ருதம். 200 பக்கங்கள். ரூ.100
8. இந்தா குருகள காணேனோ. 48 பக்கங்கள். ரூ.30

e-books (மின் புத்தகங்கள்)

இன்னும் அச்சிற்கு வராத நமது 24 தமிழ்ப் புத்தகங்கள், மின் புத்தகங்களாக அமேசான் தளத்தில் கிடைக்கின்றன. Amazon Kindle கருவியிலோ, Kindle செயலியிலோ இவற்றை தரவிறக்கி படிக்கலாம்.

எமது Android app - வேதநிதி - VEDHANIDHI

* மத்வ சித்தாந்தத்தைப் பற்றி அறிய உதவும் செயலி
* 35 தலைப்புகளில் 5,000 Objective type கேள்வி பதில்கள்.
* தமிழ், ஆங்கிலம் மற்றும் கன்னடத்தில் கேள்வி பதில்கள்
* Google Play Store சென்று VEDHANIDHI என்று தேடவும்.
* செயலி தரவிறக்கக் கட்டணம் ரூ.150.
* தரவிறக்கினால் உடனடி புத்தகப் பரிசு உண்டு.
* செயலியில் சரியான விடைகளைக் கொடுத்தாலும் பரிசு.
* இன்றே VEDHANIDHIஐ தரவிறக்கி, பயன்பெறவும்.

ஸ்ரீஹரி சர்வோத்தமா வாயு ஜீவோத்தமா



நம: ஸ்ரீபாதராஜாய நமஸ்தே வியாச யோகினே |
நம: புரந்தரார்யாய விஜயார்யாய தே நம: ||

"ஹரிதாச விஜயம்"

சிரி நிலயன குணகள '**திளிது**' பஜிசுவுதே

மலர் : 1 இதழ் : 1

நிர்வாக ஆசிரியர்

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்,

380, 2A Main, 16th Cross,

JP Nagar 4th Phase, பெங்களூரு 560078

Ph.: 89044-58276. haridasa.vijayam@gmail.com

jagannathakesava.blogspot.com

துணை ஆசிரியர்

'தாச சாகித்ய சேவா ரத்ன'

திரு. குரோம்பேட்டை R. ஸ்ரீதரன்

ஆசிரியர் பக்கம்

பாரத, பாகவத, புராண, பிரம்மசூத்திரங்களை நிர்ணயம் செய்து நமது ஸ்ரீமதாசார்யர் நமக்காக சர்வமூல கிரந்தங்களை இயற்றிக் கொடுத்தார். அவை கற்றறிந்த பண்டிதர்களுக்கும், சர்வமூல கிரந்தங்களைப் படிக்கும் தகுதி உடையவர்களுக்குமே புரிந்தன. எளிய பாமர மக்களுக்கும் நமது சித்தாந்தம், அதன் தத்வங்கள், சிறப்புகள் போய்ச் சேரவேண்டும் என்ற உயரிய கருத்தில், ஸ்ரீபாதராஜர் இவற்றை கன்னடக் கிருதிகளில் இயற்றினார். இவர் தொடங்கி வைத்த அரும் செயலை ஸ்ரீவியாசராஜர் முன்னெடுத்து, தாச பரம்பரையையே தோற்றுவித்து, ஸ்ரீ புரந்தரதாசர் மற்றும் ஸ்ரீகனகதாசர் மூலமாக நமது சித்தாந்தத்தின் கருத்துகளை எளிய கன்னடத்தில் மக்களிடையே பரவ வைத்தார். ஸ்ரீபுரந்தரதாசரின் கிருதிகளை அங்கீகரித்து அதற்கு 'புரந்தரோபநிஷத்' என்றே பெயர் வைத்தார்.

அன்றிலிருந்து தொடங்கிய ஹரிதாச பரம்பரை, 21ம் நூற்றாண்டான இன்றுவரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இந்த பரம்பரையில் வந்த நூற்றுக்கணக்கான ஹரிதாசர்கள், தமது கிருதிகளால் மக்களிடையே பக்தியையும், சித்தாந்தத்தையும் பரப்பி வருகின்றனர். ஆனால், இன்றைய கால கட்டத்தில் நாம் (மாத்வர்கள்), நாட்டின் பல்வேறு மாநிலங்களில் வாழ்வதால், நம் கிருதிகளை அந்தந்த மாநில மொழியில் மொழி பெயர்த்து, அதன் மூலம், சாகித்யத்தில் சொல்லியிருக்கும் உண்மையான கருத்துகளை அறிய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

ஹரிதாச சாகித்யம் ஹரிதாசர்களில் அனுபவத்திலிருந்து வெளிவந்தவை. மந்திர துல்யமானவை. த்வைத சித்தாந்தத்தின் கருத்துகள், ஸ்ரீமதாசார்யர் நிர்ணயம் செய்த விஷயங்கள் ஆகியன இந்த சாகித்யத்தில் மிகவும் எளிமையாக சொல்லப்பட்டுள்ளன. அத்தகைய அற்புதமான கிருதிகளை, அதில் இருக்கும் ஆழ்ந்த கருத்துக்களை, தமிழில் தொடர்ந்து கொடு க்கும்

ஒரு சிறிய சேவையில் ஈடுபடவேண்டி ஒரு மாதப் பத்திரிக்கையை துவக்க முற்பட்டோம். ஸ்ரீஹரி வாயு குருகளின் ஆசியோடும், ஆன்றோர்களின் உதவியுடன் இதை துவக்கியதுடன் நம் செயல் முடிவுற்றது. 'ந அஹம் கர்த்தா ஹரி: கர்த்தா' - இனி இதை முன்னெடுத்து நடத்துவது ஸ்ரீஹரியின் விருப்பமே. ஹரிபக்தர்களின் ஆதரவு இல்லாமல் இந்த இதழின் நோக்கமானது நிறைவேறாது. ஆகவே, தயவு செய்து நீங்கள் இதை படித்து, புரிந்துகொண்டு, புரியாவிட்டால் கேட்டு, இந்தப் பத்திரிக்கையை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த இதழில் வரும் கட்டுரைகளைப் பற்றிய உங்கள் கருத்துகளை எங்களுக்கு கட்டாயம் தெரிவிக்கவும்.

இந்தப் பத்திரிக்கை பற்றிய சிந்தனையை திரு. க்ரோம்பேட்டை R. ஸ்ரீதரன் அவர்களிடம் சொன்னபோது, அவரும் கட்டாயம் செய்வோம் என்று பல்வேறு யோசனைகளைச் சொல்லி, இதற்காக ஒரு குழுவினரையும் தயார் செய்தார். தமிழ் மாத்வர்களுக்கு மிகவும் அறிமுகமானவர்களான - திருமதி. நிர்மலா நரசிம்மன், திரு.லட்சுமிபதிராஜா மற்றும் திரு. ஸ்ரீனிவாசன் பிராணேஷ் அவர்கள் தங்களின் ஆதரவினைத் தெரிவிக்க, இதோ முதல் இதழ் தங்களின் கரங்களில்.

ஸ்ரீஹரிவாயுகுருகளின் ப்ரேரணையாலும், விஜயதாசரின் தாச பரம்பரையில் வந்த எமது பரமகுருகளான பரமப்ரிய சுப்பராய தாசர் மற்றும் குருகோவிந்தவிட்டல தாசரின் ஆசிகளாலும், எனது குருவான ஜாம்பவதிப்ரியவிட்டல தாசரின் வழிகாட்டுதலாலும் வெளிவந்துள்ள இந்தப் பத்திரிக்கையில் சில தொடர்கள், போட்டிகள் என தொடக்கியுள்ளோம். விவரங்கள் உள்ளே. மேலும் பல விஷயங்களை தொடர்ந்து பேசுவோம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்

துணை ஆசிரியர் பக்கம்

'ஹரிதாச விஜயம்' தமிழ் மாத சஞ்சிகை உங்கள் கைகளில் தவழ்கிறது. இது, தாச சாகித்யத்திற்காகவே, தமிழில் வெளி யிடப்படுகிற முதல் சஞ்சிகையாகும். 'மாத்வ இலக்கியம்' என் னும் பெரும் கடலின் ஒரு சிறு பாகமே 'ஹரிதாச சாகித்யம்'. ஆனால், உற்று நோக்கினால், அதுவும் ஒரு பெரும் கடலே. இந்தக் கடலின் அக்கரையை நம்மால் காண இயலாது, இப் பிறவியில் மட்டுமல்லாது, எப்பிறவியிலும்!. ஏதோ ஒரு கை அள்ளிப் பருக முயற்சிப்போம். இக்கடல் நீர் உப்பல்ல. அமிர் தம். குடிக்கக் குடிக்க, திகட்டாமல், இன்னும் பருக வேண்டும் என்று ஆசையைத் தூண்டிவிடும். உங்களைப் போன்ற வாசகர் கள் ஆதரவுக்கரம் நீட்டினால், அந்த அமிர்தத்தைக் கொட்டத் தயாராக உள்ளோம்.

ஸ்ரீமன் நாராயணான ஸ்ரீஹரி ஒருவரே இந்த பிரபஞ்சத்திற்கு ஈசன். மற்ற அனைவரும் அவரின் தாசர்களே. அதாவது தொண்டர்களே. அவரது பிரதி பிம்பர்களே. இதை உலகிற்கு பளிச்சென்று பறைசாற்றியவர், ஜகத்குரு ஸ்ரீமன் மத்வாசார்யர்.

அவரே அனுமத் அவதாரத்தில், இராவணனின் சபையில் தைரியமாக 'தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய' (தொண்டன் யான், கோசலையின் அதிபதிக்கு) என்று பறைசாற்றியவர். அவரே 'மத்வ' அவதாரத்தில், 'ஈஸ ஒந்து, தாச அநேக' (கடவுள் ஒருவரே, அடியாட்கள் பலர்) என்று இயம்பியுள்ளார்.

அவரின் சாத்திரத்தின்படி, இலக்குமி முதற்கொண்டு த்ருண ஜீவர்கள் பரியந்தம் அனைவரும் தாசர்கள். நாமும் அவரின் அடியாட்களே. ஆனால் இதைப் பற்றி புரியாமல் இருக்கி றோம். இன்றைய நாட்களில் 'தாசர்கள்' என்று குறிப்பிடப்படு வது, கன்னட மொழியில் பல இனிய கிருதிகளை இயற்றி, அதன்மூலம் விட்டல பக்தியை பரப்பிய குறிப்பிட்ட தொண்டர்

களே. மாத்வ சம்பிரதாயத்தில், ஸ்ரீவியாசராஜர் காலத்தில் ‘வியாசகூடம்’ மற்றும் ‘தாசகூடம்’ ஏற்பட்டன என்று கூறு வார்கள்.

சம்ஸ்கிருத மொழியில் வேதாந்த நூல்களைக் கற்று, அதில் புலமை பெற்றவர்களை ‘வியாச கூடத்தவர்’ என்றும், அதே கருத்துக்களை கன்னட மொழியில் கிருதி வடிவில் பாடி, இறை பக்தியைப் பரப்பியவர்களை ‘தாச கூடத்தவர்’ என்று அழைக்கும் பழக்கம் வந்தது. ஆரம்ப கால தாசர்கள், வியாச, தாச சாகித்யம் இரண்டிலும் வல்லமை படைத்தவர்களாக இருந்தார்கள்.

இந்த தாச பரம்பரையையும், ஸ்ரீமத்வாசார்யரே தமது ‘துவாதச ஸ்தோத்திரம்’ மூலம் தொடங்கினார் என்பார்கள். அவருக்குப் பிறகு, பல யதிகள் இதை வளர்த்தார்கள். அவர்களில் முக்கிய மானவர்கள் - ஸ்ரீநரஹரி தீர்த்தர், ஸ்ரீஸ்ரீபாதராஜ தீர்த்தர், ஸ்ரீவியாசராஜ தீர்த்தர், ஸ்ரீவாதிராஜ தீர்த்தர், ஸ்ரீவிஜயீந்திர தீர்த்தர், ஸ்ரீராகவேந்திர தீர்த்தர் போன்றோர். ஸ்ரீவியாசராஜர் காலத்திலிருந்துதான், ஸ்ரீபுரந்தரதாசர், ஸ்ரீவைகுண்டதாசர், ஸ்ரீகனகதாசர் போன்ற பல கிருஹஸ்தர்கள் இந்த மார்க்கத்தை அனுசரிக்க ஆரம்பித்தார்கள். இலட்சக்கணக்கில் கிருதிகளை இயற்றினார்கள். அதன் பிறகு வந்த ஸ்ரீவிஜயதாசர், இந்த தாச மார்க்கத்திற்கு என்று சில வழிமுறைகளையும், நெறிமுறை களையும் வகுத்துக் கொடுத்தார்.

அந்த பரம்பரை இன்றைய வரையில் நீண்டு வளர்ந்துள்ளது. 250க்கும் மேற்பட்ட தாசர்களின் படைப்புகள் இன்று நம்மி டையே நிலவி வருகின்றன. இதில் பல, பலரின் அறிவிற்கு வராமலேயே மறைமுகமாக உள்ளது. கர்நாடக தேசத்தில், இந்த சாகித்ய பிரசாரத்திற்காகவே கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில், பல சஞ்சிகைகள் வந்துள்ளன. தமிழ்நாட்டில், பல பேர் ‘தாசர் கீர்த்தனைகள்’, பஜனைப் பாடினாலும், அவற்றைப் பற்றிய தெளிவான அறிவைப் பெற, எவ்விதமான சஞ்சிகையும் இல்லாமல் இருந்தது. அடியேனின் தந்தை காலம்சென்ற

‘ஹரிதாச ரத்ன’ திரு.K.V.ரங்கராவ் அவர்கள் 1978ம் ஆண்டில், முதன்முதலில், தமிழில் ஹரிதாச பத்ததியின்படி, பஜனைப் பாடல்களை வெளியிட்டார். அதன்பிறகு, பல ஆண்டுகள் கழித்து, அடியேனும் சிலபல புத்தகங்கள் வெளியிட்டேன். ஆனால், முழுமையான அறிவைப் பெற அவை போதாது.

இந்த சமயத்தில்தான் என் நண்பர், ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாசரின் பிரசிஷ்யர், ஸ்ரீமான் ஸ்ரீசத்ய நாராயண ‘ஜகன்னாத கேசவ’ தாசர், ஒரு சஞ்சிகையை வெளியிட முன்வந்துள்ளார். என்னையும் அதில் பங்கேற்கும்படி கேட்டுக்கொண்டார். நானும் அந்த அமிர்தத்தைப் பருக ஆவலாக வந்துள்ளேன். நாம் அனைவரும் சேர்ந்து பருகுவோம். இந்த ‘பானத்திற்கு’ இன்னும் என்னென்ன சேர்க்க வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்களோ, அதையும் சேர்க்கத் தயாராக உள்ளோம்.

ஸ்ரீஹரியின் அருள் ஹரிதாசர்கள் மேல் ஆகட்டும்! ஹரிதாச விஜயம் நடக்கட்டும்!!.

இப்படிக்கு

’ஹரிதாச பாத பாம்ஸு’
க்ரோம்பேட்டை R. ஸ்ரீதரன்

31/8/2019

தொடர்

ஹரிதாச சாகித்யம்

ஹரிதாச சாகித்யத்தின் பின்னணி

ஸ்ரீமன் மத்வாசார்யர், வேதங்கள், உபநிஷத்கள், பகவத்கீதை, இதிகாசங்கள், புராணங்கள் மற்றும் பிரம்மசூத்திரங்கள் ஆகிய மூலகிரந்தங்களை ஆதாரமாகக் கொண்டு இயற்றிய 37 கிருதி களே 'சர்வமூல கிரந்தங்கள்' எனப்படுகின்றன.

ஸ்ரீமத்வரின் நான்கு சிஷ்யர்கள் ஸ்ரீபத்பனாப தீர்த்தர், ஸ்ரீநரஹரி தீர்த்தர், ஸ்ரீமாதவ தீர்த்தர் மற்றும் ஸ்ரீஅக்ஷோப்ய தீர்த்தர். ஸ்ரீபத்பனாப தீர்த்தர் அவரின் கருத்துகளை டீகா கிரந்தங்களாக விவரித்து, மூத்த டீகாகாரர் என்று அழைக்கப்படுகிறார். மேற் கண்ட நால்வரில், ஸ்ரீநரஹரி தீர்த்தரைத் தவிர, மற்ற மூவரும் தமதேயான மூல மடங்களை நிறுவினர். ஸ்ரீபத்பனாப தீர்த்தர், ஸ்ரீநரஹரி தீர்த்தருக்கும், அவர் ஸ்ரீமாதவ தீர்த்தருக்கும் அவர் ஸ்ரீஅக்ஷோப்ய தீர்த்தருக்குமாக யதி பரம்பரை வளர, இவர்களி லிருந்து பல மடங்கள் பின்னர் தோன்றின.

சென்னபட்டண தாலுகா, அப்பூரின் ஸ்ரீபுருஷோத்தம தீர்த்தரின் விருப்பத்தின் பேரில், ஸ்ரீரங்கத்தின் ஸ்வர்ணவர்ண தீர்த்தரின் சிஷ்யராகி, சன்யாச தீக்ஷையைப் பெற்று லட்சுமி நாராயண முனிகள் என்று பெயர் பெற்று ஸ்ரீரங்கத்தில் வசித்தவரே, பின் னர் ஸ்ரீஸ்ரீபாதராஜர் என்ற பெயரில் புகழ்பெற்றார்.

ஸ்ரீலட்சுமி நாராயண முனிகள் அவரது பூஜையை மிகவும் விஸ்தாரமாக செய்து முடித்து பின்னர் கன்னடத்தில் கீர்த்த னைகளை இயற்றி, அவற்றை பகவந்தனுக்கு சமர்ப்பித்து பாடி னார். இந்த வேலையானது அன்றைய காலகட்டத்திற்கு பெரிய புரட்சி என்றே சொல்லலாம். சன்யாசியானவர், காலில் கெஜ்ஜெ (சலங்கை) கட்டிக் கொண்டு, தம்பூரி மீட்டியவாறு, சேவாரூபமாக கீர்த்தனைகளை ஆடிப்பாடியவாறு இருந்தார் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. தூய்மையான இந்த ஹரி

பக்தியின் வெளிப்பாடே, கன்னட ஹரிதாச சாகித்யம் நன்கு வளர்வதற்கு முதற்படியாயிற்று எனலாம்.

’வியாச சாகித்யம்’ என்பது அனைவருக்கும் சுலபமாக கிடைக் கக்கூடியதோ / புரியக்கூடியதோ அல்ல. செல்வந்தர்கள், சாதா ரண மக்கள், பண்டிதர்கள், பாமரர்கள், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவருமே சமூகத்தின் அங்கத்தினர்களே. எல்லா காலங்க ளிலும் சமூகத்தில் பாமரர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருந்திருக்கின்றது. அவர்களுக்கும் சாஸ்திர தத்வங்கள் போய் சேரவேண்டும். தினப்படி வாழ்க்கையில் அவர்கள் அதனை பயன்படுத்தி தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண் டும்.

அச்சிடப்பட்ட புத்தகங்களோ, பயண சௌகர்யங்களோ இல் லாத அந்த காலத்தில், மக்களுக்கு, நமது புராணங்கள் என்ன சொல்கின்றன, நம் சாஸ்திரங்களின் சாரம் என்ன, நம் தினப்படி நடவடிக்கைகள் எப்படி இருக்கவேண்டும் என்னும் பல விஷய ங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்றால், அருகில் இருந்த பண்டிதர்களின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டி யிருந்தது.

கன்னட சாகித்யம் என்றாலே அது விழுப்பு என்னும் காலம் அது. கீர்த்தனை இயற்றினாலும் அதை சம்ஸ்கிருதத்திலேயே பாடவேண்டியிருந்தது. கன்னட கீர்த்தனைகளை இயற்றிப் பாடும் தைரியம் யாருக்கும் வந்திருக்கவில்லை. இத்தகைய காலகட்டத்தில், ஸ்ரீபாதராஜர், தமது சம்ஸ்தான பூஜையை முடித்தபிறகு, வைதிக பண்டிதர்கள் மூலமாக வேத பாரா யணம் செய்விப்பது போல, பாகவதர்கள் மூலமாக கன்னட கீர்த்தனைகளை இயற்றச் செய்தார். மகாபண்டிதரும் சம்ஸ்தா னாபதியுமான அவரே கன்னடத்தில் கீர்த்தனைகளை இயற்றி பாடிய அவரது செயல் சாதாரணமானதல்ல.

வைஷ்ண பக்தியை விளக்கும் வண்ணம் ஆழ்வார்கள் தமிழில் பாடிய கிருதிகள் அன்று புகழ்பெற்றிருந்தன. ராமானுஜாசா

ர்யர் அவற்றை சம்ஸ்கிருத கிரந்தங்களுக்கு இணையாக கௌரவித்தார். இதேபோல, சைவ பக்தி கிரந்தங்களும் நாயன் மார்கள் மூலமாக தமிழில் வந்திருந்தன. இவற்றைப் பார்த்து, கன்னட நாட்டிலும் கன்னட கிருதிகள் இயற்றும் வேலைகள் துவங்கின. தெலுங்கில் அன்னமாசார்யரின் கீர்த்தனைகள் பரவத் துவங்கின.

பல ஆண்டுகள் தமிழ்நாட்டிலேயே வசித்திருந்த ஸ்ரீபாதராஜர், ஆழ்வார்களின் பிரபந்தங்களில் இருந்த வைஷ்ணவ பக்தி, தமிழ் மேல் இருந்த அவர்களின் பற்று ஆகியவற்றைக் கண்டு, அதைப்போலவே தமது சரளமான மொழியான கன்னட த்தில், மத்வாசார்யரின் சித்தாந்தத்தை, சம்ஸ்கிருதத்தை அறியாத மாத்வ மதத்தை சேர்ந்தவர்களுக்கு தெரியப்படுத்தும் வேலை யைத் துவக்கினார். பண்டிதர்களிடம் மட்டுமே இருந்த தத்வ ஞானத்தை, சாதாரண பாமர மக்களுக்குக் கொண்டு போய் சேர்க்க முயன்ற ஸ்ரீபாதராஜரை, தாச சாகித்யத்தின் ஆணிவேர் / வழிகாட்டி எனலாம்.

ஹரிதாச சாகித்யம்

1. தா[3]சன மாடிகோ[1] என்ன ஸ்வாமி சாசிர நாமத வெங்கடரமண
2. தா[3]சதா[3]சர மனெய தா[3]சியர மக[3] நானு
3. தா[3]ச தா[3]ச தா[3]சர தா[3]ஸ்யவ கொடு, தோஷராஷியளிது
4. தா[3]சனாகோ, விசேஷனாகோ, ப[4]வபா[1]ஷ நீகோ[3]
5. தா[3]சனெந்தாகு[3]வேனு த[3]ரெயொளகெ நானு

ஸ்ரீஹரியை ஈசன் / தலைவன் என்று அறிந்தவர்கள் அனை வருமே அவனது தாசர்களே. தாச - என்றால் சேவகன் என்று பொருள் சொல்லலாம். தாசர்களால் இயற்றப்பட்ட சாகித்யம் அது சம்ஸ்கிருதமாகட்டும், கன்னடமாகட்டும் அது ‘தாச சாகித் யம்’ என்றே அழைக்கப்படுகிறது. கன்னடத்தில் இயற்றப்பட்ட தேவர நாமாக்கள், உகாபோக, சுளாதிகள், தாச சாகித்யம் என்று பெயர் பெற்றிருக்கின்றன. ஹரிதாசர்கள் அனைவரும்

ஸ்ரீமன்மத்வாசார்யரையே குருகள் என்று அறிந்து, மத்வரின் சித்தாந்தத்தையே தமது பிரசாரத்திற்காக பயன்படுத்தினர்.

ஸ்ரீமன் மத்வாசார்யர், த்வாதச ஸ்தோத்திரத்தை ராக தாளத்துடன் மனதிற்கு ஆனந்தமூட்டுமாறு இயற்றிப் பாடியதே தாச சாகித்யத்திற்கு அச்சாரம் எனலாம். ஸ்ரீ நரஹரி தீர்த்தர் பல கன்னட தேவர நாமாக்களை இயற்றி, அவற்றை மற்றவர்களுக்கு உபதேசம் அளித்து வந்தார். தற்போது கிடைத்துள்ள இவரது தேவர நாமாக்கள் விரல்விட்டு எண்ணும் அளவுக்கே உள்ளன.

'ஹரிதாச சாகித்யம்' - பெயரே சொல்வதைப் போல, இது ஹரிதாசர்கள் இயற்றப்பட்ட சாகித்யங்கள். பாரத, பாகவதாதி கிரந்தங்களுடன், மத்வ மதத்து தத்வங்களும் இதில் இருக்கின்றன. இந்த சாகித்யத்தில் பகவந்தனின் பற்பல ரூபங்களின் சிறப்புகள், அவற்றின் வர்ணனை, பக்தனின் அக ஆராய்ச்சி, பகவந்தனிடம் சரணாகதி அடைதல் போன்றவற்றுடன் மத்வ மதத்தின் தத்வ நிரூபணங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

பற்பல தாசர்களின் கிருதிகள் அன்றைய சமூகத்தின் நலன், வாழ்க்கைத் தத்துவங்கள் ஆகியன காணப்படுகின்றன. சமூக முன்னேற்றத்திற்கும் பாடுபட்டது தாச சாகித்யம். தாசர்களின் கிருதிகளில் வேதம், வேதாங்கங்கள், உபநிஷத்கள் சொல்லும் தத்வங்களே காணப்படுகின்றன. புராணங்களில் அங்கங்கு விவரிக்கப்பட்ட படைப்பின் கூறுகளை, தேகத்தின் ரசனையையும் இவை இரண்டின் பின்னணியில் அடங்கியிருக்கும் தத்வ ரகசியங்களையும், மிக எளிமையான வாக்கியங்களில், அனைவருக்கும் சுலபமாக புரியுமாறு ஹரிதாசர்கள் தங்கள் கிருதிகளில் விளக்கியிருக்கின்றனர்.

கடித்தால் கரும்பு, பிழிந்தால் தேன் என்பதுபோல் ஹரிதாச கீர்த்தனைகள் அனைத்தும் இனிமையானவை. அந்த பகவந்த னுக்கு அருகில் பக்தர்களைக் கொண்டு போய் சேர்ப்பவர்கள் ஹரிதாசர்கள். எதுகை மோனைக்காக அடித்து திருத்தி இயற்ற ப்பட்ட கிருதிகள் அல்ல இவை. ஹரிதாசர்களின் வாயிலிரு ந்து அனுபவ பூர்வமாக வெளிவந்த வாக்குகளே இவை. அவர் களது ஞானத்தின் வெளிப்பாடே அவர்களது கிருதிகள். ஹரி தாசர்களின் மனது ஆகாயத்தைப் போல பரந்து விரிந்ததாகும்.

பகவத்பக்தர்கள் எங்கு பாடுகின்றனரோ, அங்கு ஸ்வாமி ஸ்ரீ ஹரி விசேஷ சன்னிதானத்தினால் வசிக்கிறான். பக்தர்கள் அந்த பரமாத்மனை கொண்டாடி பாடிய கானாம்ருதங்களே 'ஹரிதாச சாகித்யம்'. வேத, உபநிஷத், 18 புராணங்கள், ராமா யண, மகாபாரத, பாகவதம் முதலானவையே ஹரிதாசர் களுக்கு ஆதாரமானவை. (தொடரும்).

****கன்னட மூலம்: திருமதி. ஜெயம்மா, பெங்களூரு**

பேச்சுப் போட்டி

நிறைய விஷயங்களை அறிந்திருப்போம்,. ஆனால், அதைப் பற்றி பேச முற்படும்போதுதான் தடுமாற்றம், இது பெரும் பாலும் அனைவருக்கும் பொருந்தும். ஆனால், நமது ஹரிதாசர் களைப் பற்றி நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டியது கட்டாயம்.

இதற்காக மாதந்தோறும் ஒரு தலைப்பில் பேச்சுப் போட்டி நடத்துவதாக திட்டமிட்டுள்ளோம். ஆண், பெண் - எந்த வயதி னரும் இதில் கலந்து கொள்ளலாம். நமது பத்திரிக்கை உறுப்பி னர்கள் அனைவரும் இந்தப் போட்டியில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் விவரங்கள் உள்ளே.

தொடர்

ஹரிதாசர்களின் வாழ்க்கை வரலாறு

ஸ்ரீகுருகோவிந்தவிட்டல தாசர்

அத்தியாயம் 1 - **தாசரின் பிறப்பும், இளமைப் பருவமும்**

ஸ்ரீகுருகோவிந்தவிட்டல தாசரின் முன்னோர்கள் வசித்த ஊர் மகாராஷ்டிரத்தை சேர்ந்த புனா நகரத்துக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூர் ஆகும். பின்பு அங்கிருந்து அவர்கள் கிளம்பி, ஆந் திர பிரதேசத்து சித்தூர் என்கிற ஊருக்கு வந்து, பின்பு அங்கி ருந்து கிளம்பி மைசூரை அடைந்தார்கள். பின்னார் மைசூரே அவர்களது சொந்த ஊர் ஆகியது.

ஸ்ரீகுருகோவிந்தவிட்டல தாசரின் வம்சத்தின் மூல புருஷரின் பெயர் ’கோடுபாள’ கோவிந்த ராயர் என்பதாகும். ’கோடுபாள’ கோவிந்த ராயர் வம்சத்தில் வந்தவர்களே ஸ்ரீரகுநாதராவ் - லட்சுமிபாய் தம்பதிகள். ஸ்ரீரகுநாதராவ் வேலை நிமித்தம் சிக்மகளூரில் வாசம் புரிந்து வந்தார். இவருக்கு ஒரே மகனாக ஸ்ரீகுருகோவிந்தவிட்டல தாசர், 1816ம் ஆண்டு ஜய நாம சம்வத் ஸரம் ஸ்ராவண பகுள த்வாதசியன்று பிறந்தார். (28-08-1894). தம் குலத்தின் மூல புருஷராகிய ’ஸ்ரீகோடுபாள’ கோவிந்த ராய ரின் நினைவாக குழந்தைக்கு ‘கோவிந்த’ என்று பெயர் வைத்த னர் பெற்றோர். இவரே நம்முடைய கதாநாயகர் பக்த மைசூர் குருகோவிந்தவிட்டல தாசர் ஆவார்.

லட்சுமிபாய் கர்ப்பிணியாக இருக்கும்போதே மகாஞானியான இபராமபுர ஸ்ரீகிருஷ்ணாச்சார் என்பவரின் மகனாகிய ஸ்ரீஓபளா சார்யர் சிக்மகளூருக்கு வந்து, லட்சுமிபாய் அவர்களை அனு கிரகித்து, ‘உனக்கு சத்புத்திரன் பிறக்கப் போகிறான்’ என்று ஆசிர்வாதம் செய்து மந்திராட்சதை கொடுத்தார். அதேபோல, அவருக்கு சத்புத்திரன் அவதரித்தே விட்டான்.

கோவிந்தன் நான்கு வயது சிறுவனாக இருக்கும்போது ‘மாரி கணிவெ’ என்ற ஊரில் வேலையில் இருந்த ரகுநாத ராயர், அம்மை நோயினால் தாக்குண்டு அகால ம்ருத்யு அடைந்தார். கணவனை இழந்த கைம்பெண்ணான லட்சுமிபாய் தம் சிறு குழந்தையை அழைத்துக்கொண்டு தம் தாய்வீடு வந்தார். பின்பு அவர் பங்காளிகள் (தாயாதிகள்) வீட்டில் சிலகாலம் இருந்து பல அல்லல்களை அனுபவித்தார். தீரவொண்ணாத் துயரங்களை அனுபவித்தார். ஆனாலும், மகனுக்காக பல்லைக் கடித்துக்கொண்டு கஷ்ட ஜீவனத்தை நடத்திவந்தார்.

‘ஹெக்கடதேவன கோடெ’ என்கிற ஊரில் தம்முடைய பெரியப்பா வீட்டில் இருக்கும்போது கோவிந்தனுக்கு உப நயனம் (பூணூல் கல்யாணம்) நடந்தேறியது. ஆனாலும் அவருடைய தாயாதிகளின் கொடூரமான சொல் அம்புகள் லட்சுமி பாயின் உடலைத் துளைத்தன. அவளுக்கு பலத்த மன சங்கடத்தை உண்டாக்கின. இந்தப் பந்துக்கள் வீட்டில் அடிமையைப் போல லட்சுமிபாய் எல்லா வேலைகளையும் செய்தார். சிறுவன் கோவிந்தனும் படிப்புடன் எல்லா வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டியதாயிற்று.

வீட்டுக்கு நீர் கொண்டு வருதல், கடைக்குப் போய் வருதல், பளுவான சாமான்களைத் தூக்கி வருதல் போன்ற வயதுக்கு மீறிய வேலைகளை செய்யவேண்டிய கட்டாயம் கோவிந்தனுக்கு ஏற்பட்டது. தாயார் லட்சுமிபாய்க்கு இவையெல்லாம் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. என்ன செய்வது? தினமும் மகனுக்கு பழைய சோறே போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப்படி இருக்கையில் ஒரு நாள் ஒரு சம்பவம் நடந்தது. அதுவே கோவிந்தனின் வாழ்க்கையில் திருப்புமுனை அல்லது படியாக இருந்தது. விதியின் விளையாட்டு விசித்திரமானது.

(தொடரும்).

**** க்ரோம்பேட்டை R. ஸ்ரீதரன்**

தொடர்

ஹரிதாசர்களின் சிந்தனை முத்துக்கள்

சுரர்கள் நட்பு கிடைக்கட்டும்

ஶ்ரீபதியு நமகெ ஸம்பத^{3}வீயலி வா
ணி பதியு நமகெ தீ^{3}ர்க்கா^{4}யு கொட^{3}லி ||ப||

சுரரக^{3}ணவனு பொரெயெ விஷவ கண்ட^{2}த^{3}லிட்ட
ஹர நித்ய நமகெ சஹாயகவாக^{3}லி
நரரொளுண்ணதவாத நித்யபோ^{4}கங்களனு
புருஹூத பூர்ண மாடிஸலி நமகெ ||1||

வினுதசித்தி ப்ரத^{3}னு விக்^{4}னேஷ த^{3}யதி^{3}ந்த
நெனெத கார்யகளெல்ல நெரவேரிஸலி
தினதினதி ஆஸ்வினிக^{3}ளாபத்துகள களெது
மனகெ ஹருஷவனித்து மன்னிஸலி பிட^{3}தெ^{3} ||2||

நிருத சுக்ஞானவன்னு ஈவ மத்வராய
குருகளாஷீர்வாத நமகாகலி
புரந்தரவிட்டலன கருணதிந்தலி சகல
சுரரொலுமெ நமகெ சுஸ்திரவாகலி ||3||

இந்த கிருதியில் மத்வ மதத்தின் முக்கிய தத்வமான தேவதா தாரதம்யத்தை விளக்கியிருக்கிறார் தாசர். அவரோஹண கிரமத்தைப் பின்பற்றி, ஆசார்ய மத்வரை குருவாக நிறுத்தி, பிறகு தாரதம்யத்தில் வரும் அனைத்து தேவதைகளின் அருளையும் வேண்டுகிறார். தினமும் பாராயணம் செய்வதற்கு ஏற்றவாறு இருக்கும் இந்தப் பாடல், சஜ்ஜனர்களுக்கு தாசர் செய்த மிகப் பெரிய உதவியாகும். பகவந்தனிடம் துவங்கி அனைவரின் கருணையும் நமக்கு இருக்கவேண்டும் என்று நினைப்போம்.

****கன்னட மூலம்: திரு.ஏ.பி.ஷாமாச்சார், பெங்களூரு**

தொடர்

கேசவ நாமா

ஷரணு ஷரணு - ஸ்ரீவியாசராஜர்

ஸ்ரீஹரியின் ரூபங்கள் / அவதாரங்கள் எவ்வளவு? 1? 2? 10? 24? 51? 100? 1000?. அவற்றை எண்ணி முடிப்பதற்கு சாத்தியமே யில்லை. அந்த ரூபங்களை நான் எண்ணிக் காட்டுகிறேன் என்று யாராவது கிளம்பினால், கடலில் இருக்கும் நீர்த்துளி களை எண்ணி முடிக்கிறேன் என்று கிளம்புவதைப் போலவே இருக்கும்.

வழிபாட்டிற்கு வசதியாக ஸ்ரீஹரியின் ரூபங்களை நாம் தசா வதாரங்கள், கேசவாதி 24 ரூபங்கள், அஜாதி 51 ரூபங்கள் என வகைப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்த வகை / ரூபங்க ளைப் பற்றி, அவற்றின் சிறப்புகளைப் பற்றி அனைத்து வேத இதிகாச கிரந்தங்களில் சொல்லியிருப்பதைப் போல, கன்னட ஹரிதாசர்களும் நிறைய பாடியிருக்கின்றனர்.

இந்தத் தொடரில் நாம் பார்க்கப்போவது கேசவாதி 24 நாமங் களைப் பற்றி ஹரிதாசர்கள் பாடிய பாடல்களை மட்டுமே. கேசவாதி 24 நாமங்கள் என நாம் சொல்வது - கேசவ, நாரா யண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுசூதன, த்ரிவிக்ரம, வா மன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேச, பத்பனாப, தாமோதர, சங்கர்ஷண, வாசுதேவ, பிரத்யும்ன, அனிருத்த, புருஷோத்தம, அதோக்ஷஜ, நரசிம்ம, அச்யுத, ஜனார்த்தன, உபேந்திர, ஹரி, ஸ்ரீகிருஷ்ணா - இந்த ரூபங்களையே. இந்த ரூபங்களைப் பற்றி பாடும் பாடல் களையே ‘கேசவ நாமா’ என்கிறோம்.

பொதுவாக அனைவருக்கும் தெரிந்த கேசவ நாமாவான கனக தாசரின் பாடலின் முதல் வரி ‘ஈச நின்ன சரண பஜனெ ஆசெ யிந்த மாடுவேனு தோஷராஷி நாஷமாடோ ஸ்ரீஷ கேசவ’ என்பது. ’கேசவனே, ஈசனே, உன் தாசனாகிய நான் உன் பாத கமலங்களைப் பற்றி மிகுந்த ஆசையுடன் பாடுவேன், என்

வினைப்பயன்களால் வரும் துன்பங்களை அகற்றுவாயாக' என்று சொல்கிறார் கனகதாசர். இப்படியாக, ஒவ்வொரு ஹரி தாசர்களும், ஒவ்வொரு கேசவ நாமங்களை, அந்தந்த ஹரி ரூபங்களை வணங்குவதால் என்ன பயன் / பலன் கிடைக்கும் என்பதையும் தங்கள் பாடல்களில் விளக்கியிருக்கிறார்கள்.

ஸ்ரீவியாசராஜர், ஸ்ரீவாதிராஜர் முதலான யதிகளும், பின்னர் வந்த ஹரிதாசர்களில் பலரும் இந்த கேசவ நாமங்களைப் பற்றி கீர்த்தனைகள், சுளாதிகள், உகாபோகங்கள் ஆகியவற்றை இயற்றியிருக்கின்றனர். இந்தத் தொடரில் அவ்வாறான சுமார் 48 கேசவ நாம கீர்த்தனைகளை, அதன் அர்த்தங்களோடு பார்க்கப் போகிறோம். ஹரிபக்தர்கள் இந்த அனைத்து கேசவ நாமங்களையும் பொருளோடு புரிந்து படித்து, கேசவாதி 24 ரூபங்களின் அருளைப் பெறவேண்டும் என்று அந்த ஸ்ரீஹரி யை வணங்குகிறோம்.

<u>1. ஷரணு ஷரணு - இயற்றியவர்: ஸ்ரீவியாஸராஜர்</u>

ஷரணு ஷரணு ||ப||

ஷரணு மத்ஸ்ய கூர்ம வராஹ
நரஹரி வாமன பா4ர்கவ
ஷரணு ராக4வ கிருஷ்ண புத்தனெ
ஷரணு கல்கி ரூபனே ||1||

நம்பிதெ நா நின்ன கேசவ
நம்பிதெ நாராயண மாதவ
அம்புஜாக்ஷ கோவிந்த விஷ்ணு
சம்ப்ரமதி மதுசூதன ||2||

கருணதலி ரக்ஷிஸு த்ரிவிக்ரம

வரத வாமன ஶ்ரீதர
பரமபாவன ஹ்ருஷிகேஷனெ
வரபத்மனாப தாமோதர ||3||

வாஸவார்ஜித சங்கருஷண
வாசுதேவ ப்ரத்யும்னனெ
ஶ்ரீஷ அனிருத்த புருஷோத்தம
நீ ஸலஹுவுத தோக்ஷஜ ||4||

ஸ்ருதிக[3]கோ[3]சர நாரசிம்ஹ
ச்யுத ஜனார்த்தனு பேந்த்ரனே
சதுரவிம்ஷதி நாமதல்லிஹ
சதுர ஹரி ஶ்ரீகிருஷ்ணனே ||5||

'ஷரணு' என்றால் காப்பாற்றுபவன், காப்பாற்றுவதற்கு தகுதி உள்ளவன் என்று பொருள். 'ஷரணாகத' என்றால் தோல்வியை ஒப்புக்கொண்டு, தஞ்சம் தேடி, அடைக்கலம் போகிறவர் என்று பொருள்.

'ஷரணு' என்பதற்கு வந்தனம் என்று கொண்டால், அது நவ வித பக்தியில் வரும் வந்தனம் என்று பொருள் வருகிறது. தாஸ்யபாவம் வேண்டும் என்பது ஶ்ரீவியாசராயரின் அபிப்பி ராயம். 'ஏசு காயங்கள களெது எம்பத்து நால்கு லக்ஷ ஜீவ ராஷியன்னு தாடி பந்த ஈ ஷரீர' என்கிறார் கனகதாசர். பற்பல பிறவிகளில் நாம் செய்த பல செயல்களைக் கடந்து, இறுதி யாக முக்திக்கு சாதனை செய்யக்கூடிய மனிதப்பிறவியை எடுத்திருக்கிறோம். இத்தகைய சாதன-சரீரத்தை கொடுத்த வரான ஶ்ரீஹரிக்கு நாம் எப்போதும் நன்றியுடன் சரணாகதராக இருக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

1. ஶ்ரீஹரியின் தசாவதாரங்களான மத்ஸ்ய, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, கிருஷ்ண, புத்த, கல்கி ரூபங்

களின் ஐக்கிய சிந்தனையை செய்து அவரை வணங்க வேண்டும்.

2. பிரம்ம-ருத்ராதிகளின் தலைவனான கேசவ, தோஷங்களை போக்குபவரான நாராயண, லட்சுமிபதியான மாதவ, தாமரைக் கண்களையுடைய கோவிந்த, மது தைத்யனைக் கொன்ற விஷ்ணு மதுசூதனனே, உன்னை நன்றாக அறிந்து, நம்புகிறேன்.

3. த்ரிவிக்ரமனாக வளர்ந்த வாமனான நீ, ஸ்ரீதர மிகவும் பவித்ரமான ஹ்ருஷிகேசன், பத்பனாப, தாமோதரனான நீ, என்னை கருணையுடன் காப்பாற்று.

4. இந்திரனால் வணங்கப்படும் சங்கர்ஷணன், மோட்சத்தைக் கொடுக்கக்கூடிய வாசுதேவன், பலசாலியான பிரத்யும்னன், ஸ்ரீதேவிக்கு தலைவனான அனிருத்த, அனைவரிலும் உத்தம மான புருஷோத்தமா, நித்யமுக்தனான அதோக்ஷஜ, என் னைக் காப்பாற்று.

5. வேத வாக்கியங்களுக்கே சிக்காத நரசிம்ம, அழிவில்லாத அச்யுத, துர்ஜனர்களின் எதிரி ஜனார்த்தன, உபேந்திர, 24 தத்வ ங்களுக்கு ஆதாரபூதனான 24 நாமங்களுடைய ஸ்ரீகிருஷ்ணனே, உன்னை சரணடைகிறேன் என்கிறார்.

பிரம்மாண்டம் மற்றும் பிண்டாண்டத்தில் இருக்கும் 24 ரூப ங்களின் ஐக்கிய சிந்தனை, தசாவதார ரூபங்களுக்கும் கேச வாதி ரூபங்களுக்கும் அபேத சிந்தனை (இரண்டும் ஒன்றே என்று அறிவது) செய்யவேண்டும் என்று கூறுகிறார் ஸ்ரீவியாச ராயர். (தொடரும்).

****கன்னட மூலம்: திருமதி. ஜெயம்மா, பெங்களூரு**

போட்டி

மாதாந்திர குறும்போட்டி

யதி-த்ரயர்கள்

* கீழ்க்கண்ட 10 கேள்விகளுக்கான விடைகளை எங்களுக்கு வாட்சப் அல்லது ஈமெயில் மூலமாக தெரியப்படுத்தவும்.
* தேர்ந்தெடுக்கப்படும் இருவருக்கு புத்தகப் பரிசு வழங்கப்படும்.
* விடைகள் வந்து சேர கடைசி தேதி: நவம்பர் 1.

1. ஸ்ரீபாதராஜரின் ஏதேனும் மூன்று கன்னட கிருதிகளின் பெயர்களைக் கூறவும்.
2. ஸ்ரீபாதராஜரின் வித்யா சிஷ்யரின் பெயர்?
3. தன் பிருந்தாவனத்திற்காக முளபாகிலுவை ஸ்ரீபாதராஜர் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன?
4. ஸ்ரீவியாசராஜரின் மூன்று சம்ஸ்கிருத கிரந்தங்களின் பெயர்களைக் கூறவும்.
5. ஸ்ரீவியாசராஜர் முக்யபிராண தேவரின் சிலைகளை நிறுவக் காரணம் என்ன?
6. ஸ்ரீவியாசராஜரின் முந்தைய அவதாரங்களாக் கருதப்படுபவை எவை?
7. ஸ்ரீவியாசராஜரின் உபாசனா மூர்த்தி எது?
8. ஸ்ரீவாதிராஜரின் ஏதேனும் மூன்று கன்னட கிருதிகளின் பெயர்களைக் கூறவும்.
9. ஸ்ரீவாதிராஜரின் ஏதேனும் மூன்று சம்ஸ்கிருத கிரந்தங்களின் பெயர்களைக் கூறவும்.
10. ஸ்ரீவாதிராஜர் பிருந்தாவனத்தில் எவ்வளவு பிருந்தாவனங்கள் உள்ளன?

ஹரிதாச விஜயத்தைப் பற்றி தயவு செய்து உங்கள் நண்பர் / உறவினர்களிடம் அறிமுகம் செய்யவும்.

தொடர்

ஹரிதாசர்களின் புதிர் கவிதைகள்

முன்னுரை

ஹரிதாசர்களின் படைப்புகளின் ஒன்றான 'முண்டி3கெ3' என்பதைப் பற்றிதான் இந்தத் தொடரில் பார்க்கப் போகிறோம். ஹரிதாச சாகித்யத்தில் 'முண்டிகெ' பதம் என்பது ஒரு வகை. அதை 'புதிர்க்கவிதை' என்றும் தோராயமாக கூறலாம். ஒரு பொருளை நேரடியாகக் கூறாமல், மறைமுகமாக சில சங்கேதங்கள் மூலம் கூறும் முறையே 'முண்டிகெ' ஆகும். இதற்கு நிறைய அறிவுத் திறமையும், புராண ஞானமும், சாதுர் யமும் தேவை. தாசர்கள் ஏன் அந்த உத்தியை உபயோகி த்தார்கள் என்றால் 'பரோக்ஷோ ப்ரியோ ஹி தே3வா: ப்ரத்ய க்ஷ த்3விஷா:' என்கிற வேத வாக்கியத்தை அனுசரித்தே. அதன் பொருள் : 'தேவதைகள் மறைமுகமாக துதிப்பதையே விரும்புகிறார்கள். நேரிடையாகக் கூறுவதையல்ல'. எப்படி கற் புள்ள மனைவி, தன் கணவனுடைய பெயரை நேரிடையாகக் கூறாமல், மறைமுகமாகக் கூறுவாளோ, அது போல.

எடுத்துக்காட்டாக, கணவரின் பெயர் 'நாகராஜன்' என்று இருந்தால், 'அரவரசன்' என்று மனைவி விளிம்புவாள். அது போல, ஒரு யுக்தியை தாசர்கள் சில கிருதிகளில் கையாண்டு உள்ளார்கள். பண்டிதர்களுக்கு அந்த கிருதிகள் சவாலாக அமையும். மண்டைக்கு (மூளைக்கு) வேலை கொடுப்பதால் அவற்றிற்கு 'முண்டிகெ' என்று பெயர் வந்ததாகக் கூறுவார்கள். ஆங்கிலத்தில் இதை Quiz அல்லது Puzzle என்று அழைக்கலாம். முண்டிகையை 'ஒகடு' என்றும் 'ஹளெகன்னட' என்றும் சிலர் கூறுவார்கள்.

எல்லா ஹரிதாசர்களும் இந்த முண்டிகெயை தங்கள் படைப்பு களில் படைத்துள்ளார்கள். ஆனால், இதை ஸ்ரீபுரந்தரதாசரும், ஸ்ரீகனகதாசரும் மிகவும் அதிகமாக கையாண்டு உள்ளார்கள்.

ஸ்ரீகனகதாசரின் முண்டிகைகள் மிகவும் பிரசித்தம். அந்தக் காலத்தில் இருந்த பண்டிதர்களுக்கு அவர் சிம்ம சொப்பன மாகவே விளங்கினார். 'கனகன கெணகப் பேடா, கெனகி திணு கப் பேடா' (கனகதாசரை கிளற வேண்டாம். கிளரி திண்டாட வேண்டாம்) என்று ஒரு வழக்கு மொழியே உண்டு. ஸ்ரீகனக தாசரின் பல புதிர் கவிதைகளுக்கு இன்றளவுகூட பதில் கிடைக்கவில்லை. அவ்வளவு இரகசிய விஷயங்கள் அதில் பொதிந்துள்ளன.

அந்த புதிர் கவிதைகளில் சிலவற்றை இந்த தொடரில் பார்க்க லாம். என் அறிவிற்கு தோன்றிய பொருட்களை மட்டும் கூறி யுள்ளேன். அவைகளையே முடிவானது என்று கருதக்கூடாது. அவற்றில் இன்னும் பல பொருட்கள் இரகசியமாகப் பொதிந்து இருக்கின்றன. அவை வெட்ட வெட்ட வற்றாத தங்க சுரங்க ங்களைப் போன்றதாகும். 'யதா மதி'தான் நம்மால் கூற முடியும்.

முதலில் தாசர்களின் கிருதிகள் மூலம் (கன்னட மொழி) தமிழில் கொடுத்திருக்கிறேன். அடுத்து, அதன் மேலோட்டப் பொருள் மட்டும் கொடுத்துவிட்டு, அதற்கு அடுத்து, விளக்க மான பொருள், இரகசிய அர்த்தங்கள் என எனக்குத் தெரிந்த வற்றை சொல்கிறேன். அடுத்த இதழிலிருந்து ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். (தொடரும்). **க்ரோம்பேட்டை R. ஸ்ரீதரன்

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ் இதுவரை வெளியிட்டுள்ள 24 தமிழ்ப் புத்தகங்களில் (+ Vedhanidhi appல்) உள்ள மொத்த சொற்கள் : **<u>6,96,485</u>**. அனைத்து புத்தகங்களும் amazon.in தளத்தில் உள்ளன. 'Tamil Haridasa' அல்லது 'சத்ய நாராயணன்' என்று தேடி னால் கிடைக்கும். Kindle Unlimited கணக்கு வைத்திருப்பவர்கள், அனைத்து புத்தகங்களையும் இலவசமாகவே படிக்கலாம். இதைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.

தொடர்

ஹரிகதாம்ருதசாரக் கட்டுரைகள்

ஜகன்னாத்தாசர்

கன்னட சாகித்யத்தின் 1500 நீண்ட ஆண்டு வரலாற்றில், ஹரி தாச சாகித்யத்தின் பங்கு அளப்பரியது. சுமார் 100க்கும் மேற் பட்ட ஹரிதாசர்கள், பாடல்கள் மூலமாக பக்தியை பரப்பியிரு க்கின்றனர். இவர்கள் பாடிய பாடல்கள் இன்று வரைக்கும் பக்தியை பரப்பிக்கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அதனுடன் மத்வ சாஸ்திரத்தையும் (தத்வவாத) கன்னடத்தில் மொழி பெயர்த்து வழங்கி வந்துள்ளது ஒரு சிறந்த செயலாகும்.

கர்னாடக சங்கீதத்திற்கு ஹரிதாசர்களின் பாடல்களின் பங்கு மகத்தானது. அசாதாரணமானது. தாசர்களின் பரம்பரை பெரும் பாலும் ஆவணப்படுத்தப்படவில்லை. அவர்களின் பாடல்கள் பொதுவாக வாய்வழியாகவே பரப்பப்பட்டு வந்தன. தலை முறை தலைமுறையாக கற்பிக்கப்பட்டு வந்துள்ளது.

தா^{3}ஸவர்யம் த^{3}யாயுக்த^{1}ம் து^{3}ரீக்^{1}ருத^{1} து^{3}ராஷிஷம் |
ஹரிகதாம்ருதவக்தா^{1}ரம் ஜகன்னாத^{1}ம் கு^{3}ரும்ப^{4}ஜே ||
ஜலஜேஷ்ட நிபா^{4}கா^{1}ரம் ஜக^{3}தீ^{3}ஷ ப^{1}தா^{3}ஷ்ரயம் |
ஜக^{3}தீ^{3}த^{1}ல விக்2யாத^{1}ம் ஜகன்னாத^{1} கு3ரும்ப^{4}ஜே ||

மத்வமத சித்தாந்தங்களை கன்னடத்தில் மொழிபெயர்த்தவர் களில் மிகச் சிறந்தவர் ஜகன்னாததாசர், அவற்றை மிகச் சரள மான மொழியில் நமக்குக் கொடுத்தவர், அப்படிச் செய்ததில் பெரும் வெற்றி கண்டவர்களில், இவரது கீர்த்தி மிகப் பெரி யது.

ஸ்ரீபாதராஜரிடமிருந்து பிறந்து வளர்ந்த ஹரிதாச சாகித்யம், வேகமெடுத்து புகழடைந்தது புரந்தரதாசர் காலத்தில். பிறகு சிறிது தேக்கம். மறுபடி விஜயதாசர் காலத்தில் ஓடத் துவங்கி.

ஜகன்னாததாசர் மூலமாக பெரும் உச்சிக்குச் சென்றது. புரந்தரர் காலத்தில் காவிய ரூபத்தில் திகழ்ந்த கீர்த்தனைகள் பின்னர் சாஸ்திரங்களின் மொழிபெயர்ப்பாக மாறியது.

சிகலபரவியில் விஜயதாசர், உத்தனூரில் கோபாலதாசர், கல் லூரில் சுப்பண்ணதாசர், அதவானியில் திவான் தம்மண்ண தாசர், வேணிசோமபுரத்தில் வியாஸதத்வக்ஞர் ஆகியோர் அப ரோக்ஷ ஞானிகளாகி, பெரும் கௌரவம் / மரியாதையைப் பெற்று, பெரும் புகழுடன் திகழ்ந்த பொற்காலம். தாச சதுஷ்ட யர்களில் புரந்தரதாசர், விஜயதாசர், கோபாலதாசருடன் நான் காமவராக இருப்பவர் ஜகன்னாததாசர்.

லிங்கசூரின் பிராணேஷதாசர் (பிராணேசவிட்டலா), கர்ஜகி தாசப்பா (ஸ்ரீதவிட்டலா), ஹுண்டேகாரதாசர் (ஸ்ரீசவிட்டலா), மானாமதுரேதாசர் (வெங்கடேசவிட்டலா), சிக்கோடி ஆசார்யரு (சிரிவத்ஸ அங்கிதத்தைப் பெற்றவர்) என ஜகன்னாததாசருக்கு 27 பேர் சிஷ்யர்களாக இருந்தனர்.

இவரைப் பற்றிய அதிக தகவல்கள் இவரின் சிஷ்யர்களின் பாடல்கள் / புத்தகங்களிலிருந்து கிடைக்கின்றன. தொட்ட பெல்லாபுரத்துக் கவி ராகவேந்திர தாசர் சொல்லியதைப் போல, ஜகன்னாததாசர் தம் தந்தை நரசிம்மதாசரை இரு பாடல்களில் புகழ்ந்து பாடியுள்ளார். தாய், தாத்தா அவர்களின் பெயர்களையும் சொல்லியிருக்கிறார்.

புரந்தரதாசரிடமிருந்து கனவில் அங்கிதம் பெற்று, நரசிம்ம தாசர் (ஜகன்னாததாசரின் தந்தை) என்று புகழ்பெற்றார். ஹரி பக்தியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர், சங்கீதத்தில் விற்பன்னர், ஸ்ரீராகவேந்திர மடத்தின் ஸ்ரீசுமதீந்திர தீர்த்தரிடம் (இவர் கந்தர்வ அம்சம் கொண்டவர் எனக் கருதப்படுகிறது) பாடம் படித்தவர். 50 ஆண்டுகள் இடைவிடாமல் திருப்பதி யாத்திரையைச் செய்தவர். சாத்விக நடையைக் கொண்ட வரான இவருக்கு, ஸ்வாமிகள், கருடவாகன ஸ்ரீலட்சுமி

நரசிம்ம பிரதிமையை அருளினார். அவருக்குக் கிடைத்த மரியாதை, படித்த அறிஞர்களின் புகழ்மாலைகள் ஆகியவை ஜகன்னாததாசரின் பாடல்களிலிருந்து தெரிகின்றது. ராய்ச்சூர், மான்வி தாலுகா, ப்யாகவாட கிராமம், ஹரிபக்தரான தந்தை நரசிம்மாச்சார், தாய் லட்சுமிபாய் 1659ல் கீலக நாம சம்வத் ஸரம் சிராவண மாதம் திவிதியை (கிபி 1728 ஜூலை 27ம் தேதி) அன்று ஜகன்னாததாசர் பிறந்தார். இயற்பெயர் ஸ்ரீ னிவாசன். ஹரிமயம் நிறைந்த சூழலில் வளர்ந்தார். வரதேந்திர தீர்த்தரிடம் வேதாந்தம், வியாகரணம், தர்க்கம், மீமாம்சம் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார்.

அனைத்து சாஸ்திரங்களையும் கற்றவர், சாஸ்திரங்கள் சொல் வதை பின்பற்றுபவர், பரம வைஷ்ணவர், தேவையற்ற அரட்டைகளை விட்டவர், எப்போதும் ஹரிதியானத்தில் இருப்பவர் என்று ஜனார்த்தன விட்டலர் கூறுகிறார். தாசரின் கல்வியறிவு, பாண்டித்யம் மிகவும் அசாதாரணமானது. வியாச ராஜர், ராகவேந்திரர் ஆகியோர் மரியாதை பெற்ற சபைகளில் இவரும் நற்பெயர் பெற்று ராஜமரியாதையைப் பெற்றார். பல விருதுகளையும் பெற்றார்.

சாஸ்திர மீமாம்சங்களை எந்நேரமும் படித்துக் கொண்டே யிருந்து அதன்மூலம் மிகப்பெரிய பண்டிதர் ஆனார். யஜு சாகா, விஸ்வாமித்ர கோத்திரத்தில் ராமாசார்யரின் மகளான தாமரசம்மா என்பவருடன் மணம் புரிந்தார். தாமோதர தாசர், திம்மண்ண தாசர் என்று இரு மகன்கள். அவரது வீடே குரு குலமாக இருந்தது. பற்பல சிஷ்யர்களுக்கு சாப்பாடு, தங்கும் இடம் என அனைத்து வசதிகளுடன் கல்வி புகட்டலைச் செய்த சிறந்த குலத்தவர். எவ்வளவோ விருதுகளைப் பெற்று என்ன பயன்? ஒரு சிறிய பொய் சொன்னதில், க்ஷயரோகம் (வயிற்றுவலி) துவங்கியது. ஸ்ரீஹரியிடம், ஜீவோத்தமரிடம் முறையிட்டார். பின் விஜயதாசரிடம் சரணடைந்தார். தன்

வலியைத் தீர்க்குமாறு வேண்டினார். உத்தனூரில் கோபால தாசரிடம் போகுமாறு உத்தரவு கிடைத்தது. அங்கு அவருக்கு பிரச்னைக்கான தீர்வும் கிடைத்தது.

கணபதியின் அம்சம் என்று கருதப்படும் கோபாலதாசர், மிக வும் இளகிய மனதுடன் இரண்டு சோளரொட்டியை தன்வந்திரி மந்திரத்தால் ஜெபித்து பிரசாதமாகக் கொடுத்தார். ‘என்ன பின் னப கேளோ தன்வந்திரி தயமாடோ’ என்று தன்வந்திரியிடம் வேண்டினார். ‘சன்னவனு இவ கேவல, பன்ன படிசுவ ரோகவன்னு மோசன மாடி சென்னாகி பாலிசுவரோ, கருணி. ஆதரிஸி இவகெ தவபாத தியாவனித்து சாதுகளொளகிட்டு மோத கொடு சர்வதா’ என்று வேண்டினார். அவரது 40வது வயதில் வந்த அப-ம்ருத்யுவைப் (தீராத வயிற்றுவலியை) போக்கி, தனது ஆயுளிலிருந்து 40 ஆண்டுகள் & 10 நாட்களை தானம் செய்த மகானுபாவர், கோபாலதாசர். ‘அபம்ருத்யு வன்னுதரிதெ’ என்று விஜய தாசரைக் கொண்டாடுகிறார். ‘ரதுன தொரகிதல்லா எனகொந்து ரதுன தொரகிதல்லா, என்ன ஜென்ம பவித்ரவாயிது’. குருவின் கருணையைப் பெற்று இவர் ஜகன்னாததாசர் ஆனதற்கு இந்த சம்பவமே காரணம். பண்டரிபுரத்தில் சந்திரபாகா நதியில் குளிக்குமாறு ஆணை வந்தது. அப்படி குளிக்கும்போது, வந்த ஒரு கட்டையில் தேவ நாகரி எழுத்தில் ஜகன்னாதவிட்டலா என்று எழுதியிருந்தது. அதையே தனது அங்கிதமாக ஏற்று உடனே ‘விட்டலய்யா விட்டலய்யா தடிகோடி நிபகாய ஜகன்னாத விட்டலய்யா’ என்றவாறு பாடி ஆடினார்.

சாட்சாத் ஜகன்னாதவிட்டலனிடமிருந்தே அங்கிதத்தைப் பெற்று, அந்த விட்டலனை நகத்திலிருந்து துவங்கி முழுவது மாக அற்புதமாக வர்ணித்து பாடல்களைப் பாடினார். ‘அபரோக் ஷானுபூதி’யைக் (அவருள் நிலைத்திருக்கும் பிம்பரூபி பரமா த்மா) குறித்து பாடல்கள் பற்பல மழைபோல வரத்துவங்கின. பிறகு ஸ்ரீனிவாசாச்சார் 80 ஆண்டு கால முழு வாழ்க்கையை வாழ்ந்தார். 81 ஆண்டுகள் மற்றும் 10 நாட்கள் ஆயிற்று. பிறகு

இறைவனடி சேர்ந்தார். ஸ்ரீதவிட்டலரின் பாடலே இதற்கு சாட்சி.

'சிரிபதிய ஸ்மரிஸி ஹரிபுரகெ ஹருஷதலி ஹரிஹர நவமி யந்து ஹரியெ பரனெந்தெனுதலி' என்று வர்ணிக்கிறார். மூலா நட்சத்திரம், பாத்ரபத சுத்த நவமி, ஞாயிற்றுக் கிழமையன்று ஜகன்னாததாசர் இறைவனடி சேர்ந்தார் என்று அபினவ ஜனார்த்தன விட்டலர் சொல்கிறார். இன்றும் அவர் வீட்டில் இருக்கும் கம்பத்தில் (தூணில்) நிலைத்திருந்து, தன் பக்தர்கள் அனைவருக்கும் அருள் பாலிக்கிறார் என்பது அனைவரின் நம்பிக்கை.

தாசரின் வீடு இன்றும் கோயிலாக இருக்கிறது. அவரது வம்ச த்தினர் அங்கேயே இன்னும் இருக்கின்றனர். தாசர் பூஜித்து வந்த சாலிக்கிராமம், துளசி பிருந்தாவனம், அவர் பயன் படுத்திய பாதுகை ஆகியவை இன்றும் உள்ளன. வரதா நதி தீரத்தில் இருக்கும் ஹொஸரித்தியில் ஹரிகதாம்ருதசார த்தை எழுதி முடித்தார் என்று சொல்கின்றனர்.

ராணி லட்சுமம்மா இவரை கௌரவப்படுத்தி பல்லக்கு ஒன்றைக் கொடுத்தார். அது இன்றும் இருக்கிறது. ஷிவமொ க்கா கும்ஸி தாசர் கொடுத்த கோர்க்கல்லு (தாசரு கட்டே) இன்றும் பூஜிக்கப்பட்டு வருகிறது. அவர் அங்கு தங்கிய இடம் / வீடு இன்றும் இருக்கிறது. தொட்டபெல்லாபுரத்தில் அவ்வப் போது வந்து போய்க்கொண்டிருந்த கிருஷ்ணராயரின் வீட்டில், முத்துமோகனவிட்டலா என்ற பாண்டுரங்கனை நிறுவி யிருக்கிறார்கள். (தொடரும்)

கன்னட மூலம்: ககவரத்வஜ விட்டலதாசர், பெங்களூரு

ஹரிதாச சாகித்யத்தைப் பற்றி ஏதேனும் கேள்விகள் / சந்தேகங்கள் இருந்தால் தெரியப்படுத்தவும். தகுந்த பதில்களைத் தர முயல்வோம்.

ஆராதனை

ஹரிதாசர்களின் புண்ணிய தினங்கள்
ஆஸ்விஜ & கார்த்திக மாதங்களில்

* ஆஸ்விஜ சுத்த சப்தமி - ஸ்ரீபிராணேஷ தாசர் - லிங்கசுகூர்
* ஆஸ்விஜ பகுள ப்ரதமை - ஸ்ரீகுருஜகன்னாத தாசர் - கௌதலம், ராய்ச்சூர்
* கார்த்திக சுத்த தசமி - ஸ்ரீவிஜயதாசர் - சிப்பகிரி / சிக்கலபரவி
* கார்த்திக பகுள சதுர்தசி - ஸ்ரீமுத்துமோகனதாசர் - தொட்டபல்லாபுர
* கார்த்திக அமாவாசை - ஸ்ரீமஹிபதி தாசர் - காகிண்டிகி

ஹரிதாச விஜயம்
சந்தா விவரம் (36 பக்கங்கள்)

1 ஆண்டுக்கு ரூ.200/- 3 ஆண்டுகளுக்கு ரூ.500/-

5 ஆண்டுகளுக்கு ரூ.900/- 10 ஆண்டுகளுக்கு ரூ.1700/-

வங்கியில் சந்தா செலுத்தினால், அதன் விவரத்துடன், உங்கள் முகவரியை, மின்னஞ்சல் செய்யவும்

வங்கி விபரம்:

Sathya Narayanan

ICICI Bank - Savings account

A/c. No. 000101043177. IFSC: ICIC0000001

Cenotaph Road Branch, Chennai 18

ஹரிதாச விஜயம் சந்தா செலுத்துபவர்களுக்கு ஒரு புத்தகம் இலவசமாக அனுப்புகிறோம். இப்புத்தகம் கிடைக்காதவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்

மனப்பாடப் பகுதி

பகவந்தனின் ரூபங்கள்

* இந்தப் பகுதியில் வரும் விஷயங்களை அனைத்து ஹரி பக்தர்களும் கண்டிப்பாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

* இதற்கான விளக்கங்கள் / ஆதாரங்கள் வேறு பகுதியில் வந்தாலும், இங்கு இவை சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளன.

* சாலிகிராம பூஜையின்போது /பிற சமயங்களிலும்கூட, இந்த பொருட்களில் இவ்வளவு ஸ்ரீஹரியின் ரூபங்கள் இருக்கின்றன என்று நினைத்து அவரை வணங்க வேண்டும்.

சாலிகிராமம்	5535 ரூபங்கள்
பிரதிமைகள் / கடவுளர் சிலைகள்	513
பூஜையில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் (பாத்திரங்கள்)	52114
தண்ணீர்	24
ஒவ்வொரு துளசி இதழிலும்	5317
பூக்களில்	161
விளக்குகளில்	13
சந்தனம்	403
பால்	354
நெய்	21
வெல்லம்	5101
பழங்களில்	2825

** ஆதாரம் : ஹரிகதாம்ருதசாரம்

இந்த இதழைப் பற்றிய தங்களது மேலான கருத்துகளை வாட்சப், SMS, மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தொலைபேசியில் அழைத்தோ கட்டாயம் சொல்லுங்கள்.

தொடர்

பகவத்கீதை

கீதா சாரம் - ஸ்ரீவியாசராஜர்

ஆசார்யரின் பிரம்மசூத்ர பிரஸ்தானத்திற்கு வியாசராஜர் இயற்றிக் கொடுத்த பரிசு - தாத்பர்ய சந்திரிகா. அதேபோல, கீதா பிரஸ்தானத்திற்கு கீதாசாரம் - 18 நுடிகளைக் கொண்ட ஒரு சிறிய கிருதி. கிருஷ்ண கீதையின் 700 ஸ்லோகங்கள் இருந்தால், கீதா சாரத்தில் ஒன்பது ஸ்லோகம், ஒன்பது நுடி மற்றும் ஒரு பல்லவி அவ்வளவே. ஹரிதாச சாகித்யத்தில் ஒன்றான வ்ருத்த நாமாவில், கீதோபதேசத்தை கன்னடத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறார் ஸ்ரீவியாசராஜர்.

கேளய்யா என மாது பார்த்த[2]னே, கீததர்த்த[2]னே (ப)

சொல்வதே கேட்பதற்காகத்தான் என்றால், ஒவ்வொரு நுடியிலும் சொல்லப்பட்டிருப்பதை கவனத்துடன் கேட்க வேண்டும் என்பது வியாசராஜரின் அபிப்பிராயம். பார்த்தனே என்றால் பொதுவாக அர்ஜுனன் எனலாம். ஆனால் இங்கு, ஸ்ரவண, மனன, நிதித்யாஸன என்று மூன்று வழிகளிலும் நல்லவற்றை அறிந்துகொள்பவர்கள் அனைவருமே பார்த்தன் எனப்படுகின்றனர். கீதார்த்தவ என்றால் பகவத்கீதை. மற்ற அனைத்து கீதைகளைவிட, பகவத்கீதை, முக்திக்கு வழிகாட்டியாக இருக்கிறது என்று பொருள்.

ஸ்லோகம்:

கு[1]ருக்ஷேத்ரதி[3] என்னவரு பாண்டவரு
பேளோ சஞ்சய ஏனு மாடுவரு கூ[1]டி[3]
கேளய்ய அரசனே நோடி[3] பாண்டவர
சேனா மாதாடித நின்ன சுத த்[3]ரோணகி[3]ந்து[1] ||1

பத:

கே[1]ளி தா[1] பார்த்த[2]னு கு[1]ருத[3]ண்ட[3] | ரணத[3]லி சந்த[3] | கா[3]ண்டீ[3]வ கரத[3]ண்ட[3] |

அச்யுத1 பிடி ரத2 நடெ3முந்தா3 | பஹூத்1வரதி3ந்த3 நோடு3வெ | நேத்ரதி3ந்த3 ||
கு3ருஹிரியர கூட3 யாகெந்தா3 | யுத்த4 ஸாகெந்த3 |
பிக்ஷெவெ சுக2வெந்தா3 |
குந்திஸுத1 ஈ மாது உசித1ல்ல | நினகிது3 ஸல்ல |
பிடி கா3ண்டீ3வ பி3ல்ல ||1

வேதவியாஸர் மற்றும் ஸ்ரீகிருஷ்னனின் அருளால் திவ்ய த்ருஷ்டியைப் பெற்ற சஞ்சயன், மகாபாரத யுத்தத்தின் மொத்த விஷயங்களையும் திருதராஷ்டிரனுக்கு விளக்குகிறான். பகவத் கீதையின் முதல் ஸ்லோகத்தின் விளக்கத்தைப் போலவே இருக்கிறது, கீதா சாரத்தின் முதல் ஸ்லோகமும்.

அர்ஜுனன் கேட்டுக் கொண்டதால், ஸ்ரீகிருஷ்ணன் ரதத்தை இரு சேனைகளுக்கு நடுவே கொண்டு நிறுத்தினான். தன் உற வினர்களை எதிர்ப்படையில் கண்ட அர்ஜுனன் கவலை கொள் கிறான். 'போர் வேண்டாம். நான் சன்யாசம் பெற்று, பிட்சை பெற்று வாழ்ந்து விடுகிறேன்' என்றான். 'மகா பாரதப் போரில் இறந்து போகவேண்டியவர்களை, (பிறகு வேறொரு நாளில்) நான் எப்படியும் கொல்லப் போகிறேன். நீ ஒரு காரணம் மட்டுமே. ஆகையால், நீ இப்படி சொல்வது உன க்கு சரியல்ல. உன் காண்டீபத்தைப் பிடி. போர் செய்' - என்றார் ஸ்ரீகிருஷ்ணர்.

ஸ்லோகம்:
பா3ல்ய யௌவன முப்பு1த1ன தே3ஹத3ல்லி |
இந்தா2 தே3ஹகெ1 மோஹ மத்யாகி1ல்லி ||
காய்து கொல்லுவ நானு இருதிரலு இல்லி |
பி3ல்லு பிடி3து3 கீர்த்தி ப1டெ3 லோகத3ல்லி ||2

பத:
ஷஸ்த்ரதிந்தஞ்ஜிகெயில்ல ஜீவக்கெ | ஈ தே3ஹக்கெ | பாவக1ன தா3ஹக்கெ |

உத³கக³ளிந்த வேதனெயாகெ | ஈ ஜீவக்கெ | மாருதன ஷோஷக்கெ |
நித்ய அபே⁴த்⁴ய தா ஜீவன | ஸனாதன | வஸ்த்ரத்ஹாங்கெ³ ஈ த¹னுவு |
ஆதா³வு போதா³வு நினக³ய்யா | நனகி³ல்லய்யா | அத நா பல்லெனய்யா ||2

பால்யம், யௌவனம், மூப்பு ஆகியவற்றை அனுபவிப்பது ஜீவன் மட்டுமே. ஜடமான இந்த தேகமல்ல. அதற்கே ‘தேஹ க்கெ’ என்று சொல்லாமல் ‘தேஹதல்லி’ என்று சொல்லி யிருக்கிறார். தற்காலிகமான இந்த தேகத்தின் மேல் மோகம் / ஆசை வைக்கக்கூடாது. சர்வதந்த்ர ஸ்வதந்த்ரனான ஸ்ரீஹரி யே அனைவரையும் கொல்பவன் ஆகையால், அர்ஜுனன் ஒரு காரணம் மட்டுமே. அவரின் சொல்படி, காண்டீபத்தைப் பிடித்து போர் புரிந்து உலகத்தில் புகழைப் பெற்றான். முக்கிய கதா பாத்திரமான பகவந்தனே அனைத்தையும் நடத்துபவன், அனை த்திற்கும் காரணமானவன் என்று இந்த ஸ்லோகம் உணர்த்துகிறது.

அனைத்து வேதனைகளும் பஞ்சபூதங்களால் ஆன இந்த சரீரத் திற்கு மட்டுமே. ஜீவனின் ஸ்வரூபத்திற்கு அழித்தல், உடைத் தல், எரித்தல் என்று எதுவும் பொருந்துவதில்லை. ஜீவனின் ஸ்வரூபம் நித்யமானது. அதற்கு மரணத்தால் எதுவும் ஆவ தில்லை. ஆகையால், இந்த தேகமானது பழைய ஆடையை துறந்து புதிய ஆடையை அணிவதுபோல, வரும், போகும். இந்த நிலை ஜீவராசிகளுக்கு மட்டுமே தவிர, பகவந்தனுக்கு இல்லை. ’அத நா பல்லேனய்யா’ என்று சொல்வது, ஜீவ-ஈச பேதத்தை வெளிப்படுத்துகிறது. 84 லட்ச ஜீவராசிகளைத் தாண்டி வந்த இந்த தேகத்தைப் பற்றி பகவந்தன் முழுவது மாக அறிந்திருக்கிறான். ஆனால், ஜீவனுக்கு அதைப் பற்றிய அறிவு இருப்பதில்லை. (தொடரும்)

**ப்ராணேஷ கேசவ தாசர், பெங்களூரு

போட்டி

மாதாந்திர பேச்சுப்போட்டி

ஸ்ரீபுரந்தரதாசர்

இந்த மாத பேச்சுப் போட்டிக்கான தலைப்பு

ஸ்ரீபுரந்தரதாசரின் வாழ்க்கை, மகிமைகள் மற்றும் கிருதிகள்.

* 8 முதல் 10 நிமிடங்கள் வரை, எந்தக் குறிப்பையும் பார்க்காமல் பேசவேண்டும். தமிழ், ஆங்கிலம், மராத்தி, கன்னடம் - இதில் ஏதாவது ஒரு மொழியில் பேசலாம்.

* நீங்கள் பேசுவதை வீடியோ எடுத்து:

- வாட்சப்பில் நேரடியாக எங்களுக்கு அனுப்பலாம், அல்லது

- யூட்யூப் அல்லது ஃபேஸ்புக்கில் ஏற்றி, அதற்கான இணைப்பை எங்களுக்கு அனுப்பலாம், அல்லது

- வாட்சப் வீடியோ கால் செய்து நேரடியாக பேசலாம்.

* இந்த வீடியோ எங்களால் வேறு யாருக்கும் / வேறு எங்கும் பகிரப்படாது.

* பேசுபவர் பெயர், இதழ் உறுப்பினர் எண் ஆகிய தகவல்களுடன், நவம்பர்1ம் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

* தேர்ந்தெடுக்கப்படும் இருவருக்கு புத்தகப் பரிசு வழங்கப்படும்.

ஹரிதாச விஜயத்திற்கு அதிக உறுப்பினர்களை சேர்க்கும் எண்ணத்தில், இந்தப் பத்திரிக்கையின் முதல் இதழை மட்டும் இலவச PDF வடிவில் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம். வாட்சப் / ஃபேஸ்புக்கில் கிடைக்கப் பெறாதவர்கள் தொடர்பு கொள்ளவும். அந்த PDFஐ உங்கள் நண்பர்கள் / ஹரிபக்தர்களுக்கு அனுப்பி, அவர்களையும் தமிழில் நடக்கும் இந்த தத்வ பிரசாரத்தில் பங்கேற்கச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

'Jagannatha Kesava' Youtube Channelக்கு Subscribe செய்து, ஹரிதாச விஜயம் குறித்த மேலும் பல தகவல்களைப் பெறவும்.

ஆசிரியர் ‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணனின் குரு பரம்பரை

- ஸ்ரீமன் மத்வாசார்யர்
- ஸ்ரீவியாசராயர்
- ஸ்ரீபுரந்தரதாசர்
- ஸ்ரீவிஜயதாசர்
- ஸ்ரீவேணுகோபாலவிட்டலதாசர் (பங்கநாமத திம்மண்ண தாசர்)
- ஸ்ரீவியாசவிட்டலர் (கல்லூர் சுப்பண்ணாச்சார்)
- ஸ்ரீரகுபதிவிட்டலதாசர் (வைராக்யசாலி திம்மண்ணதாசர்)
- ஸ்ரீபூவராகரகுபதிவிட்டலதாசர் (கெம்பாலி தாசாசார்யர்)
- ஸ்ரீஸ்ரீபதிவிட்டலதாசர் (கத்வலி ஸ்ரீபதிதாசர்)
- ஸ்ரீதந்தெஸ்ரீபதிவிட்டலதாசர் (ஹரபனஹல்லி வெங்கட்தாசர்)
- ஸ்ரீநிதிவிட்டலதாசர் (தீபத அண்ணய்யாச்சார்)
- ஸ்ரீவரவிட்டலதாசர் (சௌதி ராமசந்திரப்பா)
- ஸ்ரீமுத்துமோகனவிட்டலதாசர் (தொட்டபெல்லாபுர ராகவேந்திர தாசர்)
- ஸ்ரீதந்தெமுத்துமோகனவிட்டலதாசர் (பரமப்ரிய சுப்பராய தாசர், தேவராயனதுர்கா, தும்கூர்)
- ஸ்ரீகுருகோவிந்தவிட்டலதாசர் (திரு M.R.கோவிந்த ராவ், மைசூரு)
- ஸ்ரீஜாம்பவதிப்ரியவிட்டலதாசர் (திரு.ஹரதி பிரகலாதாச்சார், பெங்களூரு)
- ஜகன்னாதகேசவ (சத்ய நாராயணன்)

** ஸ்ரீவிஜயதாசரின் காலத்திலிருந்து தடையின்றி தொடர்ந்து வரும் ஹரிதாச பரம்பரை இது.



ஸ்ரீ புரந்தரதாசர்

If Undelivered, please return to: Sathya Narayanan, 380, 2A Main,16th Cross JP Nagar 4th Phase Bengaluru 560078	To:

ஹரிதாச விஜயம்

மாத இதழ்

Haridasa Vijayam - Monthly

மலர் 1 ** நவம்பர் 2019 ** இதழ் 2



ஸ்ரீகனகதாசர்

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ், பெங்களூரு

இதுவரை வெளியாகியுள்ள புத்தகங்கள்

1. ஸ்ரீஹரியின் 40 அவதாரங்கள். 352 பக்கங்கள். ரூ.200
2. பஞ்ச பரிசுத்த தேவதைகள்(பரசுக்ல த்ரயர்கள்) 290 பக். ரூ150
3. தந்தெமுத்து மோகனதாசர் (பரமப்ரிய சுப்பராய தாசர்). 270 பக்கங்கள். ரூ.150
4. ஸ்ரீசத்யவீர தீர்த்தர். 64 பக்கங்கள். ரூ.40
5. ஸ்ரீசத்யபோத தீர்த்தர். 164 பக்கங்கள். ரூ.70
6. ஸ்ரீசத்யத்யான தீர்த்தர். 216 பக்கங்கள். ரூ.110
7. மத்வகதாம்ருதம். 200 பக்கங்கள். ரூ.100
8. இந்தா குருகள காணேனோ. 48 பக்கங்கள். ரூ.30

e-books (மின் புத்தகங்கள்)

இன்னும் அச்சிற்கு வராத நமது 24 தமிழ்ப் புத்தகங்கள், மின் புத்தகங்களாக அமேசான் தளத்தில் கிடைக்கின்றன. Amazon Kindle கருவியிலோ, Kindle செயலியிலோ இவற்றை தரவிறக்கி படிக்கலாம்.

எமது Android app - வேதநிதி - VEDHANIDHI

* மத்வ சித்தாந்தத்தைப் பற்றி அறிய உதவும் செயலி
* 35 தலைப்புகளில் 5,000 Objective type கேள்வி பதில்கள்.
* தமிழ், ஆங்கிலம் மற்றும் கன்னடத்தில் கேள்வி பதில்கள்
* Google Play Store சென்று VEDHANIDHI என்று தேடவும்.
* செயலி தரவிறக்கக் கட்டணம் ரூ.150.
* தரவிறக்கினால் உடனடி புத்தகப் பரிசு உண்டு.
* செயலியில் சரியான விடைகளைக் கொடுத்தாலும் பரிசு.
* இன்றே VEDHANIDHIஐ தரவிறக்கி, பயன்பெறவும்.

ஸ்ரீஹரி சர்வோத்தமா வாயு ஜீவோத்தமா



நம: ஸ்ரீபாதராஜாய நமஸ்தே வியாச யோகினே |
நம: புரந்தரார்யாய விஜயார்யாய தே நம: ||

"ஹரிதாச விஜயம்"

சிரி நிலயன குணகள '**திளிது**' பஜிசுவுதே

மலர் : 1 இதழ் : 2

<u>நிர்வாக ஆசிரியர்</u>

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்,

380, 2A Main, 16th Cross,

JP Nagar 4th Phase, பெங்களூரு 560078

Ph.: 89044-58276. haridasa.vijayam@gmail.com

jagannathakesava.blogspot.com

<u>துணை ஆசிரியர்</u>

'தாச சாகித்ய சேவா ரத்ன'

திரு. குரோம்பேட்டை R. ஸ்ரீதரன்

<u>ஆசிரியர் குழு உறுப்பினர்கள்</u>

திரு. முரளிதர தாசரு, திருமதி. நிர்மலா நரசிம்மன்,

திரு. லட்சுமிபதிராஜா, திரு. ஸ்ரீனிவாசன் பிராணேஷ்

ஆசிரியர் பக்கம்

ஸ்ரீஹரியின் கருணையால், குருகளின் அருளால் வெளிவந்த 'ஹரிதாச விஜயம்' முதல் இதழை அனைவரும் பார்த்திருப்பீர் கள். பலர் தொடர்பு கொண்டு, இதழின் உள்ளடக்கம், நோக்கம், வரவேண்டிய விஷயங்கள் என பலதைப் பற்றியும் கருத்து தெரிவித்துள்ளனர். ஸ்ரீஹரியின் சேவையில் தங்களையும் சேர் த்துக்கொள்ளுமாறு சிலர் இங்கு வெளியிடுவதற்கு விஷயங் க ளை அனுப்புகிறோம் என்றும் சொல்லியிருக்கின்றனர். அனை வருக்கும் நன்றி.

மத்வ சித்தாந்தத்தை, அதன் தத்வங்களை மக்களிடையே கொண்டு சேர்ந்ததில் ஹரிதாசர்களின் பங்கு அளப்பரியது. ஸ்ரீ வியாசராயர் காலத்திலிருந்து இன்றுவரை, நூற்றுக்கணக்கான ஹரிதாசர்கள் நம்மிடையே தோன்றி, பல அரிய, புரிந்து கொள் வதற்கு கஷ்டமான சித்தாந்த விஷயங்களை, மிகவும் எளிமை யாக, அனைவரும் புரிந்து ஏற்றுக்கொள்ளத்தக்க கன்னட மொழியில் நமக்குக் கொடுத்துச் சென்றுள்ளனர். அதையே நாம் நம் தமிழ் பேசும் மாத்வர்களுக்காக, இந்தப் பத்திரிக்கை யில் கொடுக்க முயல்கிறோம்.

’கலியுகதொளு ஹரி நாமவ நெனெதரெ, குலகோடிகளு உத்தரி ஸுவுவு ரங்கா’ - கலியுகத்தில் பகவத் நாமஸ்மரணைக்கு அதிக சிறப்பு. அனைத்திற்கும் ஊக்கமாக, அனைவருக்குள்ளும் நின்று, அனைத்தையும் செய்து, அதன் பலன்களைப் பெற் றுத் தருபவராக, ஸ்ரீஹரி எங்கும் நீக்கமற நிறைந்திரு க்கிறார். அவர் நம் இதயத்திலும் நின்று நம்மை நல்வழியில் நடத்திச் செல் லுமாறு பிரார்த்திப்போம். ஹரிதாசர்கள் கடை பிடித்த பாதை யில் நாமும் சென்று, புண்ணியம் பெறுவோம். ஹரிதாச சாகித் யத்தில் உள்ள அமுதத்தை அனைவரும் ருசித்து ஆனந்தம் பெறுவோம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்

தொடர்

ஹரிதாச சாகித்யம்

ஹரிதாச சாகித்யத்தின் நோக்கம்

சாதாரணமான பாமர மக்களுக்கு வேதம், சாஸ்திரம், புராணங்களில் அடங்கியிருக்கும் நீதி, தத்வங்களை எளிமையாக புரிய வைப்பது மட்டுமல்லாமல், மனித ஜீவர்களை தெய்வ தத்வங்களுக்கு ஏற்றுவதே ஹரிதாச கீர்த்தனைகளின் நோக்கம் .

செவிவழியாகவே ஒருவரிடமிருந்து ஒருவருக்கு பரவி, அனைவரின் வதனங்களிலும் நிலைத்திருக்கும் சாகித்யம் இது. ஆண்கள், பெண்கள் என அனைவரும் வாய் விட்டுப் பாட, அவர்களுக்கு குரல் கொடுத்த சாகித்யம் இது. தினந்தோறும் புதுப்புது மொழி, நுடி ஆகியவற்றில் மக்களுக்கு நிரந்தரமாக ஞானத்தை வழங்கி வருவதே ஹரிதாச சாகித்யம் .

ஆத்யாத்ம அனுபவத்தை, அதனால் ஏற்பட்ட பலன்களை, மக்களின் முன் வைத்து, அவர்களுக்கு நன்கு புரியுமாறு சொல்வதே ஹரிதாச சாகித்யம். வைஷ்ணவ சித்தாந்தத்திற்கு, வைதிக மதத்திற்கு, கன்னட சாகித்யத்திற்கு, மக்களின் நிகழ் கால பிரச்னைகளுக்கான தீர்வுகளுக்கு, சங்கீதத்தின் ராக, தாள, லயங்களுடன் ஒரு வடிவம் கொடுத்ததே ஹரிதாச சாகித் யம். வாழ்வின் அனைத்து நீதி, வழிமுறைகளையும் விளக்கும் சாகித்யம்.

சாகித்யம், சங்கீதம், தாளம், லயம் ஆகியவற்றினால் ஆன ஹரிதாச சாகித்யம், பக்தியின் வளர்ச்சிக்கு உருவான கன்னட த்தின் சாமகானம் எனப்படுகிறது. பற்பல ஆண்டுகளின் அனுபவம், வாழ்க்கை வாழ்வதற்கான நீதிநெறிகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு, சம்ஸ்கிருத மற்றும் பண்பாட்டின் ரகசியங்கள் மக்களுக்குப் போய் சேரவேண்டும் என்பதே ஹரிதாச சாகித்யத்தின் நோக்கமாக இருந்திருக்கிறது.

தத்வஞானமானது சம்ஸ்கிருதம் அறிந்த பண்டிதர்களுக்கு மட்டுமே ஆனதல்ல - அனைவருக்கும் போய் சேரவேண்டும்

என்ற நோக்கத்தில், ஞான பக்தி யோகங்களை அனைவருக்கும் புரியுமாறு செய்து, ஜீவர்களுக்கு அவரவர்களின் தகுதிக்கேற்ப ஆத்யாத்ம அர்த்தங்களை புரிய வைத்து, வழிவழியாக மக்களி டையே பரவி வந்திருப்பதே ஹரிதாச சாகித்யம்.

அனுசந்தானம் மற்றும் உபாசனா வழிமுறைகளை எப்படி செய்வது என்று ஹரிதாசர்கள் மக்களுக்கு புரியவைத்தனர். தெரிந்த விஷயங்களை, கேட்ட தத்வங்களை, அறிந்த ஆதார ங்களை, வாழ்க்கையில் எப்படி பயன்படுத்திக் கொள்வது என்னும் ரகசியங்களை ஹரிதாச சாகித்யம் தெரிவிக்கிறது. சாஸ்திரங்களில் நிரூபிக்கப்பட்ட, விவரிக்கப்பட்ட தத்வங்களை நன்றாக புரியுமாறு, மனதிற்கு பக்கத்தில் இருக்குமாறு செய்து, சம்ஸ்கிருதத்திலிருந்து தூர விலகியிருந்தாலும், யாரும் தத்வ ஞானத்திலிருந்து தூர விலகாதவாறு பார்த்துக் கொண்டதே ஹரிதாச சாகித்யம்.

இந்த சாகித்யத்தை வெறும் ஆத்யாத்மிக பார்வையிருந்து பார்த்தால் போதாது. சாகித்ய, சமூக, பக்தி ஆகிய கோணங்களி லிருந்து பார்த்தால் போதாது, வாழ்க்கையின் / சமூகத்தின் மேம்பாட்டிற்கு இந்த சாகித்யம் எப்படி பயன்படுகிறது என் பதை பார்க்கவேண்டும்.

வேத, உபநிஷத், கீதை, சூத்திரம், ராமாயண, பாரதம், பாகவதம் ஆகியவற்றின் சிறப்பான கருத்துக்களை ஹரிதாசர்கள் தங்களின் கிருதிகளில் நிரூபித்திருக்கின்றனர்.

'சம்சாரதல்லித்து^{3} க^{3}ம்சாரியன்னு நெனெ' சம்சாரத்தில் (குடும்ப த்தில்) இருந்து கொண்டே கம்சனைக் கொன்றவனை நினை - என்னும் பழமொழியை நிரூபிக்கின்றனர் ஹரிதாசர்கள். 'மானவ ஜென்ம தொ^{3}ட்டது, ஹானி மாடலு பே^{3}டி' என்று எச்ச ரிக்கின்றனர். 'ஈசபேகு^{1} இத்து^{3} ஜெயிஸ பேகு^{1}' என்று தைரியம் கொடுக்கின்றனர். 'ஸ்னானவ மாடிரோ ஞான தீர்த்ததலி' என்று

போதிக்கின்றனர். 'பக்தி பேகு[1], விரக்தி பேகு[1], சர்வ சக்தி பேகு[1], முந்தே முக்திய ப[3]யசுவவரிகெ' என்று முக்திக்கு உண்டான வழியைக் காட்டுகின்றனர் ஹரிதாசர்கள். அப்படியெனில், ஹரி தாசர்கள் யார்? அவர்கள் எப்படி இருக்கவேண்டும்? அவர்களின் நடை உடை ஆடைகள் எப்படி இருக்கவேண்டும்? ஹரிதாசர் களின் லட்சணம் என்ன? இவற்றை ஹரிதாச சாகித்யத்தைப் படித்தே தெரிந்து கொள்ளவேண்டும்.

'தாச' - என்றால் சேவகன். 'தாஸ்ய' - என்றால் சேவகம். தத்வ ஞான சம்பிரதாயத்தில் 'தாச' என்றால் யார் தன்னை முழு வதுமாக பகவந்தனிடம் அர்ப்பித்துக் கொண்டிருக்கிறாரோ, அவரே 'தாச'. பகவந்தனின் சேவைக்காகவே தன் வாழ்க்கை யை ஒப்படைத்தவர்களே 'தாச' என்று அழைக்கப்படுகின்றனர். பூஜை நேரத்தில், விதிப்படி செய்யவேண்டிய பூஜையை செய்து முடித்தபிறகு, பகவந்தனிடம் தமது பக்தியை சமர்ப்பித்துக் கொள்ளும் வழியாக கீர்த்தனைகளை இயற்றி அல்லது பாடி, அவற்றை ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிப்பவரே 'தாச' எனப்படுகிறார்.

'ஹரிதாசர்' என்றால் யார் என்னும் கேள்விக்கு பொதுவான பதில் 'ஸ்ரீஹரி பக்தர்கள்'. இந்த அர்த்தத்தில் ஹரியின் பக்தர் கள் அனைவருமே 'ஹரிதாசர்' என்று சொல்ல முயன்றாலும், இந்த சொல்லிற்கு விசேஷ அர்த்தம் ஒன்று இருக்கிறது. ஸ்ரீநரஹரிதீர்த்தர், ஸ்ரீபாதராஜரில் துவங்கி, ஹரிதாச பரம்பரை யில் சேர்ந்து, குருகளிடமிருந்து தாச தீக்ஷையைப் பெற்று, அங்கித உபதேசத்தைப் பெற்று, தகுதிக்கேற்ப அதன் நியம ங்களை பக்தியுடன் பின்பற்றி, அதை தன் வாழ்க்கையின் நடைமுறையாக வைத்துக் கொண்டிருப்பவரே 'ஹரிதாசர்' எனப்படுகிறார்.

பிரம்மசாரி முதலான ஆசிரமங்களுக்கு (நிலைகளுக்கு) தக்க கடமைகள் இருப்பதைப் போன்று, ஹரிதாசத்வத்திலும் தர்ம தீக்ஷைகள் உள்ளன. விஜயதாசர் தமது 'ஹரிதாச லட்சண சுளாதி'யில் தெரிவித்திருப்பதைப் போல வாழ்ந்தால் அதுவே தீக்ஷை எனப்படுகிறது. இந்த தீக்ஷையைவிட இதற்கு அரு

கதை/தகுதி என்னவென்று பார்த்தால், தாசன் ஆகுபவருக்கு குறைந்த பட்சம் 'ப்ரஸ்தான த்ரய' எனப்படும் கீதை, உபநிஷத், மற்றும் பிரம்மசூத்திரங்களின் பாடமாவது ஆகியிருக்கவேண்டும். பிரஸ்தான-த்ரய மற்றும் சம்ஸ்கிருத பாண்டித்யமும் இருக்கவேண்டும் என்பது ஸ்ரீவிஜயதாசரின் அபிப்பி ராயம்.

ஹரிதாசர் ஆகவேண்டும் என்று விருப்பம் கொண்டவர்கள், 'தீக்ஷை'யை பெறவேண்டும். பெரும்பாலான தாசர்கள், தமக்கு தீக்ஷையைக் கொடுத்த குருவிடமிருந்தே அங்கிதத்தையும் பெறுவது வழக்கம். ஹரிதாச பரம்பரையில் தீக்ஷையைப் பெற்றவர்களுக்கு பின்பற்றவேண்டிய சில விதிகள் / கடமைகள் உண்டு. சாதாரணமான உணவு, வர்ணாசிரம தர்மம், நித்ய நைமித்திக காரியங்களை செய்வது, வைதிக ஸ்வதர்மத்துடன் சில கட்டுப்பாடுகளையும் மதித்து பின்பற்ற வேண்டும்.

<u>ஹரிதாசரின் பொதுவான கடமைகள் / விதிகள்:</u>

1. ஸ்ருதி, ஸ்ம்ருதி, புராண, இதிகாசங்களில் முழுமையான நம்பிக்கை வைப்பேன் என்று சத்தியம் செய்யவேண்டும்.
2. கடன் வாங்குவதில்லை, போதாது என்று சொல்வதில்லை, நாளைக்கு என்று எதுவும் வைப்பதில்லை என்ற மூன்று வாக்குளை கொடுக்கவேண்டும்.
3. தவிர்க்கவே முடியாத காரணங்கள் இல்லாதவரை, தர்ம ஆசரணகளை பின்பற்றுவேன் என்று சூளுரைக்க வேண்டும்.
4. ஹரியை திட்டுவது, ஹரிபக்தர்களை திட்டுவது, குருவை திட்டுவது ஆகியவற்றை யார் மூலமாகவாவது கேட்டால், அதற்கு வருந்தி, ஆத்ம சுத்திக்காக உபவாசம் செய்யவேண்டும்.
5. ஹரி நாமஸ்மரணையுடன், கிடைத்த தூய்மையான உணவையே (நைவேத்தியம்) உட்கொள்ள வேண்டும்.
6. ஹரிசேவைக்காகவே தம் வாழ்க்கையை செலவழிக்க வேண்டும். (தொடரும்).

** **கன்னட மூலம் : திருமதி. ஜெயம்மா, பெங்களூரு**

தொடர்

ஹரிதாசர்களின் வாழ்க்கை வரலாறு
ஸ்ரீகுருகோவிந்தவிட்டல தாசர்

அந்தக் காலத்தில் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணாக்கர்கள் தலையில் தொப்பி அணிந்து செல்வது வழக்கம். கோவிந்தன், அவன் பெரியப்பா வீட்டில் தங்கி, பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது அவனை பள்ளி நிர்வாகிகள் ‘தலையில் தொப்பி இல் லாமல் நீ பள்ளிக்கு வரக்கூடாது’ என்று ஆணையிட்டனர். கோவிந்தன் வீடு திரும்பி, தன் தாயிடம் தொப்பி வாங்கித் தரும்படி கேட்டான்.

தாயானவள் ‘நீ உன் பெரியப்பாவிடம் தொப்பியை கேள்’ என்றாள். உடனே கோவிந்தனும் பெரியப்பாவிடம் சென்று ‘பெரியப்பா அவர்களே. எனக்கு தொப்பி வாங்கிக் கொடுங்கள். தொப்பி இல்லாமல் நாளையிலிருந்து பள்ளிக்கு வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள்’ என்றான். பெரியப்பா உடனே கோபம் அடைந்து, முகத்தை சிணுங்கிக் கொண்டு ‘உன் முகர க்கட்டைக்கு தொப்பி ஒரு கேடா?’ என்று கர்ஜித்தார். தொப்பி வாங்கித்தர முடியாது என்றார் மற்றும் அவனை பலவாறாக திட்டினார்.

ஆசை வெட்கமறியாது அல்லவா? மறுபடியும் கோவிந்தனின் அம்மா, கொழுந்தனிடம் சென்று தொப்பி விவகாரத்தை ஆரம் பித்தாள். உடனே கோவிந்தனின் பெரியப்பாவிற்கு பயங்கரக் கோபம் வந்துவிட்டது. ’முன்னாலேயே சொன்னேனே! மறுபடி தொப்பி கிப்பி எதுவும் கிடையாது என்று. மறுபடி மறுபடி ஏன் கேட்கிறாய்? யார் தொப்பி வாங்கித் தருகிறார்களோ, அவர்கள் வீட்டுக்கு நீங்கள் போகலாம். இனி இங்கு இருக்கவேண்டிய அவசியம் இல்லை’ என்று கடுமொழி மழை பொழிந்தார்.

கோவிந்தனுக்கும் அவன் தாயாருக்கும் மிகவும் வேதனை யாயிற்று. ’கதி இல்லாமல் இன்னொருவரிடம் இருக்கக்

கூடாது. என்ன செய்வது?' என்று கூறிக்கொண்டு அவர்கள் அந்த வீட்டை விட்டுக் கிளம்பினர்கள்.

திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்கிறபடி நாதியற்ற இவர்களுக்கு தெய்வ சங்கல்பத்தினால் ஸ்ரீநவரத்ன ராமராயர் என்பவரின் துணை கிடைத்தது. பொறியாளரான ஸ்ரீநவரத்ன ராமராயரும் அவர் மனைவி கங்காபாய் அவர்களும், கோவிந்த னையும் அவன் தாயாரையும் தங்களுடனேயே இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர் வீட்டிலேயே தங்கி கோவிந்தன் படிக்க ஆரம்பித்தான்.

நவரத்ன ராமராயர் ஆசார சீலர். சம்பிரதாய அனுசாரி. அவர் வீட்டில் எப்போதும் பஜனை, பிரவசனம் போன்ற சத்காரி யங்கள் நடந்துகொண்டே இருக்கும். கோவிந்தனுக்கும் அவற் றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. விளையும் பயிர் முளையிலே என்கிற ரீதியில் கோவிந்தனுக்கு பஜனையில் ஈடுபாடு உண்டாயிற்று. பள்ளிக்கூடத்தில் கோவிந்தன் நன்றாக ப் படித்தான். அது மட்டுமன்றி, பள்ளிக்கூட விளையாட்டுகளில் கோவிந்தன் பங்கு கொண்டு வெற்றியடைந்தான். கால்பந்து, ஓட்டப்பந்தயம், உயரம் தாண்டுதல் போன்ற போட்டிகளில் பரிசுகள் பல பெற்றான். மற்றும் பள்ளிக்கூட நாடகங்களில் பாத்திரம் வகித்து, நன்றாக நடிக்கவும் செய்தான். படிப்பிலும் முதல் மதிப்பெண் வாங்கினான். ஆகையால் கோவிந்தன் SSLC யில் நிறைய மதிப்பெண் பெற்று தேர்வடைந்தான்.

அடுத்து கோவிந்தனுக்கு இன்ஜினியரிங் படிக்கவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. ஆகையால், கோவிந்தன், மதராஸ் இன்ஜினியரிங் கல்லூரிக்கு விண்ணப்பிக்க, உடனே வந்து சேரும்படி அங்கிருந்து தகவல் வந்தது. ஆனால், மகனை அந்த நாள் வரையில் காத்துவந்த தாய்க்கு, அவனை விட்டு பிரிய மனமே இல்லை. ஆகையால் 'மிகவும் தூரமான சென்னைக்கு நீ போகக்கூடாது' என்று மகனுக்கு தாய் கட்டளையிட்டாள்.

தாய் சொல்லை தட்டாத கோவிந்தனும் சரியென்று கூறி, தான் இருந்த ஊரிலேயே இன்ஜினியரிங் டிப்ளமா வகுப்பில் சேர்ந் தான். அதில் நன்றாகப் படித்து, பட்டமும் பெற்றான்.

பிறகு அவனுக்கு அரசில் PWDல் சப்-ஓவர்சியர் என்ற பதவி கிடைத்தது. அந்த வேலையில் சேர்ந்து, பணம் சம்பாதித்து, தன்னை காப்பாற்றிய தாயை மகிழ்ச்சியில் ஆழ்த்தினான் கோவிந்தன்.

கோவிந்தனின் திருமணமும் இல்லற வாழ்வும்

கோவிந்தன் சப்-ஓவர்சியராக வேலைக்கு சேர்ந்தபின், ஒரே ஊரில் இருக்கவில்லை. அவ்வப்போது மாற்றலாகிக் கொண் டே இருந்தார். பல ஊர்களில் வேலை செய்தார். தாயும் அவரு டன் எல்லா ஊர்களுக்கும் சென்றார். இப்பொழுது, தாய் தன் மகனுக்கு திருமணம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட் டார். மகனும் திருமணம் செய்து கொள்ள ஒத்துக் கொண்டார். பின்பு, கோவிந்தராயர், ஸ்ரீ சி.என். யாதவமூர்த்தி என்பவரின் மகளான துளசம்ம என்கிற கிருஷ்ணவேணி என்கிற கன்யா மணியை திருமணம் செய்துகொண்டார். நன்றாக இல்லறம் நடத்தினார். தம்பதிகள் மிகவும் அனுகூலமாக வாழ்க்கை நடத்தினார்கள். துளசம்மாவும் மிகவும் ஆசாரத்துடன் வாழ்வை நடத்தினாள். இருவரும் சேர்ந்து பாலும் தேனும் கலந்தாற்போன்ற வாழ்வை நடத்தினார்கள்.

கோவிந்தராயர் நாகமங்கலம் என்கிற ஊரில் வாசம் செய்த போது, அங்கிருந்த ராமண்ணன் என்பவர் இவரின் தெய்வ பக்தி யைக் கண்டு மெச்சி, தம் வீட்டில் உபயோகப்படுத்தாமல் வைத்திருந்த சத்சாஸ்திர புத்தகங்களின் கட்டை, தட்சிணை யுடன் தானமாகக் கொடுத்தார். அந்தக் கட்டில் ஸ்ரீமத்வராய ரின் சர்வமூலகிரந்தங்கள் இருந்தன. இதைக் கண்டு கோவிந்த ராயர் ஆச்சரியம் அடைந்தார். அவர் இதுகாறும் சாஸ்திர அப்பியாசம் பண்ணியதே இல்லை. சம்ஸ்கிருதத்தில் பரிச்சய மும் இதுவரை அவரிடம் இல்லை. ராயர், 'ஹே ராமண்ண!

இந்தப் புத்தகங்களை தானம் வாங்க எனக்கு யோக்யதை இல்லை. நான் படித்தவன் அல்லன். ஆகையால் இந்த சர்வ மூலகிரந்தங்களை வேறு யாருக்கேனும் கொடுங்கள்' என்றார். அதற்கு ராமண்ணன், 'ராயரே, இவற்றை தங்களுக்கு தரச் சொல்லி எனக்கு பிரேரணை ஆகியுள்ளது. இப்போது படிக்கா விட்டாலும் எப்போதாவது நீங்கள் கட்டயம் இவற்றை படிப்பீர் கள்' நீங்கள் இவற்றை தானமாக ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறி கெஞ்சினார். ராயரும் அப்புத்தகங்களை ஸ்வீகரித்தார்.

ராமண்ணனின் வார்த்தைகள் நிஜமாயின. பின்னால், ராயர் எல்லா சர்வமூல கிரந்தங்களையும் படித்ததுடன் அல்லாமல், பத்து உபநிடதங்களை, ஆசார்ய மத்வரின் பாஷ்யத்துடன் கன்னடத்தில் மொழிபெயர்த்தார். 'கவன' ரூபத்தில் பாடல்களை இயற்றினார். மற்றும் சம்ஸ்கிருத மொழியில் ஒரு பெரிய பண்டிதராகவும் ஆனார். மத்வரின் அத்யந்த தாசர் ஆனார்.

ராமண்ணாவிடம் புத்தகங்களைப் பெற்றபிறகு கோவிந்த ராயரு க்கு சர்வமூல கிரந்தங்களை சம்பூர்ணமாக படிக்க வேண்டு மென்று ஆர்வம் ஏற்பட்டது. 1938ல் மொளகால்மூரு சிக்கேர ஹள்ளி ஸ்ரீமத்வேச தாசர் என்பவரிடம் சாந்தி பாடம் பெற்று, அவரிடம் சிரத்தையுடன் சர்வமூல கிரந்தங்களை கற்க ஆரம் பித்தார். பின்பு, மைசூரில் வாழ்ந்த நந்தகுடி நரசிம்ம மூர்த்தி ராயரின் சூத்ரபாஷ்யத்தை அப்பியாசம் செய்தார். கோவிந்த ராயருக்கு நல்ல மனோபலம் இருந்தது. நினைத்ததை முடிக்கவல்ல திறமை இருந்தது. அவா இருந்தது.

(தொடரும்). ** **திரு. கிரோம்பேட்டை R. ஸ்ரீதரன்**

வங்கிக் கணக்கில் சந்தா செலுத்தினால், மறக்காமல் உங்கள் முகவரியை 89044 58276 எண்ணுக்கு வாட்சப் / SMS அல்லது haridasa.vijayam@gmail.comக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

போட்டி

மாதாந்திர குறும்போட்டி

அக்டோபர் 2019ன் விடைகள்

1. மத்வ நாமா, நரசிம்ம தண்டக, ப்ரமர கீதே
2. ஸ்ரீவியாசராஜர்
3. ஸ்ரீஅக்ஷோப்ய தீர்த்தர் அங்காரத்தினால் வரைந்த ஸ்ரீ நரசிம்ம உருவம் இருக்கும் தலம்
4. நியாயாம்ருத, தர்க்க தாண்டவ, தாத்பர்ய சந்திரிகா
5. ஜீவோத்தமத்வ சாதனைக்காக, நாம் வாயுதேவரின் ஆராதனை செய்யவேண்டும். அதை நினைவுபடுத்துவதற்காக.
6. ஷங்கு கர்ணன், பால்ஹிக ராஜன், பிரகலாத ராஜன்
7. ஸ்ரீகோபால கிருஷ்ணன்
8. வைகுண்ட வர்ணனே, லட்சுமி சோபானெ, ஸ்வப்னபத,
9. தீர்த்த ப்ரபந்த, ருக்மிணீச விஜய, லட்சாலங்கார டீகா
10. ஐந்து

** மொத்தம் 7 பேர் பதில் அளித்திருந்தாலும், கிருதிகள் என்றால் தேவரநாமா என்றே அறிந்து பதில் அளித்திருக்கின்றனர். இருந்தாலும் மற்ற கேள்விகளுக்கு சரியான பதில் கொடுத்திருப்பதால், அவற்றை ஏற்றுக்கொண்டு, அவர்களில் 2 பேருக்கு புத்தகப்பரிசு அனுப்புகிறோம்.

** பரிசு பெறுவோர்: திரு.விஜயீந்திரன், மடிப்பாக்கம், சென்னை & திரு. வாசுதேவ பிரபு, அம்பத்தூர், சென்னை.

** மேலும் பலர் இப்போட்டிகளில் கலந்து கொண்டு பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்த இதழைப் பற்றி தங்களின் பிற வாட்சப், மின்னஞ்சல் க்ரூப்களில் சொல்லி, மேலும் பல ஹரிபக்தர்கள் இந்த பயனுள்ள தகவல்களைப் பெறுவதற்கு உதவவும்.

தொடர்

ஹரிதாசர்களின் சிந்தனை முத்துக்கள்

ஹம்ஸ பரம்பரை

ஸ்ரீபதியு நாபி கமலதி அஜ ஜனிஸிதனு
அஜன மானசபுத்ரரே சனகாதிகளு
சனகாதிகள சிஷ்யரே துர்வாசரு
துர்வாசர சிஷ்யரே பரதீர்த்தரு
பரதீர்த்தர சிஷ்யரே சத்யப்ரக்ஞரு
சத்யப்ரக்ஞர சிஷ்யரே ப்ராக்ஞதீர்த்தரு
ப்ராக்ஞதீர்த்தர சிஷ்யரே அச்யுதப்ரேக்ஷரு
அச்யுதப்ரேக்ஷர கரசஞ்சாதரே மஹாபாஷ்யகாரரு
மஹாபாஷ்யகாரரே குருமுக்யப்ராணரு
குருமுக்யபிராணபதி நம்ம புரந்தரவிட்டலா ||

பாரதத்தின் தத்வ சாஸ்திர உலகத்தில், ஆசார்ய மத்வரின் தத்வவாதத்திற்கு உயர்ந்த இடம் உள்ளது. ஆனால் இதன் மூலம் எங்கிருந்து துவங்கியது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும் என்று ஸ்ரீமதாசார்யர் சொல்கிறார்.

ஸ்ரீமதாசார்யரின் முன்னர் மற்றும் பிறகான பரம்பரையை அறிந்து, அவர்களை தினமும் நினைத்தால் மட்டுமே படித்த கல்வி நமக்கு பயன்படும் என்கிறார். இங்கு தாசர், ஆசார்ய மத்வரின் பூர்வபரம்பரையை தொகுத்துக் கொடுக்கிறார். இந்த பரம்பரை, பரமஹம்ஸ நாமக நாராயணனிலிருந்து துவங்கி அச்யுதப்ரக்ஷர் வரை வந்து, அந்த சமயத்தில் த்வைத சித்தாந்தம் மறையத் துவங்கிய போது, வாயு தேவரே மத்வராக அவதரித்து வந்து மறுபடி அந்த சத்-சித்தாந்தத்தை நிறுவினார் என்று முடிகிறது. 'குருஸ்மரணெயிந்த சகல விபத்து பரிஹார' ஆகையால் இங்கு சொல்லியபடி தினமும் ஆதிகுருகளின் ஸ்மரணை செய்ய வேண்டும்.

****கன்னடத்தில்: திரு.ஏ.பி.ஷாமாச்சார், பெங்களூரு**

தொடர்

கேசவ நாமா

கிருஷ்ணா முராரி - ஸ்ரீவாதிராஜர்

இந்தக் கிருதியில் ஒவ்வொரு வரியிலும் முராரி என்று கூறு கிறார் ஸ்ரீவாதிராஜர். முர அசுரனைக் கொன்ற கிருஷ்ண ரூபம் முராரி. இந்த முராரி, என் நாக்கில் எப்போதும் நிலைத்திருக் கட்டும் என்று வாதிராஜர் கூறுகிறார். முரதைத்யர்கள் என் னும் 24 அதத்வாபிமானிகள், தத்வாபிமானிகளுடன் இருந்து அவர்களை ஸ்ரீஹரியை நினைப்பதற்கு விடுவதில்லை. ஆக வே, அத்தகைய தைத்யர்கள் நம் உடலை விட்டுப் போக வேண்டும் என்று சம்சாரியான முராரியை, 24 ரூபங்களால் பாடியிருக்கிறார் ஸ்ரீவாதிராஜர்.

கிருஷ்ணா முராரி கேசவ முராரி
அச்யுதா[1]னந்த[1] கோவிந்த முராரி ||ப||

பல்லவியின் தொடக்கத்தில் 'கிருஷ்ணா முராரி' என்று தொட ங்கியவர், 24வது நுடியின் இறுதியில் 'கிருஷ்ணா முராரி' என்று முடித்திருக்கிறார். 'அச்யுதானந்த கோவிந்த' என்னும் மூன்று ரூபங்களில் ஸ்ரீஹரி, ஆதிபூத, ஆத்யாத்ம, ஆதி தெய் வங்களாக நிலைத்திருக்கிறார். அதற்கே இந்த மூன்று நாமங் களை 'பிராயச்சித நாமங்கள்' என்று ஞானிகள் கூறுகின்றனர்.

வேஷதா[4]ரியாகி ப[3]ந்து[3] அசுரர சம்ஹரிஸி
பூ[4]சுரரிக்[3]வரவனித்தே[1]யோ கேசவ முராரி ||1||

மத்ஸ்ய வேடத்தில் (சோமக), வராக வேடத்தில் (ஹிரண் யாக்ஷ), நரசிம்ம (ஹிரண்யகசிபு), வடு வேடத்தில் (பலி), பிராமண வேடத்தில் (ஜராசந்தன்) வந்து அந்தந்த அசுரர்களைக் கொன்று, பூசுர (பிராம்மணர்களுக்கு) வரங்களை வழங்கி அவர்களை மேம்படுத்திய முராரியே, கேசவனே.

நா தா[1]ளலாரேனோ லோகாதி[4]பதி[1]யே கா[1]யோ
அனாத[2]ரக்ஷக நாராயணனே முராரி ||2||
பதினான்கு உலகங்களுக்கும் தலைவனே, அனாதரக்ஷகனே நாராயணனே, எனக்கு வந்த கஷ்டங்களை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை, என்னைக் காப்பாற்று.

மனசு நில்லது[3] தேவ மாரனட்டுளிகெ[3]ன்ன
மனகா[1]கி[3] நீனே பாரோ மாதவ முராரி ||3||
மன்மதன் கொடுக்கும் பிரச்னைகளால் என் மனம் கலங்கு கிறது. ஹே மாதவனே, என் கெட்ட மனதினை திருத்தி காப்பாற்று.

அனேக கோ[3]வுகள காய்த[3] கோபால மூர்த்தி
கோபியரரஸ கோவிந்த முராரி ||4||
கோபியர்களின் அரசனான கோவிந்தனே, கோபாலகனாக பசு க்களையெல்லாம் காத்தவன் நீயே.

கட்ட[1]த[3] காமனெய பிட்டு க[1]ளசி[1] மன
தி[3]ஷ்டார்த்த[1]வனீவ விஷ்ணு முராரி ||5||
பொருட்களின் மீதான ஆசையைப் போக்கி, மனதின் இஷ்டா ர்த்தங்களை பூர்த்தி செய்யும் விஷ்ணுவே;

மதுரவாக்யகளிந்த மந்திரக்கா[1]கி[3] பாரோ
மனசிஜனய்ய மது[4]சூதன முராரி ||6||
மன்மதனின் தந்தையான மதுசூதனனே, என் இதயக் கோயி லுக்கு வந்து, நீ சொன்னதைப் போலவே, உன்னை வணங்கு மாறு என் மனதை மாற்றுவாயாக.

தி[1]த்தி[3]த[3] கஸ்தூரிதிலக தி[1]ருகித பரிமளகந்த[4]
முத்து[3] நசுனகெ[3]ய த்ரிவிக்ரம முராரி ||7||

நெற்றியில் கஸ்தூரி திலகம், அப்ராக்ருத (அழிவில்லாத) சரீர த்தில் சுகந்தமான சந்தனம் மற்றும் முகத்தில் அழகான புன்னகையுடன் இருக்கிறாய்.

கா^{1}மினி ஆக^{3}லி ப^{3}ந்து^{3} ஸீமெனாளுவேனெந்து
நேமவாக்யதி நிந்த^{3} வாமன முராரி ||8||

ராமாவதாரத்தில், சீதையை முனிவரின் ஆசிரமத்தில் விட்டு வந்து அரசாண்டு, உன் கட்டளையை நீயே சரியாக பின்பற் றிய வாமனனே முராரி.

ஸ்ரீயரஸ மேளதி ரமிஸி பஹுகாலதி
சிந்துஷயன ஸ்ரீதரனே முராரி ||9||

ஸ்ரீபூதுர்கையருடன் பாற்கடலில் இருந்துவரும் பிரபுவே, ஸ்ரீதரனே முராரி.

ரிஷிகளிக் வரவித்து ப்ருந்தாவனதலி நிந்து^{3}
ஹருஷவாரிதி ஹ்ருஷிகேஷ முராரி ||10||

பிருந்தாவனத்தில் நின்று, முனிவர்களுக்கு அபயத்தைக் கொடு த்து, அவர்களின் மனதில் மகிழ்ச்சியைக் கொடுத்த ஹ்ருஷி கேசனாக இருக்கிறாய்.

பாவன்ன மூருதி பரமதயாளு நீனே
பாலிஸு ஸ்ரீபத்மனாப முராரி ||11||

பரம தயாளுவே, உன் பவித்ரமான பத்பனாப ரூபத்தினால் என்னை காப்பாற்றுவாய்.

தா^{3}னவர மர்த்தி^{3}ஸி சுமனசரிகொ^{3}லித
தா^{3}னத^{3}த்த^{1}னே தாமோதரனே முராரி ||12||

அசுரர்களைக் கொன்று, தேவதைகளுக்கு அருளி, அவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்த தாமோதரனே முராரி.

ஷங்கேயில்லதெ கெ^{3}லிஸு ஷங்க^{2} சக்ரவ தரிஸி அ
லங்காரவாத சங்கர்ஷணனே முராரி ||13||

சங்கு சக்கரத்தினால் அலங்கரித்துக் கொண்ட சங்கர்ஷணனே, எந்தவொரு சந்தேகமும் இல்லாமல் என்னை வெல்லும்படி செய்வாயாக.

சேஷசயன சாதுசஜ்ஜனர போஷ
நீ சலஹோ வாசுதேவ முராரி ||14||

நீயே ஈசன் என்னும் அறிவை சாது சஜ்ஜனர்களுக்கு வழங்கு. சேஷசயனனான வாசுதேவனே என்னை காப்பாற்று.

இத்த[3] கோ[3]பியர மனெய கத்து[3] பெண்ணெய மெத்த[3]
பத்மதளாக்ஷ ப்ரத்யும்ன முராரி ||15||

கோபிகா ஸ்த்ரீயரின் வீடுகளில் வெண்ணைய்யை திருடித் தின்று, அவர்களின் மனதை வென்ற, தாமரைக் கண்ணனான ப்ரத்யும்ன முராரியே, என் மனதை திருத்தி, ஞானபக்தி என்னும் வெண்ணைய் தோன்றுமாறு அருள்வாயாக.

அனிமிஷனாகி பந்து யாதவரனெல்ல கெ[3]லித[3]
ஆ மஹாமஹிம அனிருத்த முராரி ||16||

யாதவ குலத்தையே வென்று, அவர்களின் இதயங்களில் நின்ற மகாமகிமனான அனிருத்த மூர்த்தியே, முராரி.

புனுகு கஸ்தூரிகந்த பரிமள புஷ்பதிந்த
புண்யமூர்த்தி புருஷோத்தமனே முராரி ||17||

புனுகு, கஸ்தூரி, சந்தனம், மணம் தரும் பூக்கள் போன்ற வற்றால் அலங்கரித்துக் கொள்ளும் புண்ணியமூர்த்தி புருஷோத்தமனே. (தொடரும்).

** **திருமதி. ஜெயம்மா, பெங்களூரு**

போட்டி

மாதாந்திர குறும்போட்டி

ஸ்ரீபுரந்தரதாசர்

* இம்மாத கேள்விகள் அனைத்தும் ஸ்ரீபுரந்தரதாசருக்கு சம்மந்தப்பட்டவை.
* விடைகளை வாட்சப் அல்லது மின்னஞ்சல் மூலமாக டிசம்பர் 1ம் தேதிக்குள் எங்களுக்கு அனுப்பவும்.

1. ஸ்ரீனிவாச நாயக் கடைக்கு ஸ்ரீஹரி வந்ததன் உண்மையான நோக்கம் என்ன?
2. ஸ்ரீனிவாச நாயக் அனைத்து செல்வங்களையும் துறப்பதற்கு எந்த குணம் காரணம்?
3. மூக்குத்தி சம்பவத்தால் தனக்கு ஏற்பட்ட மாறுதலுக்கு, நாயக் யாருக்கு நன்றி தெரிவித்தார்?
4. தாசரின் சமகாலத்திய ஹரிதாசர்கள் இருவர் பெயர்கள் சொல்லவும்.
5. தாசர் இயற்றிய முதல் பாடல் எது?
6. தாசரின் கிருதிகளை ஸ்ரீவியாசராஜர் __ என்று அழைத்தார்.
7. சங்கீதப் பாடங்களைக் கற்பவர்களுக்காக, துவக்கப் பாடல்களாக, தாசர் __ இயற்றினார்.
8. தாசரின் புண்ணிய தினம்?
9. __ அவதாரமாக தாசர் கருதப்படுகிறார்.
10. தாசர் இயற்றிய மூன்று காவியங்கள் அல்லது தீர்க்க கிருதிகள் பெயர்களைச் சொல்லவும்.

amazon kindle appல் இறக்கி, அதில் 'madhwa tamil' அல்லது 'சத்ய நாராயணன்' என்று தேடினால், எமது அனைத்து புத்தகங்களும் வரும். தனித்தனியாக அவற்றை வாங்கியும் படிக்கலாம் அல்லது Kindle Unlimited என்னும் திட்டத்தில் சேர்ந்து அனைத்து புத்தகங் களையும் இலவசமாகவே படிக்கலாம். மேலும் விவரங்கள் தேவையெனில் எங்களை தொடர்பு கொள்ளவும்.

தொடர்

ஹரிதாசர்களின் புதிர் கவிதைகள்
கனகதாசரின் கணபதி ஸ்துதி

பெ^{3}ட்டவனு தன்ன பொட்டெயலிட்டு
கு^{3}ட்டாகி^{3} சலஹித^{3}ன ஹொட்டெயலி
புட்டித^{3}ள இஷ்ட தேவன நட்ட நடு^{3}வினலி
புட்டித^{3}ன நெத்திய நொந்த^{3}னு
கித்தித^{3}ன சதி ஸ்ருஷ்டியலி புட்டி
லோகதொ^{3}ளு மொட்ட மொத^{3}லநெய
பூஜெ கொ^{3}ம்ப^{3} ஆதி கேசவனினகெ^{3} சரணு

மேலோட்டப் பொருள்:

மலையை தன் வயிற்றில் வைத்து இரகசியமாகப் பாதுகாத்து வந்தவரின் வயிற்றில் பிறந்தவரின் இஷ்டமானவரின் நடு வயிற்றில் பிறந்தவரின் தலையொன்றை கிள்ளியவரின் மனைவியின் பூஜையை எடுத்துக் கொள்பவரின் உள்ளுறை வாழும் ஆதி கேசவனுக்கு சரணங்கள். நமஸ்காரங்கள் .

உட்கருத்து:

முண்டிகெ பதங்களை புரிந்து கொள்வதற்கு சரியான இதிகாச புராண அறிவு மிகவும் தேவைப்படுகிறது. அதிலும் கனகதாசர் பதங்களை புரிந்து கொள்ள அபார ஞானம் தேவை. இப்போது இந்த பதத்தை பார்ப்போம்.

ஒரு காலத்தில், எல்லா மலைகளுக்கும், பறவைகள் போல இறக்கைகள் இருந்தனவாம். அவை பறந்து, பல ஊர்களின் மேல் அமர்ந்து, அங்குள்ளவர்களை கொன்றனவாம். அப்போது, தேவேந்திரன் சினம் கொண்டு, மலைகளில் இறக்கைகளை தன் வஜ்ராயுதத்தால் வெட்டினாராம். அப்போது வாயு பகவானிடம்

தஞ்சமடைந்த இமாலய மலையின் புதல்வரான மைநாக பர்வதத்தை மட்டும் பத்திரமாக காப்பாற்றி, அதை கடலுக்கு அடியில் கொண்டு வைத்து, இரகசியமாகக் காத்து வரும்படி வருணனுக்கு கூறினாராம். அந்த வருணனின் மகளே இலக்குமி தேவி (பாற்கடலில் தோன்றியவள்). அவருக்குப் பிரியமானவரே விஷ்ணு. அவர் மகன் நான்முகக் கடவுள் பிரம்மா.

அந்த பிரம்மாவுக்கு ஒரு காலத்தில் ஐந்து தலைகள் இருந்தன. அதேபோல், அவர் மகன் சிவனுக்கும் ஐந்து தலைகள் இருந்தன. ஒரு நாள் சிவன் கோபம் கொண்டு, பிரம்மாவின் ஒரு தலையை கிள்ளி எறிந்துவிட்டாராம். அப்பேர்ப்பட்ட சிவனின் பத்னியே பார்வதி. அந்த பார்வதி, தன் உடலிலுள்ள அழுக்கால் (மண்ணால்) விநாயகரை ஸ்ருஷ்டித்தாராம். அந்த கணபதியின் உள்ளுறை இறைவனே ஆதிகேசவ பெருமாள் ஆகும்.

இதையே இந்த உகாபோகத்தில் கனகதாசர் சொல்கிறார்.

பெ3ட்டவனு (மலையை) தன்ன பொட்டெயலிட்டு (வயிற்றில் வைத்து), கு3ட்டாகி (இரகசியமாக) சலஹித3ன ஹொட்டெயலி (வயிற்றில்) புட்டித3ள (லட்சுமியை) இஷ்ட தேவன (விஷ்ணுவின்) - என்னும் சொற்றொடரால் ’மைநாக பர்வதத்தை தன்னுள் வைத்து காப்பாற்றிய சமுத்திர ராஜா வருணனின் மகளாகிய விஷ்ணுவின் பதியான இலக்குமியை’ என்கிற பொருள் அறிய வருகிறது.

’நட்ட நடு3வினலி புட்டித3ன’ என்பதன் மூலம், விஷ்ணுவின் நாபியில் உதித்த பிரம்மன் குறிக்கப்படுகிறார். ’நெத்திய நொந்தனு கித்தித3ன’ என்பதன் மூலம் பிரம்மன் தலையைக் கொய்த சிவன் குறிக்கப்படுகிறார். ’சதி ஸ்ருஷ்டியலி புட்டி’ என்பதன் மூலம் பார்வதி தன் உடல் மண்ணால் செய்த விக்னேஷ்வரன் குறிக்கப்படுகிறார்.

அந்தப் பிள்ளையாரையே அனைவரும் முதலில் வணங்க வேண்டும் என்பது விதி. அதையே 'லோகதொ^{3}ளு மொட்ட மொத^{3}லநெய பூஜெ கொ^{3}ம்ப^3' என்பதன் மூலம் கவி சுட்டிக் காட்டுகிறார். அவருக்கு உள்ளே இறைவன் விஸ்வம்பர ரூபத்தில் உள்ளார். இது சாஸ்திர வாக்கியம். அந்த விஸ்வ ம்பரனே, ஆதி கேசவ விஷ்ணு.

இவ்வளவு அர்த்தங்கள் இந்த உகாபோகத்தில் பொதிந்துள்ளன. (தொடரும்).

**** க்ரோம்பேட்டை திரு.R.ஸ்ரீதரன்.**

1947ல் இந்திய சுதந்திர நாளில், பீடத்தை அலங்கரித்திருந்த மத்வ யதி யார்?

அ. ஸ்ரீசத்யாபிக்ஞு தீர்த்தர்

ஆ. ஸ்ரீசுயமீந்திர தீர்த்தர்

இ. ஸ்ரீவித்யாபிரசன்ன தீர்த்தர்

ஈ. இவர்கள் அனைவரும்

தினப்படி அனுஷ்டானங்களான சந்தியாவந்தனம், தேவரபூஜை, ஸ்லோகங்கள், மடங்கள், யதிகள், ஹரிதாசர்கள், கன்னட / சம்ஸ்கிருத கிரந்தங்கள் என இவற்றுடன் மேற்கண்ட பல சுவாரசியமான கேள்வி பதில்களைக் கொண்டுள்ளது எமது **vedhanidhi Android app**.

* தரவிறக்கினால் உடனடி புத்தகப் பரிசு
* Test modeல் கொடுக்கப்படும் ஒவ்வொரு 1,000 சரியான பதில்களுக்கும் ஒரு புத்தகம் பரிசு.
* Google Playstoreல் 'VEDHANIDHI' என்று தேடி, உடனே தரவிறக்கி பயன்பெறவும்.

தொடர்

கன்னட கிரந்தங்களின் அறிமுகம்

ஹரிகதாம்ருதசாரம்

ஸ்ரீஜகன்னாததாசரால் ரசனை செய்யப்பட்ட 'கன்னட நியாய சுதா' எனப் போற்றப்படும் மேரு க்ருதியே 'ஹரிகதாம்ருத சாரம்' ஆகும். விஜயதாசரின் ஆணைக்கிணங்க கோபாலதாசர் மூலம் தானமாகப் பெறப்பட்ட 40 வருட ஆயுட்காலத்தை முழுவதுமாக தாசமார்க்கத்தில் அர்ப்பணித்து, ஜகன்னாத தாசரால் படைக்கப்பட்ட அற்புத படைப்பு இது. ஹரிகதாம்ருத சாரம் என்றால் பகவான் ஸ்ரீஹரியின் மகிமையை உரைக்கும் சார கிரந்தமாகும். பகவானிடம் வினயம், பக்தி, சலுகை, ஹாஸ்யம், சரணாகதி, த்ருட நம்பிக்கை முதலான நவ ரசங்களில் மூழ்கி, நிறைந்த மனத்தினராய், மெய் மறந்த நிலையில் தானாகவே தாசரின் மூலம் வெளிவந்த ஆசு கவிதையே இந்த ஹரிகதாம்ருதசாரம்.

பாற்கடலில் கிடைத்தது அமிர்தம் எனில், பக்திக்கடலில் கிடை த்தது ஹரிகதாம்ருதம். அந்த அமிருதத்தினால் ரோகம், மரண பயம் நீங்கும் எனில், இந்த அமிர்தத்தினால் பவரோகமே நீங்கி, மோட்ச மார்க்கம் சித்திக்கும்.

சாதாரணமாக ஒவ்வொரு கிரந்தத்திலும் ஒவ்வொரு விஷயம் கூறப்பட்டிருக்கும். இந்த ஹரிகதாம்ருத சாரத்தில் பகவத் விஷயமான சகல தத்வங்களும், ரகசியமான பிரமேயங்களும், பகவத் மகிமைகளும், மிகவும் ஸ்பஷ்டமாக ஸ்ருதி, ஸ்ம்ருதி களுக்கு அனுகூலமாக கூறப்பட்டுள்ளது. சகல வேத, உப நிஷத்கள், புராண, இதிகாசங்கள் முதலான மூல பிரமாண கிரந்தங்களை ஹரிகதா எனக்கொண்டால், சர்வமூல கிரந்த ங்கள், டீகா, டிப்பணி, கிரந்தங்களை அதன் அர்த்தங்களை அளிக்கும் கிரந்தங்கள் எனக் கொண்டால், 'ஹரிகதாம்ருத

சாரம்' மேற்கூறிய அனைத்து கிரந்தங்களின் சாரமாக திகழ்கிறது.

32 சந்திகளில், பாமினி ஷட்பதி அமைப்பில் இயற்றப்பட்ட கிரந்தம் இது. ஸ்ரீஸ்ரீபாதராஜர், ஸ்ரீவியாசராஜர், ஸ்ரீவாதிராஜர் மற்றும் ஸ்ரீபுரந்தரதாசர் ஆகியோர் இவரது கனவில் தோன்றி அளித்த ஆசிர்வாதத்தால் இயற்றப்பட்ட கன்னட மேரு கிருதி இது. ஜகன்னாததாசர் கிரந்தத்தை இயற்றியபோது, வர்ணா பிமானி தேவதைகள், இவர் முன்னே 'நான், நீ' என்று போட்டி யிட்டு நர்த்தனமாடி, நின்று அருளிய கிரந்தம் இது.

தாசரே ஓரிடத்தில் ஸ்பஷ்டமாக 'லௌகிக வார்த்தை அல்ல, பரலோக நாதனின் வார்த்தை' என்று பொருள்படும்படியாக 'லோக வார்த்தெ இதல்ல, பரலோகைக நாதன வார்த்தெ' என உரைத்துள்ளார். எனவே, இந்த கிரந்தம் 'சகல வேத, புராண, இதிகாச, உபநிஷத் ஆகியவற்றின் சாரமாக ரகசிய பிரமேய ங்களுடன் உள்ளது என்று தெரிகிறது. எளிமையான நடை, அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் உதாரணங்கள், ஆழ மான பகவத் விஷயங்கள் இதில் நிரம்பியுள்ளன. அங்கங்கு சம்ஸ்கிருத பதங்கள் இருப்பினும், அது கன்னடத்தில் நிழலில் அனுசரித்து இருக்கும்படி தாசர், தன் கவித்துவத்தையும் நிரூபணம் செய்துள்ளார்.

மனிதன் எப்படி இருக்க வேண்டும்? பகவானின் கருணைக்கு பாத்திரராவது எவ்விதம்? பகவானின் கருணை எத்தகையது? பித்ரு காரியங்களை செய்வது எப்படி? எதுவும் அறியாத பாம ரன் எவ்விதம் சாதனை செய்யவேண்டும்? எப்படி அனு சந்தானம் செய்வது? இவ்வளவு ஏன்? எப்படி போஜனம் செய்ய வேண்டும் என்பதுகூட இதில் விவரிக்கப்பட்டுள்ளது.

32 சந்திகளில் முறையே, மங்களாசரண சந்தி, கருணா சந்தி, வியாப்தி சந்தி, போஜன ரசவிபாக சந்தி, விபூதி சந்தி, பஞ்ச மஹாயக்ஞ சந்தி, பஞ்ச தன்மாத்ர சந்தி, மாத்ருகா சந்தி, ஜீவப்ரகரண சந்தி, சர்வ ப்ரதீக சந்தி (அல்லது) சர்வ சமர்ப்பண சந்தி, தியான க்ரியா (அல்லது) தியான ப்ரக்ரியா சந்தி, நாடி பிரகரண சந்தி, நாமஸ்மரண சந்தி, பித்ருகண சந்தி, ஸ்வாஸ சந்தி, தத்த ஸ்வாதந்த்ர்ய சந்தி, ஸ்வகத ஸ்வாதந்த்ர்ய சந்தி, க்ரீடா விலாச சந்தி, கர்ம விமோசன சந்தி, குணதாரதம்ய சந்தி, ப்ருஹத் தாரதம்ய சந்தி, பக்தாபராத சஹிஷ்ணு சந்தி, கல்ப சாதன சந்தி, பிம்பாபரோக்ஷ சந்தி, ஆரோகண தாரதம்ய சந்தி, அவரோகண தாரதம்ய சந்தி, அனுக்ரமணிகா சந்தி, கணபதி ஸ்தோத்திர சந்தி (அல்லது) விக்னேஷ்வர சந்தி, அணுதாரதம்ய சந்தி, தைத்ய தாரதம்ய சந்தி என பிரித்து, பகவத் விஷயங்களை கொடுத்துள்ளார் தாசர். கிரந்தத்தின் சந்தி விபாக கர்மங்களை, ஸ்ரீபீமேச தாசர், ‘சந்தி மாலா சந்தி’ என்ற கிருதியில் தனியாக விளக்கியுள்ளார்.

இத்தகைய உயரிய கிரந்தத்தின் பலஸ்ருதியை ஸ்ரீஜகன்னாத தாசரின் சிஷ்யர் ஸ்ரீதவிட்டல தாசர், விசேஷமாக 33-வது சந்தியாக கொடுத்துள்ளார். அதில், இந்த நூலின் ஒரு எழுத் தைக்கூட எழுதி, படித்தாலும், ஒருவன் தேவதைகளால் வேண்டப்பட்டவனாய், ஸ்ரீஹரியின் பக்தி என்னும் உயர்வான செல்வத்தைப் பெறுவான். இதைப் படிப்பவர்களுக்கு அகால மரணம் இல்லை, யம பயம் விலகும், சர்வ மனோ பீஷ்டங்களும் நிறைவேறும் எனக்கூறி, மேலும் இந்த கிரந்தத்தின் ஒரு சந்தியாவது பாராயணம் செய்வதால்கூட, ஆயுள், ஆரோக்யம், புகழ், வலிமை, விசேஷ ஞானம், வீரம் மற்றும் நல்ல குணங்கள் சித்திக்கும் என விவரித்துள்ளார். ஸ்ரீதவிட்டல தாசர் மேலும் விவரிக்கும்படியான இந்த கிரந்தத்தை கேட்டாலே, குருடன் கண் பார்வை பெறுவான், செவிடனுக்கு காதுகள் கேட்கும், வளர்ச்சி குறைபாடு உள்ள வர்கள், மன்மதனைப் போல ரூப சௌந்தர்யம் அடைவார்கள், மலட்டுப் பசுக்கள் கூட ஈன்றெடுக்கும் பாக்கியம் பெறும்,

பட்டம் மரம் கூட துளிர்க்கும் என பலன்களை வரிசைப் படுத்துகிறார்.

இந்த கிரந்தத்தின் பாராயணத்தால் காம, க்ரோதங்கள் முத லான கெட்ட சிந்தனைகள் நீங்கும், நித்ய தீர்த்த ஸ்னானம் மற்றும் தானங்கள் அளிக்கும் பலன்கள் கிட்டும். பத்னியரிடம் பதிபக்தியும், கணவனிடத்தில் ஏகபத்னி விரதமும், தம்பதி களிடையே அன்யோன்ய பாவமும் அதிகரித்து, சந்தோஷ த்துடன் நல்வாழ்வு வாழ்வர், நற்கதியைப் பெறுவர் என தாசர் பலஸ்ருதியில் விளக்குகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஸ்ரீஜகன்னாததாசர், வைகுண்ட யாத்திரைக்குக் கிளம்ப எத்தனித்தபோது, சூக்ஷ்ம ரூபத்தில் தன்னை காண்பித்து, தன்னுடைய ஒரு அம்சம் தான் வாழ்ந்த மானவியில் உள்ள தன் கிருஹத்தில் ஒரு கம்பத்திலும், தான் மீட்டிவந்த வீணையிலும், விசேஷமாக தான் இயற்றிய ஹரிகதாம்ருத சாரத்திலும் இருப்பதாக உரைத்து, ஹரிவாயு மற்றும் குருகளின் அருள் இதில் பரிபூர்ணமாக உள்ளது என்பதை காட்டியுள்ளார்.

கன்னடத்தில் இயற்றப்பட்ட ஹரிகதாம்ருத சாரத்திற்கு அனேக பண்டிதர்களும், தாசர்களும், ஸ்ரீசங்கர்ஷண ஒடெயரு போன்ற யதி ஸ்ரேஷ்டர்களும் வெவ்வேறு காலங்களில், அனேக வியாக்யானங்களை அளிப்பத்திருப்பதனாலேயே, இந்த கிரந்தத்தின் மகிமை மற்றும் கருத்துக்களின் ஆழம் புலப்படு கின்றது. இத்தகைய மேரு கிருதியான ஹரிகதாம்ருதசார கிரந்தத்தை படித்து, எழுதி, கேட்டு, பாராயணம் செய்து, பிறரு க்கும் கற்பித்து ஸ்ரீஜகன்னாத விட்டலனின் அருளுக்கு பாத்தி ரர் ஆவோமாக என பிரார்த்திக்கின்றோம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

**** திரு.லட்சுமிபதிராஜா, சென்னை**

தொடர்

பகவத்கீதை

கீதா சாரம் - ஸ்ரீவியாசராஜர்

ஸ்லோகம்:

ஞான தொ³ட்ட³து கர்மப³ந்த⁴வன பி³ட்டு¹ |
கர்ம பி³ட்டரெ ப்ரத்வாயவெஷ்டு ||
ப²ல பி³ட்டு நீ மாடு³ சத்கர்மகள
ஸமதேஹகெ ப²ல கர்ம காரணவல்ல ||3

பத:

கர்மதல்லெ நினகதி⁴கார | ப²ல தா தூ³ர |
த⁴னஞ்சயகோ³ஸ்கர |
ஞான தொ³ட்ட³து கர்ம தூ³ரய்யா | இத்த பா³ரய்ய |
யோகபு³த்தி⁴ மாட³ய்யா |
ஜீதபு³த்தி³ யாவதை³ கேஷவ | ஜக³த்பா¹ஷவ | நோடிதெ³ பரமேஷ |
கோவிந்தனல்லி மனஸிட்டவ | காமபி³ட்டவ | ஜிததே³ஹ தா¹னாவ ||3

எல்லா யக்ஞங்களை விடவும் ஞான யக்ஞம் சிறந்தது. அதாவது, பகவந்தனின் சர்வோத்தமத்வ ஞானத்தைப் பெறுவதே சிறந்த ஞான யக்ஞம். 'நஹி ஞானேன சத்ருசம் பவித்ர மிஹ வித்யதே' என்பதே இதற்கு சான்று. 'பலபிட்டு நீ மாடு கர்மங்கள' (கடமைகளைச் செய். பலனை எதிர்பாராதே) என்பது ஸ்ரீகிருஷ்ணர் தரும் அறிவுரை. 'கர்மண்யேவாதிகாரஸ்தே மாப லேஷு கதாசன' அதாவது, ஒருவரின் வர்ணாசிரம தர்மங்களுக்கு ஏற்ப கர்மங்களை செய்யவேண்டும் என்பதே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

பலனை எதிர்பார்த்து கர்மங்களை செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பகவந்தனிடம் பக்தி, ஞானம், அருள்

ஆகிய பலன்களை எதிர்பார்ப்பது முக்கியம். ’தனஞ்சய கோஸ் கர பல தா தூர’ என்றால், சுயநலத்திற்கான பலன்கள். தனம்+ ஜய = தனஞ்சய. பணம் மற்றும் இதர விஷயங்களில் வெற்றி என்னும் பலன்கள். ‘ஜகத்பாஷவ நோடதெ பரமேஷ கோவிந்த னல்லி மனவிட்டவ’. ஜகத்பாஷ என்றால், உலகத்தைக் கட்டுவது. பஞ்ச பூதங்களைக் கட்டுவது. பரமேஷ என்றால், லட்சுமிதேவியிடமிருந்து துவங்கி, அனைவருக்கும் தலைவன். ‘கோவிந்தனல்லி மனவிட்டவ’ என்று ஆகவேண்டுமென்றால், பலன்களை விரும்புவதை விடவேண்டும். ’ஜிதபுத்தி’ என்றால், ஸ்திதப்ரக்ஞன், இந்திரியம், மனது, புத்தி ஆகியவற்றை வென்ற தேகமே ‘ஜிததேஹ’. வேதங்களால் புகழப்பட்டுள்ள, சர்வ ஸ்ரே ஷ்ட ஸ்வாமியான கோவிந்தனை தெரிந்துகொள்ள வேண்டு மெனில், நம்மை துஷ்ட காரியங்களில் ஈடுபடுத்தும் இந்திரிய ங்களை கட்டுப்படுத்த வேண்டும்.

ஸ்லோகம்:
ஞான தொ^{3}ட்ட^{3}து^{3} கர்மத^{3}ல்யாகெ என்ன ।
புத்தீ மோஹிஸீ கிருஷ்ண கேளய்ய பி^{3}ன்ன ।।
கர்மவில்லதெ மோக்ஷப^{2}லவுண்டெ இன்னா ।
கர்ம மோக்ஷத புத்தி^{4}கெ^{3} பீ^{3}ஜவல்லெ ।।4

பத:
யுத்த^{4} கர்மவ மாடோ^{3} பாண்டவ । ரணதாண்ட^{3}வ । வைரி ஷண்ட^{3}னெம்புவா ।
ஜனரெல்ல மாள்பரோ நின்ன நோடி । மத்தென நோடி ।
நோடிதர நீ பே^{3}டி^{3} ।
எனக்யாகெ^{1} பேளய்ய ஜனகர்ம । க்ஷத்ரிய த^{4}ர்ம ।
நஷ்டவாகு^{3}வுது^{3} த^{4}ர்ம ।
அர்ப்பிஸூ என்னல்லி சர்வவு । பி^{3}ட்டு க^{3}ர்வவு ।
திளி என்னொளு சர்வவு ।।4

’ஹே கிருஷ்ணா! இந்த போர்க்களத்தில், மிகவும் கொடியதான இந்த போரின் நடுவே, என்னை ஏன் சோதிக்கிறாய்?’ என்று கேட்கிறான் அர்ஜுனன். இதற்கு கிருஷ்ணன், ‘கர்மவில்லதே மோட்சபலவுண்டே?’ என்று கேட்கிறான். க்ஷத்ரியனின் கடமை, தர்ம பரிபாலனம். பிரஜா (மக்கள்) பரிபாலனம். வீரம். வலிமை. எதிரிகளை வெல்வது - ஆகியன. இந்த கடமைகளி லிருந்து ஒருவன் தவறினால், மோட்சபலன் அவனுக்கு எப்படி கிடைக்கும்? க்ஷத்ரியனின் கடமை மற்றும் தர்மம், போர் செய் வதே. நீ இப்போது போர் செய்யமாட்டேன் என்று சொல்வது, அதர்மம் ஆகும் என்பதே இங்கு குறிப்பிடப்படுகிறது.

’யதா ராஜா ததா ப்ரஜா’ - பெரியவர்கள் சனாதன தர்மம் மற்றும் ஆசாரங்களை சரியாக பின்பற்றவில்லையெனில், சிறி யவர்களும் அதை பின்பற்ற மாட்டார்கள். அப்படியே படிப்படி யாக தர்மம் அழிந்துவிடும். ஆகையால், ‘ஜனரெல்ல மாள்பரோ நின்ன நோடி, மத்தென்ன நோடி’ என்கிறார் ஸ்ரீகிருஷ்ணர். சாதா ரண மக்களின் தர்மம் மற்றும் க்ஷத்ரியனின் தர்மம் ஆகிய இந்த இரு வகையான தர்மங்களினாலும் கிருஷ்ணனுக்கு எவ்வித பிரயோஜனமும் இல்லை. ‘நுடிதந்தெ நடெ. நடெ தந்தெ நுடியுவுதெ’ என்பதே அவன் செய்தி. (நான் சொல் வதைப் போல செய்; நான் செய்வதைப் போலவே செய்யாதே). ’அர்ப்பிஸு என்னல்லி சர்வவு, பிட்டு கர்வரு’ (உன் கர்வத்தை விட்டுவிட்டு, அனைத்தையும் எனக்கு சமர்ப்பணம் செய்). இந்த செய்தியே, ‘நாஹம் கர்த்தா ஹரி: கர்த்தா, தத்பூஜா கர்ம சாகிலம்’ (எதையும் நான் செய்வதில்லை. அனைத்தையும் ஸ்ரீஹரியே செய்கிறான்) என்று சிந்திக்கும் மனோநிலை.

ஸ்லோகம்:

யோக³ சன்யாஸவெரடு முக்திகெ த்³ருட⁴வு |
போ⁴க³ வர்ஜித கேளு சன்யாஸியிரவு ||
ஹ்யாகெ³ பத்³மகெ¹ பாணிய லேபவில்ல |
ஹாகெ ப⁴க்திகெ³ சம்ஸ்க்ருதியு இல்லா ||5

பத:

அஜனல்லி த்3விஜனல்லி க3ஜனல்லி । ஸம நானல்லி ।
ப4ஜிபர மனதல்லி ।
மனஸூ யார ஜீவக்கெ ப3ந்து3 । இத்த பா3ரெந்து3 । மத்தெ வைரிதா3ரெந்து3 ।
லோஷ்டகாஞ்சன நோடு ஸமமாடி । ஆஸன ஹூடி ।
நாஸிகதுதி3 நோடி3 ।
த்யானமாடு ஹரி அல்லிஹ । அவனல்லிஹ । யோக3 சன்னிஹிதனவனே ।।5

பொதுவாக, யோக என்றால் கிருஹஸ்த தர்மம் என்றும், சன்யாஸ என்றால் யதி தர்மம் என்றும் சொல்வதுண்டு. ஆனால், 'பகவத்பூஜா ரூபதல்லி விஹித கர்மானுஷ்டானவே யோக'. காம கிரோதம் ஆகிய தோஷங்களை தொலைப்பதே சன்யாசம் எனப்படும். முக்தி கிடைக்க வேண்டுமெனில் யோக மும் வேண்டும். சன்யாசமும் வேண்டும். 'எலெய மேலிருவ பத்மக்கெ நீரின லேபவில்ல' (தாமரை மலர் நீரில் இருந்தாலும் அவ்விரண்டிற்கும் சம்பந்தம் இல்லை). இது எப்படியோ அதைப் போலவே 'பக்திகெ சம்ஸ்க்ருதியு இல்ல'. அதாவது பகவத் பக்தனுக்கு, சம்ஸ்க்ருதி என்றால், பிறப்பு, இறப்பு போன்ற சுழற்சிகள் இல்லை.

'அஜனல்லி த்விஜனல்லி, ஜகதல்லி ஸம' என்னும் நுடி 'வித்யா வினய சம்பன்னே பிரம்மணே கவி ஹஸ்தினி । ஷுனி ச்யைவ ஷ்வபாகே ச பண்டிதா: சமதர்ஷின:' என்னும் ஸ்லோக த்தின் பொருளைப் போலவே இருக்கிறது. இதில் பகவத்கீதை யின் ஆறாவது அத்தியாயத்தின் சாரமும் அடங்கியிருக்கிறது.

****ப்ராணேஷ கேசவ தாசர். பெங்களூரு**

தொடர்

மனப்பாடப் பகுதி

தேவதா தாரதம்யம்

1	ஸ்ரீமன் நாராயணன்	14	நாரதர்
2	ஸ்ரீமகாலட்சுமி	15	அக்னி, ப்ருகு, ப்ரஸூதி தேவி
3	பிரம்மா & வாயு	16	7ரிஷிகள், வைவஸ்வத மனு, விஸ்வாமித்ர
4	சரஸ்வதி & பாரதி	17	மித்ர, நிர்ருதி, தாராதேவி, ப்ரவாஹி
5	கருட, சேஷ, ருத்ர	18	குபேர, விஷ்வக்சேன, கணபதி, சேஷ ஷதரு (85 பேர்)
6	ஷண்மஹிஷியரு	19	கர்மஜ தேவதைகள்
7	சௌபர்ணி, வாருணி & பார்வதி	20	கங்கா, பர்ஜன்ய, சூர்ய, சங்க்யா, ஷசி, ஷாமளா, விராட்தேவி
8	இந்திர, காம	21	ஸ்வாஹாதேவி
9	அஹங்காரிக ப்ராண	22	புத
10	குரு பிருஹஸ்பதி, அனிருத்த, ரதி, ஸ்வாயம்பு மனு, சசிதேவி, தக்ஷ பிரஜாபதி	23	உஷாதேவி
11	ப்ரவாஹ வாயு	24	தரணிதேவி
12	சூர்ய, சந்திர, யம, ஷதரூபா தேவி	25	சனீஸ்வரன்
13	வருண	26	புஷ்கர

* 1 முதல் 26 வரை படித்தால் - அவரோகண தாரதம்யம்.

* 26 முதல் 1 வரை படித்தால் - ஆரோகண தாரதம்யம்.

* த்வைதத்தின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றான தாரதம்யத்தை அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

* ஆதாரம் - ஹரிகதாம்ருதசாரம்.

தொடர்

ஹரிகதாம்ருதசார கட்டுரைகள்

சர்வ பிரதீக சந்தி

** சர்வ பிரதீக சந்தியில் மொத்தம் 25 பத்யங்கள் உள்ளன. அந்த சந்தியைப் பற்றிய ஒரு சுருக்கமான கட்டுரை இது.

அனைத்துமே ஸ்ரீஹரியின் பிரதீக (பிரதிபிம்பம் / reflection) என்று இந்த சந்தியின் பெயரிலிருந்தே தெரியவருகிறது). இந்த உலகத்தில் இருக்கும் அனைத்து ஜீவராசிகளும் அவருக்கு பிரதிபிம்பமே. ஜடப்பொருட்கள் அனைத்திலும் அவர் வசிக் கிறார். அவரை விட்டு எந்தவொரு பொருளும் தனியாக இருப் பதற்கு சாத்தியமே இல்லை. ஒரு குழந்தையாக ஆல இலை யின்மேல் படுத்திருக்கும்போது, மொத்த பிரம்மாண்டத்தையும் தன் வயிற்றில் வைத்துக்கொண்டு படுத்தார். தன் மனைவி யான ரமாதேவியை தன் மார்பில் இடம் கொடுத்து வைத்துக் கொண்டார். தன் மனைவியில் ஸ்த்ரீ ரூபத்தினை ஆல-இலை யாக மாற்றிக்கொண்டார். பூ (Bhoo) ரூபத்தை தண்ணீராக மாற்றிக்கொண்டார். தண்ணீரில் ஆல-இலையைப் போட்டு அதன்மேல் படுத்தார். அதிக வெளிச்சம் இருந்தால் தூக்கம் வருவதில்லை என்று, துர்கா ரூபத்தை இருட்டாக மாற்றி, காலத்தை தன் கண் இமைகளில் இருத்திக் கொண்டார். தண்ணீரில் இலை மிதந்ததை, ஒரு தொட்டிலாக நினைத்து, அதில் படுத்திருந்தார். அப்போது ‘அஹ: அஸ்மீ’ என்றார். இதன் பொருள் - நான் ஒருவன் மட்டுமே இருக்கிறேன், நான் அனைத்திலும் இருக்கிறேன், என்னிடம் அனைத்தும் இருக்கின்றன - ஆகியவற்றை சொல்கிறார். தனக்குத் தானே பிரதிபிம்பன். இந்த விஷயங்களைப் பற்றி எழுதப்பட்ட சந்தியே - சர்வப்ரதீக சந்தியாகும்.

நம் வாழ்க்கையில் தினந்தோறும் ஸ்ரீஹரியை எப்படி நினைக்கவேண்டும் என்பதை, ஸ்ரீஜகன்னாததாசர் பற்பல உவமை உவமேயங்களுடன் ஹரிகதாம்ருதசார கிரந்தம் சர்வப்ரதீக சந்தியில் விளக்கியுள்ளார்.

மொத்த பிரம்மாண்டத்தை படைத்தவர் ஸ்ரீஹரி. இதை அழிப்ப வரும் ஸ்ரீஹரியே. பிரளய காலத்தில் ஸ்தூல சரீரங்களை அழித்து அவற்றை சூக்ஷ்ம ரூபமாக மாற்றுகிறார். படைப்பு காலத்தில் சூக்ஷ்ம ரூபங்களை ஸ்தூல சரீரமாக மாற்றி பிரம்மாண்டத்தை படைக்கிறார். ஸ்தூல தேகத்தை சூக்ஷ்ம ஜீவருக்குக் கொடுத்து சாதனை செய்வித்து அந்த ஸ்தூல சரீரத்தை அழித்து, அவரவர்களின் தகுதிக்கேற்ப ஆனந்தத்தைக் கொடுக்கிறார். ஸ்தூல சரீரத்தை அழித்து, அவர்களின் சூக்ஷ்ம-அம்சத்தை மூல-பிரக்ருதியில் இருத்தி படுக்கிறார். இந்த செயல்களினால் அவருக்கு எந்தவொரு பிரயோஜனமும் இல்லை. இது அவருக்கு ஒரு அனாயாசமான விளை யாட்டாகும்.

இப்படி படைக்கப்பட்ட ஜீவர்கள், அ-ஸ்வதந்திரர்கள் (சுயமாக முடிவெடுக்க முடியாதவர்கள்), அல்பர்கள், ஆகையால் இவர் களால் ஸ்ரீஹரியின் உதவி இல்லாமல் சாதனைகள் செய்ய முடியாது. புருஷ ரூபத்தினால், ஜீவர்களின் ஸ்தூல சரீரத்தில் வியாபித்து, அவர்களின் அனைத்து செயல்களுக்கும் காரண னாகி தன்னுடைய இஷ்டப்படி செயல்களை செய்து, அவர் களை சம்சாரத்திலிருந்து விடுதலையளித்து தன்னுடனே வைத்துக்கொண்டு அவரவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட சுகத் தினைக் கொடுத்து அருள்கிறார்.

பிரம்மாதி தேவதைகளிலிருந்து துவங்கி, சிறு கிருமிவரை, தைத்யர்கள் ஆகியோரையும், பஞ்சபூத, மூன்று குணங்களைக் கொண்ட உலகத்தைப் படைத்து, ஜீவர்களுக்குத் தேவையான காற்று, நீர், வெளிச்சம், உணவுகளை முதலிலேயே உருவாக்கி, பிறகு சூக்ஷ்ம சரீரமுள்ள ஜீவர்களுக்கு ஸ்தூல சரீரத்தைக் கொடுத்து, அந்த தேகத்தில் தானே நிலைபெற்று, அவர்கள்

செய்யும் செயல்களில் தானே நின்று, அவரவர்களின் தகுதிக்குத் தக்கவாறு, தன் இஷ்டப்படி சாதனை செய்விக்கிறார். பற்பல ஜீவர்களில் பற்பல ரூபங்களை எடுத்து, அனைத்து காலங்களில் வியாப்தனாகிருக்கிறார். தன் மனைவி ரமாதேவியுடன், தானே படைத்த பிரம்மாண்டமே அவரது பிரதிபலிப்பு ஆகும். அதற்கே கனகதாசர் ஸ்ரீஹரியின் விளையாட்டினை பின்வருமாறு பாடினார்.

' நீ மாயெயொளகோ நின்னொளு மாயெயோ | நீ தேஹதொளகோ நின்னொளு தேகவோ' என்று ஸ்ரீஹரி தானே உருவாக்கிய பிரம்மாண்டத்தில் ஓதப்ரோதனாகி (குறுக்குசால்) வியாபித்திருக்கிறார்.

வியாப்த ரூபத்தினாலேயே அவரால் அனைத்து செயல்களையும் செய்யமுடியும் என்றாலும், பற்பல ரூபங்களை எடுத்து அனைத்து இடங்களிலும் வியாபித்திருக்கிறார். தன் உடலிலிருந்து தத்வாபிமானி தேவதைகளை படைத்து, ரஜோ-தமோ குண ஜீவர்களின் ஸ்தூல சரீரத்தில் வியாபித்து, அவரவர்களின் சாதனையை செய்விக்கிறார்.

**** கன்னட மூலம்: திரு. சி.எஸ்.ஹுச்சுராவ்**

ஆராதனை

ஹரிதாசர்களின் புண்ணிய தினங்கள்

கார்த்திக & மார்கசிர மாதங்களில்

கார்த்திக பகுள சதுர்தசி - ஸ்ரீமுத்துமோகனதாசர் (தொட்டபல்லாபுர)

கார்த்திக அமாவாசை - ஸ்ரீமஹிபதி தாசர் (காகிண்டிகி)

மார்கசிர பௌர்ணமி - ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தர் (சோசலே)

மார்கசிர பகுள த்வாதசி - ஸ்ரீகுருகோவிந்தவிட்டல தாசர் (மைசூரு)

மார்கசிர அமாவாசை - ஸ்ரீகுருஸ்ரீஷவிட்டல தாசர் (கனககிரி

ஹரிதாச விஜயம்

சந்தா விவரம் (36 பக்கங்கள்)

1 ஆண்டுக்கு ரூ.200/- 3 ஆண்டுகளுக்கு ரூ.500/-

5 ஆண்டுகளுக்கு ரூ.900/- 10 ஆண்டுகளுக்கு ரூ.1700/-

வங்கியில் சந்தா செலுத்தினால், அதன் விவரத்துடன், உங்கள் முகவரியை, மின்னஞ்சல் செய்யவும்

வங்கி விபரம்:

Sathya Narayanan

ICICI Bank - Savings account

A/c. No. 000101043177. IFSC: ICIC0000001

Cenotaph Road Branch, Chennai 18

ஹரிதாச விஜயம் சந்தா செலுத்துபவர்களுக்கு ஒரு புத்தகம் இலவசமாக அனுப்புகிறோம். இப்புத்தகம் கிடைக்காதவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Amazon Kindleல் உள்ள நமது தமிழ் மின்புத்தகங்களில் சில:

1. ஸ்ரீவாதிராஜரின் ஸ்வப்னபத (விளக்கத்துடன்)
2. ஸ்ரீவித்யாபிரசன்ன தீர்த்தர் எழுதியுள்ள நாடகங்கள்
3. ஸ்ரீமோகனதாசரின் கோலு ஹாடு (விளக்கத்துடன்)
4. ஸ்ரீபிரசன்னவெங்கட தாசரின் நாராயண பஞ்ஜர
5. ஸ்ரீஜகன்னாத தாசரின் பலவிது பாளுதுதக்கெ
6. ஸ்ரீஜகன்னாத தாசர் கட்டுரைகள் (60 கட்டுரைகள்)
7. ஸ்ரீகுருகோவிந்த தாசரின் கோவிந்தாஷ்டகம்

& மேலும் பல புத்தகங்கள், கன்னட கிரந்தங்களை தொடர்ந்து மின்புத்தகங்களாக்க் கொண்டு வர முயல்கிறோம்.



ஸ்ரீவிஜயதாசர்

If Undelivered, please return to: **Sathya Narayanan,** **380, 2A Main,16th Cross** **JP Nagar 4th Phase** **Bengaluru 560078**	To:

BOOK POST



ஸ்ரீ குருகோவிந்தவிட்டல தாசர்

If Undelivered, please return to:
Sathya Narayanan,
380, 2A Main,16th Cross
JP Nagar 4th Phase
Bengaluru 560078


To:

ஹரிதாச விஜயம்

மாத இதழ்

Haridasa Vijayam - Monthly

மலர் 1 •• டிசம்பர் 2019 •• இதழ் 3



ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தர்

ஸ்ரீஹரி சர்வோத்தமா வாயு ஜீவோத்தமா



நம: ஸ்ரீபாதராஜாய நமஸ்தே வியாச யோகினே |
நம: புரந்தரார்யாய விஜயார்யாய தே நம: ||

"ஹரிதாச விஜயம்"

சிரி நிலயன குணகள '**திளிது**' பஜிசுவுதே

மலர் : 1 இதழ் : 3

ஆசிரியர் பக்கம்

'ஸ்மர்தவ்ய ஸததம் விஷ்ணு: விஸ்மர்தவ்யோ ந ஜாதுசித்' என்னும் புராண வசனத்தையே 'ஹரி ஸ்மரணெ மாடோ நிரந்தர' என்றும், இன்னும் பல்வேறு கீர்த்தனைகள், கிருதிகள் மூலமாக, ஸ்ரீஹரியின் சிந்தனையை நாம் எப்போதும், நிரந்தரமாக, இடைவிடாமல் செய்யவேண்டும் என்று ஹரிதாசர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படி அவர்களின் வாக்குகளில் ஸ்ரீஹரியை, அவரது நற்குணங்களை, மகிமைகளை நினைப்பதால், நமக்கு சிறப்பு பலன்கள் கிடைக்கின்றன.

வேத சாஸ்திரங்கள், இதிகாச, புராண, சர்வமூல கிரந்தங்கள் என இவை அனைத்தின் சாரத்தையும் எளிமையான கன்னடத்தில் கொடுத்ததே ஹரிதாச சாகித்யம். ஹரிதாசர்கள், தங்களது சாத்விக சிந்தனை, தொடர்ந்த படிப்பு, உபாசனை, ஆத்யாத்மிக அனுபவம், நற்சிந்தனை ஆகியவற்றை எழுத்து வடிவமாகக் கொடுத்ததே ஹரிதாச சாகித்யம். தத்வஞானத்தை சங்கீதம், ராகம், தாளம், லயம் ஆகியவற்றின் உதவியுடன் விளக்கினர். தேவரநாமம், சுளாதி, உகாபோகம், விருத்த நாமா, தீர்க்க கிருதி, காவிய, கிரந்த - என்று இன்னும் பல வகைகளில் சித்தாந்தத்தை, அதன் தத்வங்களை பரப்பினர்.

இந்த அனைத்து விதங்களையும், அதில் உள்ள அனைத்து படைப்புகளையும் ஒருவரால் தன் வாழ்நாளில் படித்துவிட முடியாது. ஆனாலும், ஒரு சிறு முயற்சியாவது செய்யவேண்டும் என்பதற்காகவே அத்தகைய மதிப்புமிக்க பொக்கிஷங்களை இந்தப் பத்திரிக்கையில் தமிழில் கொடுக்க முயல்கிறோம். இந்த வாய்ப்பினை ஹரிபக்தர்கள் தாமும் பெற்று, மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தி அறிமுகப்படுத்தினால், எங்களின் இந்த முயற்சிக்கு சிறு பலன் கிடைத்தது என்று மகிழ்வோம்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்

துணை ஆசிரியர் பக்கம்

இரண்டு மாத காலமாக ‘ஹரிதாச விஜயம்’ உங்கள் ஆதரவுடன் வெளிவந்து, எதிர்பார்த்த வரவேற்பைப் பெற்று வந்துள்ளது. மேலும் நிறைய வாசகர்கள் சேரவேண்டும் என்று விரும்பு கிறோம். இந்தப் பத்திரிக்கையில் காணும் குறை நிறைகளை தைரியமாக எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். என்னென்ன விதத்தில், இந்தப் பத்திரிக்கையை சீராக்கலாம் என்று கூறுங்கள்.

தாச சாகித்யம் என்பது ஒரு பெருங்கடல். அதை ஒரு சிறு குடத்துக்குள் நிரப்ப இயலாது. உங்கள் உற்சாகத்தைப் பொறுத்து, இன்னும் சில பக்கங்களை அதிகப்படுத்தினால் மேலும் சில விஷயங்களை சேர்க்கலாம். ஹரிபக்தர்கள், தனியாகவோ, கூட்டாகவோ ‘Sponsor’ செய்தால், சில தாசர்களின் படைப்புகளை தனி நூல்களாக வெளியிடலாம். வாசகர்களுக்கு சலுகை விலையில் அப்புத்தகங்களை கொடுக்கலாம். எல்லாவற்றிற்கும் உங்கள் பதில் (feedback) தேவை.

இந்த மாதம், சமீபகாலத்து ஹரிதாசர்களான ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தர், ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாசர் ஆகியோரின் ஆராதனைகள் வருகின்றன. ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தரின் ஒரு பாடல் இந்த இதழில் கொடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் பெரும் ஹரிதாசர்களான ஸ்ரீ நரஹரி தீர்த்தர், ஸ்ரீ கோபாலதாசர் மற்றும் ஸ்ரீபுரந்தரதாசர் ஆகியோர்களின் புண்ணிய தினங்கள் வருகின்றன. அவைகளை முடிந்த அளவு கொண்டாடலாம். மறுபடியும், அடுத்த மாதம் சந்திக்கலாம்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

குரோம்பேட்டை R. ஸ்ரீதரன்

தொடர்

ஹரிதாச சாகித்யம்

ஹரிதாசர்களின் வேஷபூஷணங்கள்

ஹரிதாசர்களுக்கென்று சில விதிகள் இருக்கின்றன. தூய்மை யான பஞ்சகச்சத்தை அவர் அணியவேண்டும். மேலே காவி வஸ்திரம், தலைக்கு காவி சேஷவஸ்திரம், காலில் கெஜ்ஜெ (சலங்கை), கழுத்தில் துளசிமாலை, நெற்றியில் கோபிசந்தன நாமம், உடலில் 12 நாமங்கள் முத்திரைகளுடன், கையில் தண்டிகெ பெத்த (தம்பூரி), தாளக்கட்டை, கோபாள புட்டி (ஜோல்னா பை என்று சொல்லலாம்) ஆகியவற்றைப் பிடித்து, ஹரிநாம சங்கீர்த்தனையை செய்தவாறு, மதுகர (பிக்ஷை) வாழ்வை வாழவேண்டும்.

கோபாலதாசர் தமது ஒரு கீர்த்தனையில் சொல்வது போல - ‘கெ^{3}ஜ்ஜெய கா^{1}லல்லி கட்டி, லஜ்ஜெ பிட்டு, ஹரிய நாம க^{4}ர்ஜனெ மாடுத்தா, தம்பூரி மீடு^{1}த்தா, ஹ்ருதய அம்பக^{1}திந்த ஆனந்த கரெயுத்தா, பலு சம்பிரமதிந்த இருவவர சங்க, ஏனு சுக^{2}வோ எந்தா சுக^{2}வோ’ - இருக்கவேண்டும்.

மேலே சொன்ன வேஷ பூஷணங்களுக்கும் சரியான அர்த்தம் உண்டு.

1. தூய்மையான பஞ்சகச்சம் : வெள்ளை அமைதியின் அடையாளம். வெள்ளை உடுத்தியவர்கள் சன்யாசிகள் அல்ல. சம்சாரிகளே என்று தெரிவிக்கிறது.

2. தலையில் கட்டிய சேஷ வஸ்திரம்: காவி என்பது விரக்தர்களான சன்யாசிகள் பயன்படுத்தும் வண்ணம். ஆகையால், அவர்களால் அருளப்பட்ட காவி வஸ்திரமே சேஷ வஸ்திரம். ஹரிதாசர்கள் கோபாளத்திற்கு (யாயிவார / பிக்ஷை) செல்லும் போது, தலைக்கு அலங்காரமாக சுற்றிக்கொள்கிறார்கள் மற்றும் மேலுடலையும் மூடிக்கொள்கிறார்கள். காவி சேஷ வஸ்திரம் - தியாகத்தின் அடையாளம். மனதின் தூய்மையையும் அது வெளிப் படுத்துகிறது.

3. காவி வண்ண மேலாடை: இது தாஸ்யத்தின் அடையாளம். தாம் ஹரிதாசர் என்பதை தெரிவிப்பதற்காகவும், பக்தர்களின் சேவைக்குக் கட்டுப்பட்டவர் என்றும் தெரிவிக்கிறது.

4. கோபிசந்தனம் : கோபிசந்தனத்தால் 12 நாமங்கள் மற்றும் முத்திரைகளை அந்தந்த இடங்களில் தரித்து, துளசிமாலையை அணிந்து, தாசரின் உடலில் அந்தர்யாமியாக இருக்கும் ஸ்ரீஹரிக்கு இவை அனைத்தும் அலங்காரம் என்னும் அறிவைக் கொடுக்கிறார்.

5. கெஜ்ஜெ (சலங்கை): 108 கந்தர்வர்களின் அடையாளம். லெஜ்ஜெ (வெட்கம்) விடுவிப்பதே கெஜ்ஜெ. தேகாபிமானத்தை விடுவிப் பதற்காகவும் கெஜ்ஜெ கட்டுகிறார்கள். ‘கெ^{3}ஜ்ஜெய கட்டிதவ க^{1}ளரெதெ மெட்டிதவ’.

6. தம்பூரி : தம்பூரியை உடலுக்கு ஒப்பிடுகிறார்கள். தம்பூரியின் கீழ்ப்பாகம் நம் தலைக்கும், தண்டத்தை கழுத்திற்கும், நான்கு தந்திகளை நம் நரம்புகளுக்கும் ஒப்பிடுகிறார்கள். நான்கு தந்திகள் நான்கு வேதங்களை பிரதிபலிக்கின்றன. தம்புரியின் நாதமே ஸ்ருதி. தம்புரியின் நாதம் சரியாக இருந்தால், பாடுவதற்கு சரியான சூழ்நிலை வருகிறது. இதையே ‘த^{1}ம்புரி மீட்டிதவ, ப^{4}வாப்தி தா^{4}டித^{3}வ’ என்கின்றனர். அதாவது, பகவந்தனின் ஞானம் பெற்றவன், சம்சார சாகரத்தை கடக்க வல்லவன் என்பது அபிப்பிராயம்.

7. சிகை : கிருஹஸ்தரின் தர்மம்.

8. தண்டிகெ பெத்த : தண்டிகெ பெத்த என்றால் தாசர் வாசிக்கும் தந்தி வாத்தியம். சமூகத்தின் கேடுகளை திருத்துவதற்காக இதை பயன்படுத்துகின்றனர். தாசர்கள் வைராக்ய ஜீவர்கள். ‘த^{3}ண்டிகெ^{3} பெ^{3}த்த^{1} ஹிடியுவுத^{3}க்கெ^{1}, மண்டெ பா^{3}கி^{3} நாசு^{1}த^{1}லித்தெ^{3}, ஹெண்டதி^{1} ஸந்த^{1}தி^{1} ஸாவிரவாக^{3}லி, த^{3}ண்டி^{3}கெ^{3} பெ^{3}த்த^{1} ஹிடிஸித^{3}ளய்யா’ என்றார் புரந்தரதாசர்.

9. துளசிமாலை : 54 அல்லது 108 துளசிமணிகளால் ஆன மாலையை அணிந்திருக்கின்றனர். இது ஹரிதாச தீக்ஷையின் அடையாளமாக இருக்கிறது. 'துளசிமாலே ஹாகு[1]வுதக்கெ அரச னெந்து தி[1]ருகு[3]தலித்தெ[3], சரசிஜாக்ஷ புரந்தர விட்டலனு துளசி மாலெ ஹாகி[1]சிதனு' என்று புரந்தரதாசர் தாம் ஹரிதாசர் ஆன கதையை விளக்குகிறார்.

10. தாளக்கட்டை / ஜால்ரா : தாள ஞானம் என்றால் லயத்திற் கேற்ப பாட வேண்டும் என்று பொருள். 'தா[1]ளவ த[1]ட்டித[3]வ சுர ரொளு சேரித[3]வ' என்றால் சரியான தாளம் இருப்பவன் தேவதா புருஷனோ அல்லது தேவதா சன்னிதானம் உள்ளவனாகவோ இருக்கிறான் என்று பொருள்.

11. கோபாளபுட்டி (ஜோளி / ஜோல்னா பை) : இது விரக்தியின் அடையாளம். சமுதாயத்திற்கு பாரமாக இல்லாமல் வாழ வேண்டும் என்பதே இதன் பொருள். கோபாளபுட்டியை 'ப[4]வநாஷி' என்றும் அழைக்கின்றனர். வினைப்பயன்களை தீர்க்கும் புட்டி என்று சொல்லலாம். இடது தோளில் தரித்த இதை பிக்ஷா பாத்திரம் எனலாம்.

ஸ்ரீஹரிவாயுகளின் ப்ரீத்யர்த்தமாக யார் இந்த கோபாளபுட்டியில் பொருட்களை இடுகின்றனரோ, அவர் இந்த சம்சார சாகரத் திலிருந்து விடுதலை பெறுகின்றனர். கோபாளபுட்டியில் இடப்பட்ட பொருட்கள் அக்ஷயமாகட்டும் என்ற வசனம் உண்டு. 'கோ[3]பாள பு[3]ட்டி[1] ஹிடியுவுத[3]க்கெ[1] பூ[4]ப[1]தி[1]யெந்து[3] க[3]ர்விசுதி[1]த்தே[3], ஆ ப[1]த்னி கு[1]ல ஸாவிரவாக[3]லி, கோ[3]பாளபு[3]ட்டி[1] ஹிடிஸிதளய்யா' என்று புரந்தரதாசர் தம் மனைவியின் மூலம் தனக்கு நடந்த மாற்றத்தை தெரிவிக்கிறார். அதாவது தாம் ஹரிதாசனாக மாறியதை கூறுகிறார். 'பி[4]க்[1]ஷெய ஹாகிரி ஜோளிகெ[1]கெ[3], அக்ஷயவாகு[3]வுது நிமகெ[3]'.

<u>கோபாள செய்யும் முறை</u>

ஹரிதாசர் காலையில் எழுந்து, ஆன்ஹிக, பூஜைகளை முடித்து, ஒரு சாலிகிராமத்தை சம்புடத்தில் வைத்து, அதனை பவநாஷியில் வைத்து, கோபாளத்திற்கு புறப்பட வேண்டும். ஹரிநாம

ஸ்மரணையுடன், தேவரநாமாக்களை பாடியவாறு, தம்பூரியை மீட்டியவாறு, வழியில் போகும்போது வீட்டு வாசல்களில் நின்று, அந்த வீட்டினர் கொடுத்த தன, தான்யங்களை கோபாள-புட்டியில் நிரப்பிக் கொள்ள வேண்டும். அதனை ஸ்ரீஹரி கொடுத்த பாக்கியம் என்று நினைத்து வீட்டிற்குக் கொண்டுவந்து, ஸ்ரீஹரிக்கு சமர்ப்பணம் செய்து, பிராமணருக்கு, அதிதிகளுக்கு உணவிட்டு, கிருஷ்ணார்ப்பணம் என்று சொல்லவேண்டும். ஏழ்மையிலேயே இருந்து, அன்றைக்கான உணவை மட்டும் தயாரித்து, நாளைக் கென்று எதையும் சேர்த்து வைக்காமல், இருப்பதை வைத்து திருப்தியடைந்து, மகிழ்ச்சியுடன் ஹரி பஜனை செய்தவாறு, மதுகர (பிக்ஷை) எடுத்து வாழ்க்கையை நடத்துவதே ஹரிதாச தீக்ஷை. ‘கா^{1}லிகெ^{3} கெ^{3}ஜ்ஜெ க^{1}ட்டி நீலவர்ணன குண, ஆலாபிசுத பலு ஒலக^{3} மாடு^{3}வந்த, மதுக^{1}ர வ்ருத்தி^{3} என்னது^{3}, ப^{3}லு சென்னது’ என்னும் புரந்தரதாசரின் கிருதியும் இதையே சொல்கிறது

**** கன்னட மூலம் : திருமதி. ஜெயம்மா, பெங்களூரு**

ஆராதனை	**ஹரிதாசர்களின் புண்ணிய தினங்கள்**
	மார்கசிர & புஷ்ய மாதங்களில்

* மார்கசிர பௌர்ணமி - ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தர் (சோசலே)
* மார்கசிர பகுள த்வாதசி - ஸ்ரீகுருகோவிந்தவிட்டல தாசர் (மைசூரு)
* மார்கசிர அமாவாசை - ஸ்ரீகுருஸ்ரீஷவிட்டல தாசர் (கனககிரி)
* புஷ்ய பகுள சப்தமி - ஸ்ரீநரஹரி தீர்த்தர் (ஹம்பி)
* புஷ்ய பகுள அஷ்டமி - ஸ்ரீகோபாலதாசர் (உத்தனூர்)
* புஷ்ய அமாவாசை - ஸ்ரீபுரந்தரதாசர் (ஹம்பி)

வங்கிக் கணக்கில் சந்தா செலுத்தினால், மறக்காமல் உங்கள் முகவரியை 89044 58276 எண்ணுக்கு வாட்சப் அல்லது SMS அல்லது haridasa.vijayam@gmail.comக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

தொடர்

ஹரிதாசர்களின் வாழ்க்கை வரலாறு

ஸ்ரீகுருகோவிந்தவிட்டல தாசர்

ஒரு முறை கோலாரில் இருக்கும்போது கோவிந்த ராயருக்கு ப்ராரப்த வசமாக, மூச்சிழப்பு நோய் வந்தது. பல சிகிச்சை செய்தும் நோய் குறையவே இல்லை. பணம்தான் செலவாயிற்று. அவர் மிகவும் துன்பப்பட்டு வியாதியினால் தத்தளித்தார். அப்பொழுது அவர் மந்திராலய பிரபு ஸ்ரீராகவேந்திர ஸ்வாமி களிடம் சரண்புக சங்கல்பம் புரிந்தார். மந்திராலயம் சென்று, ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிக்கு சேவை செய்து, தன் உடல் பாதையை குறைக்குமாறு வேண்டத் தீர்மானித்தார்.

அப்பொழுது ராயரின் முதல் மகளான பத்மாவதிக்கு உடல் நலம் சரியில்லை. ஜுரம் கண்டு கண் திறவாமல் படுத்த படுக்கையாகி இருந்தாள். அப்பொழுது தாய் லட்சுமிபாய் 'கோவிந்தா! இன்னும் டிக்கெட் வாங்கவில்லை. பேசாமல் மந்திராலயம் போவதை ரத்து செய்துவிடு' என்றார். கோவிந்தனோ 'நாம் ராயரை நம்பி அவர் ஆலயம் செல்லத் தீர்மானித்துள்ளோம். முன் வைத்த காலை பின் வைக்கலாகாது. அவர் மேல் பாரம் போட்டு இன்றே கிளம்பி விடலாம்' என்று கூறினார். அதே போல த்ருடமான நம்பிக்கை யுடன் கோவிந்தராயர், தாய், மனைவி, மகளுடன் மந்திராலயம் கிளம்பியே விட்டார். குடும்பத்துடன் ரயில் பிரயாணமும் செய்தார்.

ரயில் பயணத்தின்போது, இன்னொரு குழந்தைக்கும் ஜுரம் வந்துவிட்டது. மறுபடியும் லட்சுமிபாய் வீடு திரும்பிவிடலாம் என்றார். ஆனால், கோவிந்தராயர் மறுத்துவிட்டார். கோவிந்த ராயருக்கு அசாத்திய மனோபலம். எப்படியோ அவர்கள் மந்திராலயம் சென்று அடைந்தனர். ராயர், மிகவும் கடினமாக மந்திராலய மகானின் சேவை செய்தார். அங்கிருந்த பல வசதி யின்மைகளைப் பொருட்படுத்தாது, சிரத்தையாக சேவை செய்தார். மிகவும் ஆச்சரியமாக, ஓரிரு நாட்களிலேயே அவருடைய இரு குழந்தைகளுக்கும் ஜுரம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. கோவிந்தராயர், 20 நாட்கள் சேவை புரிந்தார்.

அவருக்கு வந்த மூச்சிழப்பு நோய் வந்த சுவடே இல்லாமல் மறைந்துவிட்டது. ராகவேந்திர ஸ்வாமிகளின் பூரண அருளால் எல்லோரும் நலமாயினர். கோவிந்தராயருக்கும் உடல் பலம் வந்தது. அசதி மறைந்தது. 19வது நாள் இரவு கோவிந்த ராயரின் அம்மா லட்சுமிபாயின் கனவில் ராயர் வந்து 'யோசனை செய்ய வேண்டாம். உன் மகனுக்கு ஆரோக்கியம் உண்டாகும். அது மட்டுமல்ல. நல்ல புத்திர சந்தானமும் உண்டாகப் போகிறது' என்றார். கோவிந்த ராயருக்கு மறுபடியும் இந்த வியாதி வரவேயில்லை. மந்திராலய ஸ்வாமிகள் கோவிந்த ராயருக்கு புனர்ஜீவனமே அளித்தார்.

பிறகு மந்திராலயத்திலிருந்து ஊர் திரும்பினர். ஒரு வருட காலத்தில், கோவிந்த ராயருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு 'குருராஜன்' என்று பெயரிட்டார். காலகிரமத்தில் ராயருக்கு 4பெண்களுக்கும், 5ஆண்களுக்கும் தந்தையானார். ஒரு பெரிய குடும்பஸ்தர் ஆனார். ஆனாலும், தர்ம நெறி வாழ்க்கையை அவர் விடவேயில்லை. பல க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்து, அங்குள்ள இறைவனின் மூர்த்திகளை தரிசித்தார். அவர் வேலை நிமித்தம் வெவ்வேறு ஊர்களுக்குப் போகும்போது அங்குள்ள வைஷ்ணவர்களையெல்லாம் சேர்த்து, மத்வ நவமி, ராயர் ஆராதனை ஆகியவற்றை நடத்தினார். தம் வீட்டிலேயே எல்லோரையும் அழைத்து, புராண பிரவசனங்களை செய்தார். ஒரு நொடியைக் கூட வீணாகக் கழிக்காமல், மிகவும் ஒழுங்கான நெறிமுறைகளுடன் கூடிய வாழ்க்கையை நடத்திக் காண்பித்தார். பல நூல்களைப் படித்தார். தினமும் ஆபீசுக்கு சைக்கிளில் போகும்போது, சைக்கிளின் ஹாண்டில்பாரில் ஹரி கதாம்ருதசாரத்தை எழுதி சொருகி வைத்துக்கொண்டு, படித்துக் கொண்டே செல்வார். அதாவது, ஒரு நிமிடமும் அவர் வீணாக்காது பல விஷயங்களைக் கற்றார்.

கோவிந்தராயர், சள்ளகெரெ என்கிற ஊரில் இருக்கும்போது, அவர் ஆபீஸ் அதிகாரிகள், அவர் மேல் அபவாதம் பரப்பினார்கள். ஒரு முறை இதனால் கோவிந்தராயருக்கு சங்கடம் உண்டாயிற்று.

பின்பு அந்த ஊரில் இருக்கலாகாது என்று ராயர் தீர்மானித்தார். வேறு ஊருக்கு மாற்றும்படி மேல் அதிகாரிகளுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினார். மாறுதல் வேண்டினார். ஒரு மாதம் விடுமுறை எடுத்துக்கொண்டு, மிகவும் சிரத்தையுடன் சுந்தர காண்டம் பாராயணம் செய்தார். சுந்தரகாண்ட பாராயணம் பலம் அளித்தது. 25 நாட்களுக்குள்ளாக அவருக்கு ஹாசன் என்கிற ஊருக்கு வேலை மாற்றம் கிடைத்தது.

கோவிந்தராயர் 1939ம் ஆண்டு ஹாசனுக்கு வந்து, தம் வேலையில் சேர்ந்தார். அங்கு ராயரின் வாழ்வில் ஒரு புது மலர்ச்சி ஏற்பட்டது. அவர் கொஞ்சம் கொஞ்சமாக 'ஹரிதாச தீட்சை'யின் பால் இழுக்கப்பட்டார். ஹாசனில் கல்வி இலாகாவில் அதிகாரியாக இருந்த ஸ்ரீ ஆர். ராமசந்திர ராவ் என்பவரின் சினேகம் இவருக்குக் கிடைத்தது. ஸ்ரீ ராமசந்திர ராவ், சித்ரதுர்காவை சேர்ந்த 'உரகாத்ரிவாச விட்டல' தாசரின் சிஷ்யர் ஆவார். உரகாத்ரிவாச விட்டல தாசரோ, தேவராயனதுர்காவைச் சேர்ந்த 'ஸ்ரீசுப்பராய தாசரின்' அத்யந்த சிஷ்யர். ஸ்ரீ ஆர். ராமசந்திர ராவ் 'தந்தெ வெங்கடேசவிட்டல' என்னும் அங்கிதத்தில் மிகவும் ஆழமான, ஆத்யாத்ம அர்த்தங்களைக் கொண்ட, உத்தமமான தேவர நாம கீர்த்தனைகளை இயற்றினார். ஸ்ரீராமசந்திர ராயரின் நட்பு, ஸ்ரீகோவிந்த ராயரை 'ஹரிதாச சாகித்யம்' பக்கம் இழுத்தது. கோவிந்தராயர், ராமசந்திர ராயருடன் சேர்ந்துகொண்டு, ஹரிதாச சாகித்ய பாராயணம், நித்ய பஜனை, ஏகாதசி சுத்த உபவாசம், ஏகாதசி ஜாகரணை ஆகியவற்றை செய்ய ஆரம்பித்தார். அவரும் ஹரிதாசர் ஆவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் கைகொண்டார்.

கோவிந்த ராயர், தாசர் ஆனது & அங்கிதத்தை ஸ்வீகரித்தது

ஹாசனில், ராமசந்திர ராயரின் சினேகத்தால், ராயர், தாச மார்க்கத்தில் செல்லத் தொடங்கினார். கோவிந்தராயர், சுப்பராய தாசர் பிரசுரம் செய்துவந்த 'பரமார்த்த சந்திரோதய' என்கிற ஆன்மிக மாத இதழைத் தவறாது வாசிக்கத் தொடங்கினார். இதன் மூலமாக பல தேவர நாம பதங்கள், சுளாதிகளைக் கற்றார். 'அங்கிதவில்லத தேஹ நிஷித்த' (அங்கிதம் இல்லாத உடல் வீண்)

என்கிற புரந்தரதாசரின் வாக்கியத்தை அறிந்த கோவிந்தராயர், தானும் தாசன் ஆக வேண்டும் என்றும், அங்கிதம் பெறவேண்டும் என்றும் துடித்தார். தினமும் பித்தனைப் போல அங்கிதம் பெற ஏங்கினார்.

ஸ்ரீவிஜயதாசரின் சிஷ்யர் ஸ்ரீவேணுகோபாலதாசர். அவருடைய பரம்பரையில் வந்தவர் தந்தெமுத்துமோகனவிட்டலா என்னும் அங்கிதத்தைப் பெற்ற தேவராயனதுர்காவைச் சேர்ந்த பரமப்ரிய ஸ்ரீசுப்பராயதாசர். இவரது தாச பரம்பரையை இப்போது பார்ப்போம்.

தாச சிரேஷ்டரான ஸ்ரீபுரந்தரதாசரின் சிஷ்யர் ஸ்ரீவிஜயதாசர். இவரது சிஷ்யர் ஸ்ரீவேணுகோபாலவிட்டல அங்கித பங்கநாம திம்மண்ண தாசர். அவருடைய சிஷ்யர் வியாசவிட்டல அங்கித கல்லூர் சுப்பண்ணதாசர். அவருடைய சிஷ்ய பரம்பரை இப்படியாக வளர்ந்தது. ரகுபதி விட்டலதாசர், பூவராக ரகுபதி விட்டல தாசர், ஸ்ரீபதி விட்டலதாசர், தந்தெஸ்ரீபதி விட்டல தாசர், ஸ்ரீநிதி விட்டல தாசர், ஸ்ரீவர விட்டலதாசர், ஸ்ரீமுத்துமோகன விட்டலதாசர். அவருடைய சிஷ்யரே ஸ்ரீதந்தெமுத்துமோகன விட்டலதாசர். அவருடைய சிஷ்யர்தான் நம் கதாநாயகர் குரு கோவிந்த விட்டலதாசர். இனிமேல் கோவிந்தராயர், 'குருகோவிந்த விட்டலதாசர்' என்று அழைக்கப்படுவார். (தொடரும்).

**** திரு. குரோம்பேட்டை R. ஸ்ரீதரன்**

எங்களது இதர புத்தகங்களை வாங்கிப் படித்தோ, இணையத்தில் மின் புத்தகங்களைப் படித்தோ ஆதரவளித்தால், தமிழில் மேலும் புத்தகங்களைக் கொண்டு வர எங்களுக்கு உதவியாக இருக்கும்.

தொடர்

ஹரிதாசர்களின் சிந்தனை முத்துக்கள்

அனைத்தும் நல்லவைகளே

பகவந்தனின் தரிசனத்தைப் பெற விரும்பும் பக்தனுக்கு எவ்வித தடைகளும் வராது. இத்தகைய பக்தர்கள் நேர காலங்களை எப்படி பயன்படுத்துவர், அந்த நேரங்களில் ஸ்ரீஹரியின் சிந்தனையை எப்படி செய்வர், தியானங்களை எப்படி செய்வர் என்பதை ஸ்ரீஜகன்னாததாசர் இவ்வாறு சொல்கிறார்.

:

சர்வதேசவு புண்யதேசவு
சர்வகாலவு பர்வகாலவு
சர்வஜீவரு தானபாத்ரரு மூரு லோகதலி ।
சர்வ மாதுகளெல்ல மந்த்ரவு
சர்வகெலசகளெல்ல பூஜெயு
சர்வவந்த்யன விமல மூர்த்தி த்யான உள்ளவகெ ॥ (10-4)

இது ஒரு அற்புதமான சிந்தனை. சாதனைக்கான வழியை சொல்கிறார். ஸ்ரீமதாசார்யர் தமது கிரந்தத்தில்:

தேசகாலாதஸ்தாதிஷு யத்யைகாக்ரதா பவதி தத்யைவ ஸ்தாதவ்யம் ।
தமேவ தேஷம் சேவேத தம் காலம் தாமவஸ்திதிம் ।
தானேவ போகான் சேவேத மனோ யத்ர ப்ரஸீததி ॥

எந்த நேரத்தில் மனது அமைதியாக தியானாதிகளில் ஈடு படுகிறதோ, அந்த நேரத்தில் ஸ்ரீஹரியை வணங்கவேண்டும். இந்த நோக்கத்தில் சாதனை செய்ய விரும்பும் சாதகனுக்கு, அனைத்து நேரம், காலங்களும் மதிப்பானவையே. அதாவது, இங்கு ஸ்ரீ ஹரிக்கு செய்யப்படும் தியானமே முக்கியம். சாமான்யர் ஒதுக்கும் நேரம், காலத்தையெல்லாம், எப்போதும் ஸ்ரீஹரியிடம் மனதைக் கொடுத்திருப்பவனுக்கு பிரச்னையில்லை..

நற்சிந்தனையுடன் செய்யும் தானத்திற்கு அனைவரும் சத்பாத்ரர், ஸ்ரீஹரியைக் குறித்து சொல்லப்படும் அனைத்து சொற்களும்

மந்திரங்கள், அனைத்து செயல்களும் ஸ்ரீஹரி பூஜையே ஆகும். தூய்மையான மனதிலேயே தூய்மையான சிந்தனை சாத்தியம். அதனால் தூய்மையான புண்ணியம் கிடைக்கும். இதிலிருந்து ஸ்ரீஹரியின் தரிசனம் மற்றும் இஹ பரங்களில் சுகம் கிடைக்கும்.

****கன்னடத்தில்: திரு.ஏ.பி.ஷாமாச்சார், பெங்களூரு**

போட்டி

மாதாந்திர குறும்போட்டி

டிசம்பர் 2019 - ஸ்ரீகனகதாசர்

* இம்மாத கேள்விகள் ஸ்ரீகனகதாசருக்கு சம்மந்தப்பட்டவை.
* விடைகளை வாட்சப் அல்லது மின்னஞ்சல் மூலமாக டிசம்பர் 25ம் தேதிக்குள் எங்களுக்கு அனுப்பவும்.

1. தாசருக்கு ஸ்ரீவியாசராயர் உபதேசம் செய்த மந்திரம் என்ன?
2. தாசருக்கு அங்கிதத்தைக் கொடுத்த குரு யார்?
3. மோட்சத்திற்கு யார் போவீர்கள் என்று குரு கேட்டதற்கு தாசரின் பதில் என்ன?
4. தாசரின் இயற்பெயர்?
5. தாசரால் உடுப்பி கிருஷ்ணர் சிலை திரும்பியது என்று கூறப்படுவது - சரியா தவறா?
6. தனக்குக் கிடைத்த புதையல் செல்வத்தை தாசர் என்ன செய்தார்?
7. தாசர் யாருடைய அம்சமாகக் கருதப்படுகிறார்?
8. தாசர் நிகழ்த்திய ஏதேனும் இரு பவாடங்களை (அற்புதங்கள் / மகிமைகள்) சுருக்கமாகச் சொல்லவும்.
9. ராமதான்ய சரிதையில் வரும் இரு முக்கிய கதாபாத்திரங்கள் யார் / எவை?
10. மோகன தரங்கிணி காவியத்தை இப்படியும் அழைக்கலாம். ஸ்ரீ ___ சரித்ரெ. ***

தொடர்

கேசவ நாமா

கிருஷ்ணா முராரி - ஸ்ரீவாதிராஜர்

ரக்ஷிஸோ நீ என்ன அக்ஷதிந்தலி
ரக்ஷிஸோ அவனி அதோக்ஷஜ முராரி ||18||

பூமியின் தலைவனே, ஹே அதோக்ஷஜனே, உன் முடிவற்ற கருணைப் பார்வையால் என்னை காப்பாற்று.

நானேன பேளலி நகெனகெயல்லி அக்ஷி
க்ரூரவாயிது நாரசிம்ஹ முராரி ||19||

அழிவில்லாத நீ, அழிவுள்ள ஜீவ, ஜடர்களில் அந்தர்யாமியாக இருந்து, ஜடமான கம்பத்திலிருந்து தோன்றி, மனித உடல், சிம்ம முகத்துடன் சிரித்தவாறு வந்து, உன் எதிரியை அழித்து, பக்தனை காப்பாற்றிய நாரசிம்மனே, முராரி.

அசுரகுலத்தில் பிறந்த இரு சேதனர்களின் முரண்பாடே 'நகெ நகெ'. தந்தையிடம் ஹரித்வேஷம், மகனிடம் ஹரிபக்தியின் உச்சம். ஆக, ஹரிபக்தி- ஹரித்வேஷத்தின் சண்டை, சாத்விக-தாமஸ குணங்களின் சண்டை, ஜீவ ஜீவ பேத, ஜீவ ஜட பேத, ஜீவ ஜட ஈஷ பேத - ஆகிய அனைத்தின் காட்சியே இந்த அவதாரம்.

மனிதரூபம் மற்றும் சிம்ம ரூபம் ஆகிய இரு எதிரெதிர் தர்மங்களை கொண்டிருப்பதன் மூலம் தான் அபரிமித சக்தியைக் கொண்டவன் என்றும், கம்பத்திலிருந்து வந்ததன் மூலம், தான் அனைத்து இடங்களிலும் இருப்பவன் என்றும் காட்டியிருக்கிறார்.

மெச்சிதெ நா நின்ன பக்ஷிவாஹன ஸ்வாமி
முச்சுமரெக[3]ள்யாகோ அச்யுத முராரி ||20||

விஷ்ணுவின் வாகனனான கருடன், சிறந்த பறவை என்று பெயர் பெற்றதாகும். கருடவாகனான முராரியே, நான் உன்னை

வணங்கினேன் (உன்னைக் கண்டால் பிரியம், உன்னிடம் அன்பு, பக்தி இருக்கிறது). அழிவில்லாதவனான ஸ்வாமியே, எனக்கும் உனக்கும் நடுவே மறைப்பதற்கு எதுவுமில்லை.

ஜாணத1னதி போகி3 ஜாரஸ்த்ரீயரன்னு
ஒடகூ3டி3 ஆடி3த ஜனார்த்தன முராரி ||21||

கோபிகா ஸ்த்ரீயர்களுடன் ராசக்கிரீடை ஆடிய முராரியே, நீயே ஜனார்த்தனன். கோபிகா ஸ்த்ரீகள் கிருஷ்ணனை கடவுளாகவே கண்டவர்கள். அவனே அவர்களின் கணவன் மற்றும் தலைவன் என்று நினைத்தவர்கள். அவர்களின் பக்திக்கு மனமிரங்கியவன் முராரி.

உகு3ரல்லி ஹிரண்யகன ஸீளி உரதல்லி மாலெய த4ரிஸி
உப்ப3ல்லி மெரெத உபேந்திர முராரி ||22||

தன் நகங்களினால் ஹிரண்யகசிபுவின் இதயத்தைக் கிழித்து, அதை தன் கழுத்தில் மாலையாக அணிந்தவன் நரஹரி. தேவதைகளின் ஸ்தோத்திரங்களால் மகிழ்ந்து, உபேந்திரனாக இருக்கிறாய் நீ, முராரி.

ஹிரண்யாக்ஷ த1னயனந்து3 க1ரெயெ க3ம்பதி பந்த3
க1ருவதிந்தலெ நரஹரியே முராரி ||23||

வராக ரூபத்தினால் ஹிரண்யாக்ஷனைக் கொன்று, மகனான பிரகலாதன் கூப்பிட்டவுடன், கர்வத்துடன் கம்பத்திலிருந்து வந்த நரஹரி நீ. ஹிரண்யாக்ஷனுக்காக வராக அவதாரம், ஹிரண்ய கசிபுவுக்காக நரசிம்ம அவதாரம் என்று இரண்டையும் ஸ்ரீவாதிராஜர் இந்த நுடியில் சொல்கிறார்.

அட்ட1ட3விய தபஸ்ஸு எஷ்டு தினவோ ஸ்வாமி
பட்டணகா1கி3 பாரோ கிருஷ்ண முராரி ||24||

அஞ்ஞானம் என்னும் காட்டில் பல நாட்கள் தவம் (தியானம்) செய்தேன். என் அஞ்ஞானத்தைப் போக்க, இந்த தேகம் என்னும் பட்டணத்திற்கு ஸ்ரீகிருஷ்ணனே, நீ வாராய்.

எல்லர சலஹித புல்லலோசன ஸ்வாமி
பாலிஸோ ஸ்ரீஹயவதன முராரி ||25||

தாமரைக் கண்களையுடைய ஹயவதன முராரியே, அனைவரையும் காப்பாற்றியதைப் போல, என்னையும் காப்பாற்று என்கிறார் ஸ்ரீவாதிராஜர்.

(இந்த கேசவ நாமா பாடல் முடிவுற்றது. தொடர்வது, இந்தத் தொடரில் அடுத்த கேசவ நாமா பாடல்).

<u>3. ரங்க பாரோ - இயற்றியவர் ஸ்ரீவாதிராஜர்</u>

ரங்க3 பா3ரோ நரசிங்க3 பா3ரோ ||ப||
அங்க3ஜனய்ய கோ1னேரி தி1ம்ம ரங்க3 பா3ரோ ||அப||

காவேரியின் ஆதி, மத்யாந்த ரங்க, அஹோபல நரசிம்ம, அங்க ஜனய்யனான விஷ்ணு, கோனேரி (புஷ்கரிணி) திம்மனான ஸ்ரீனிவாசனை வாராய் என்று அழைக்கிறார்.

ஸாஸிர மூர்த்தி வாஸவ வந்த்3யனெ
ஸாஸிர நாமதொ3டெ3யனெ
ஸாஸிர நாமதொ3டெ3யனெ நரஹரி
கே1ஷவ நம்ம மனெதெ3ய்வ ||1||

இந்திரனால் வணங்கப்படும், ஆயிரம் ரூபங்களைக் கொண்ட, ஆயிரம் பெயர்களைக் கொண்டவனான நரஹரி கேசவனே நம் குலதெய்வம்.

வாரணவந்த்3யனெ கா1ருண்யரூப1னெ
பு1ராணக3ளல்லி பொ1க3ளுவ

பு1ராணக3ளல்லி பொ1க3ளுவ நரஹரி
நாராயண நம்ம மனெதெய்வ ||2||

கஜேந்திரனால் வணங்கப்பட்ட, கருணாமயி, புராணங்களில் வணங்கப்படுபவனான நரஹரி, நாராயணனே நம் குலதெய்வம்.

யாத3வகு1லத3ல்லி ஸாது3க3ளரஸனெ
பே4தி3ஸி த3னுஜர கெ3லித3னெ
பே4தி3ஸி த3னுஜர கெ3லித3னெ நரஹரி
மாத4வ நம்ம மனெதெ3ய்வ ||3||

யாதவர்களை காப்பாற்றிய நரஹரி, மிகச்சாதாரணமாக அசுரர் களைக் கொன்ற, மாதவனே நம் குலதெய்வம்.

தே3வேந்த்3ர மளெகெ3ரெயெ கோ3வர்த்த4ன கி3ரியெத்தி1
ஆ கி3ரிய ஶ்ரீகிருஷ்ண கொ1டெ3 மாடி3
ஆ கி3ரிய ஶ்ரீகிருஷ்ண கொ1டெ3 மாடி3 கா1ய்த3னெ
கோவிந்த நம்ம மனெதெய்வ ||4||

மக்கள் இந்திரபூஜை செய்யாத காரணத்தால், கோபமடைந்த இந்திரன் அடைமழையை வரவழைக்க, கோவர்த்தன மலை யையே தூக்கிப் பிடித்து, பசு, மக்களைக் காத்த கோவிந்தனே நம் குலதெய்வம்.

ஸ்ருஷ்டிகெ3 க1ர்த்த1னெ து3ஷ்ட க1ம்ஸன கெ3லிது3
சிஷ்ய பரிபாலனெனிஸி
சிஷ்ய பரிபாலனெனிஸித நரஹரி
விஷ்ணுவெ நம்ம மனெதெய்வ ||5||

துஷ்டர்களைக் கொன்று (கம்சன்), சிஷ்டர்களைக் காத்த (உக்ரசேன) நரஹரி, ஸ்ருஷ்டிக்கு காரணமான விஷ்ணுவே நம் குலதெய்வம்.

**** திருமதி. ஜெயம்மா, பெங்களூரு**

தொடர்

ஹரிதாசர்களின் புதிர் கவிதைகள்

மஹிபதி தாசரின் ஸ்ரீசிவ ஸ்துதி

நக்ஷத்ர ரமணநய்யனி கொ[3]லிதுஸர வனித்தெ
நக்ஷத்ர தொ[3]ல்லப[4]ன தம்மனஸுதனஸுட்டெ
நக்ஷத்ர இல்லத[3]வன வைரி க[3]மனன தாத
நக்ஷத்ர காந்த தரனே !
நக்ஷத்ர ஜாதனக்[3]ரஜன மஸ்தகவ தரி தெ[3]
நக்ஷத்ர சஹஸ்ரவுள்ளவன த்[3]வாரவகாய்தெ[3]
நக்ஷத்ர நீனே இந்த்[3]ரா[3]தி தே[3]வதெக[3]ளிகெ[3]
கு[3]ரு மஹிபதி பிரவு[4] நக்ஷத்ர பூ[4]ஷ ஸலஹோ !

மேலோட்டப் பொருள்:

நட்சத்திர கணவனின் அப்பாவுக்கு அருளி அம்பைக் கொடுத்தவனே. நட்சத்திர கணவரின் தம்பியின் மகனை சுட்டவனே. நட்சத்திர மற்றவனின் எதிரியின் மேல் செல்பவனின் அப்பாவே. நட்சத்திர கணவனை தரித்தவனே.

நட்சத்திரத்தில் பிறந்தவனின் அண்ணனின் தலையை வெட்டியவனே. நட்சத்திரம் ஆயிரமுள்ளவனின் வீட்டின் வாயில் காத்தவனே. இந்திரன் முதலான தேவதைகளுக்கு நட்சத்திர மானவனே. குருமஹிபதியை பிரபுவாகக் கொண்ட நட்சத்திர ஆபரணம் தரித்தவனே. என்னைக் காப்பாற்று.

உள் அர்த்தம்:

கவியானவர், நட்சத்திரம் என்கிற ஒரு சொல்லை வைத்துக் கொண்டே சொற்சிலம்பம் ஆடியுள்ளார். காகண்டகி மஹிபதி தாசர் (1680-1705AD) ஒரு சிறந்த ஹரிதாசர். யோகி. அனுபவ கவி. அவர் ஆயிரக்கணக்கான தேவர நாமாக்களை புனைந்துள்ளார். அவர் மகன், ஸ்ரீகிருஷ்ண தாசரும், தந்தையின் வழியைப் பின் பற்றி, பல பாடல்களைப் புனைத்துள்ளார். மஹிபதி தாசரின் ஒரு படைப்பே இது. இதில் அவர் சிவனை விளித்துத் துதிக்கிறார்.

சிவனை விளித்துக் கூறும் பல அடைமொழிகளை நட்சத்திரம் என்னும் ஒரு சொல்லை வைத்தே அவர் விளம்புகிறார். நட்சத்திரம் என்கிற ஒரு சொல்லானது, அஸ்வினி, பரணி முதலான 27 நட்சத்திரங்களில் ஒன்றைக் குறிக்கிறது. அதை சமத்காரமாக சாதுர்யமாக கவி இங்கே உபயோகித்துள்ளார். இப்போது ஒவ்வொரு வரியின் இலக்கிய நயத்தை, உட்கருத்தைப் பார்க்கலாம்.

முதல் வரியில் 'நக்ஷத்ர' என்பது உத்தர நட்சத்திரத்தைக் குறிக்கிறது. உத்தர என்பவள் விராட ராஜனின் மகள். அவளை தமிழில் உத்தரை என்பார்கள். அவள் கணவனே அபிமன்யு. அபிமன்யுவின் அப்பா அர்ஜுனன். அர்ஜுனன், சிவனைக் குறித்து தவம் செய்து, அவர் அருளால் பாசுபதம் என்கிற அஸ்திரத்தைப் பெற்றான். அதையே தாசர் 'நக்ஷத்ர ரமணநய்யனி கொ^{3}லிதுஸர வனித்தெ' என்று குறிப்பிடுகிறார்.

இரண்டாவது வரியில் வரும் 'நக்ஷத்ர' என்கிற சொல், ரேவதி நட்சத்திரத்தைக் குறிக்கிறது. ரேவதி, பலராமனின் மனைவி. பல ராமனின் தம்பியாக பிறந்தவனே கண்ணன். கண்ணனின் மகனே பிரத்யும்னன். அந்த பிரத்யும்னன், மன்மதனின் இன்னொரு அவதாரம். அந்த மன்மதனை நெற்றிக்கண்ணால் சுட்டெறித்தவர் சிவன். அதையே தாசர் இங்கு 'நக்ஷத்ர தொ^{3}ல்லப^{4}ன தம்மன ஸுதனஸுட்டெ' என்கிறார்.

மூன்றாவது வரியில் வரும் 'நக்ஷத்ர' என்னும் சொல் சிரவண (திருவோணம்) நட்சத்திரத்தைக் குறிக்கிறது. சிரவணம் என்றால் வடமொழியில் காது - செவி என்று பொருள். 'நக்ஷத்ர இல்லதவன' என்றால் பாம்பு என்று பொருள். பாம்புக்கு காது கிடையாது. அதை 'கட்செவி' என்பார்கள். வைரி என்றால் எதிரி. பாம்புக்கு எதிரி மயில். மயில் மேல் செல்பவன் முருகன் அல்லது ஷண்முகன். அவன் தந்தையே சிவன்.

நான்காம் வரியில் வரும் 'நக்ஷத்ர', ரோகிணி நட்சத்திரத்தைக் குறிக்கிறது. ரோகிணியின் கணவனே சந்திரன். சந்திரனை தன்

தலையில் அணிந்தவன் சிவன். அதையே கவி 'நக்ஷத்ர காந்த தரனே' என்று சொல்கிறார்.

ஐந்தாம் வரியில் வரும் 'நக்ஷத்ர', புஷ்ய நட்சத்திரத்தைக் குறிக்கிறது. நக்ஷத்ர ஜாதன என்றால் புஷ்ய நட்சத்திரத்தில் பிறந்தவன் என்று பொருள். முன்பொரு சமயம், த்ரிபுராசுரர்கள் என்பவர்கள் இருந்தார்கள். தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன் மாலி என்பவர்களே த்ரிபுராசுரர்கள். இவர்களில் மூத்தவனான தாரகாக்ஷன், புஷ்ய நட்சத்திரத்தில் பிறந்தான் என்று புராணம் கூறுகிறது. இவர்களை சிவன் சம்ஹரித்தார்.

அடுத்த வரியில் வரும் 'நக்ஷத்ர', ஹஸ்த நட்சத்திரத்தைக் குறிக்கிறது. ஹஸ்த என்றால் கை. நக்ஷத்ர சஹஸ்ரயுள்ளவன என்றால் ஆயிரம் கைகளை உடையவன் என்று பொருள். அவனே பாணாசுரன். இந்த பாணாசுரனின் வாயிலைக் காப்பவர் சிவன் என்று புராணம் கூறுகிறது.

ஏழாவது வரியில் வரும் 'நக்ஷத்ர', ஜ்யேஷ்டா (கேட்டை) நட்சத்திரத்தைக் குறிக்கிறது. ஜ்யேஷ்டா என்றால் மூத்தவன் / தலைவன் என்று பொருள். இந்திரன் போன்ற தேவதைகளுக்கு தலைவன் சிவன். தாரதம்யப்படி பார்த்தால், சிவன் ஐந்தாம் வகுப்பில் வருகிறார். இந்திராதி தேவதைகள் எட்டாம் வகுப்பில் வருகிறார்கள். ஆகவே, சிவன் அவர்களுக்கு தலைவன்.

எட்டாம் வரியில் வரும் 'நக்ஷத்ர', ஆஸ்லேஷ (ஆயில்யம்) நட்சத்திரத்தைக் குறிக்கிறது. ஆஸ்லேஷ என்றால் நாகம் என்று பொருள் உண்டு. நக்ஷத்ர பூஷ என்றால் பாம்பை ஆபரணமாகக் கொண்டவன் என்று பொருள். சிவனுக்கு 'நாகபூஷணன்' என்று பொருள் உண்டு. சிவன் தன் பிரபுவாக (ஸ்வாமியாக), மஹி பதியை (லட்சுமிபதி விஷ்ணுவை) வழிப்படுகிறார். அதையே தாசர் 'கு3ரு மஹிபதி பிரவு4 நக்ஷத்ர பூ4ஷ; என்று குறிப்பிடுகிறார். அப்பேர்ப்பட்ட சிவன் நம்மைக் காப்பாற்றட்டும் என்று 'சலஹோ' என்று பிரார்த்திக்கிறார் தாசர். (தொடரும்).

**** திரு. குரோம்பேட்டை R.ஸ்ரீதரன்.**

சிறப்புக் கட்டுரை

ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தர்

** திரு. குரோம்பேட்டை R.ஸ்ரீதரன்

இந்த ஆண்டு 2019, ஸ்ரீ வித்யா பிரசன்ன தீர்த்தரின் 120வது ஜயந்தி ஆண்டு மற்றும் 50வது ஆண்டு ஆராதனை ஆண்டு. அவர் சோஸலே வியாசராஜ மடத்து பீடாதிபதியாக இருந்து, 350க்கு மேற்பட்ட தேவர நாமாக்களை இயற்றியுள்ளார். அவரின் ஆராதனை டிசம்பர் 11ம் தேதி வருகிறது. அவரின் நினைவாக இந்த தேவர நாமம் வெளியிடப்படுகிறது.

ஸ்ரீவியாசராஜ ஸ்வாமிகள் '**பிரமேய நவ மாலிகா**' என்கிற இந்த ஸ்லோகத்தை இயற்றியுள்ளார்.

ஸ்ரீமன் மத்^{4}வ மதே ஹரி: பரதர: சத்யம் ஜக^{3}த் தத்வதோ ।
பே^{4}தோ^{3} ஜீவ க^{3}ணா ஹரேரனுசரா: நீசோச்ச பா^{4}வம் க^{3}தா: ।
முக்திர் நைஜ சுகா^{2}னுபூ^{4}திரமலா ப^{4}க்திஸ்ச தத் சாதனம் ।
ஹ்யக்ஷாதி^{3} த்ரிதயம் பிரமாணமகி^{2}லாம்னாயைக வேத்^{3}யோ ஹரி: ॥

இந்த ஸ்லோகத்தில் மத்வ சாஸ்திர பிரமேயங்கள் சொல்லப் பட்டுள்ளன. 1. ஹரி சர்வோத்தமத்வம். 2. ஜகத் சத்யத்வம். 3. பேதம் என்பது தாத்விக உண்மை. 4. ஜீவர்கள் ஹரி தாசர்கள். 5. ஜீவர்களுள் தாரதம்யம் உண்டு. 6. முக்தி என்பது ஜீவனின் ஸ்வரூப ஆனந்தத்தை அனுபவிப்பதுதான். 7. தூய்மையான பக்தியே முக்திக்கு காரணம். 8. ப்ரத்யக்ஷம் முதலிய மூன்றுதான் பிரமாணம். 9. எல்லா வேதங்கள் மூலமாகத்தான் ஹரியை அறிய முடியும்.

இதை ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தர், இப்படியாக பாடியுள்ளார்.

ராகம்: தேசிய தோடி. தாளம்: ஆதி

ஹனுமன மதத^{3}லி அனுமான பே^{3}ட^{3}வோ ।
மனமுட்டி ப^{4}ஜிஸெலொ எலெ மனவே ॥ப॥

சனகாதி3 வந்தி3த மனஸிஜ ஜனக |
வனஜ நயன ஹரிக3னுமத வாத3ந்த2 ||அனுபல்லவி||

ஹரியே சர்வோத்தம விதி3ப4வாதி3க3ளெல்ல
அனுசரரிவனிகெ3 பரதந்த்ரரு |
விவித4 தாரதம்ய நிருத பொந்தி3ருவரு
சகல ஜக3ங்களு நிஜாவந்து3 போ3தி4ப ||1||

முகுதி யெம்பு3து3 நிஜானந்த3த3 அனுப4வ
ப4குதி பாட3யலு சாத4னவு |
ப்ரக்ருதி சம்யுதவாத3 தே3ஹவ களெயலு
யுகுதி பே3ரில்லவெந்து3 ப4ரதி சாருவந்த2 ||2||

நயனகெ கோ3சர ஒண ஊஹெயிந்த3லி
திளியலு அரியனு அளவல்லவு |
நிக3மக3ளிந்த3லே அரித ஞானிக ப்ர
சன்ன நாகு3வானெந்து த்4ருடதி3ந்தருஹீவ ||3||

[பல வாசகர்கள், கன்னட தேவர நாமாவிற்கு தமிழாக்கம் அல்லது தமிழ்மொழிபெயர்ப்பு செய்து வெளியிடுங்கள் என்று கேட்டுக் கொண்டதால், இதை தமிழாக்கம் செய்துள்ளேன்].

[பல்லவி]
அனுமனின் மதத்தில் ஐயம் வேண்டாம்
மனமுருகி பஜியுங்கள் ஹே மனமே.

[அனுபல்லவி]
சனகர் போன்றோரால் வணங்கப்பட்ட மன்மதனின் தந்தை.
தாமரைக்கண்ணன் ஸ்ரீஹரிக்கு சம்மதமாக இருக்கக்கூடிய...

[சரணங்கள்]
ஸ்ரீஹரிதான் எல்லோரைவிட மேலானவர். பிரம்மன், சிவன் இவர்களெல்லாம் ஸ்ரீஹரிக்கு தொண்டர்கள் மற்றும் அவரின் ஆளுகைக்கு உட்பட்டவர்கள். அவர்களிடம் இயற்கையாக எப்போதும் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. எல்லா பிரபஞ்சமும் எப்போதும் உண்மையானவை என்று போதிக்கும்..

முக்தி என்பது இயல்பு நிலையின் மகிழ்வு அனுபவமே. பக்தி ஒன்றே அதைப் பெறும் வழியாகும். ப்ரக்ருதி சம்பந்தமுள்ள (லிங்க) தேகத்தை விடுவதே முக்திக்கு படி. இவற்றையெல்லாம் தர்க்க ரீதியில் கூறுகின்ற...

கண்ணுக்கு புலப்படாதவன். வரட்டு ஊகத்தால் அறியப்படாதவன் ஸ்ரீஹரி. அவனின் மகிமை அளவற்றது. மறைகள் மூலமாகவே அவனை அறியக்கூடிய ஞானிக்குதான் அவன் தோன்றுவான் என்று உறுதியாக விளம்புகின்ற...

***

தொடர்

மனப்பாடப்பகுதி

ஐந்து - எண்ணாலான தகவல்கள்

பஞ்ச பூதங்கள்	பஞ்ச அக்னிகள்	பஞ்ச தன்மாத்ர
ப்ருத்வி (நிலம்)	ஜனனி	கந்த (முகர்தல்)
அபு (நீர்)	பித	ரஸ (சுவை)
தேஜஸ் (நெருப்பு)	பூ (பூமி)	ரூப (பார்வை)
வாயு (காற்று)	வாரித (மேகம்)	ஷப்த (சத்தம்)
ஆகாச (ஆகாயம்)	அம்பர (ஆகாயம்)	ஸ்பர்ஷ (தொடுதல்)

ஸ்ரீஹரியின் பஞ்ச ரூபங்கள்	அந்த ரூபங்களுக்கேற்ற ஸ்ரீலட்சுமிதேவியின் ரூபம்
அனிருத்த	ஷாந்தி
பிரத்யும்ன	க்ருதி
சங்கர்ஷண	ஜெயா
வாசுதேவ	மாயா
நாராயண	லட்சுமி

பஞ்ச கோஷங்கள் (Koshas)
அன்னமய
பிராணமய
மனோமய
விக்ஞானமய
ஆனந்தமய

* ஆதாரம் - ஹரிகதாம்ருதசாரம்.

தொடர்

பகவத்கீதை

கீதா சாரம் - ஸ்ரீவியாசராஜர்

ஸ்லோகம்:

யார ப4க்தியு என்ன பாதா3ப்ஜத3ல்லி ।
கோ4ர சம்ஸாரயாதனெ அவரிகில்லா ।
ஷரீரவே க்ஷேத்ரவெந்தெந்து3 திளியோ ।
மரெயதே க்ஷேத்ரக்ஞனெந்தென்ன திளியோ ।।6

பத:

ஷரீரதொளகி3த்து3 பா1பி1ல்ல । துக்க2லேபி1ல்ல । ஆகாஷவு எல்லா ।
யாதரிந்து3ட்டி1த்து1 ஈகுண । மூருசத்3கு3ண கேளய்ய ப2ல்கு3ண ।
சுக2து3க்க2 ஸமமாடி நோடு3 நீ । ஈட்3யாடு3 நீ ।
பி3ரம்மான நோடோ3 நீ ।
சந்த்ர சூர்யர தேஜ நனதய்யா । கு3டா3கேஷய்ய ।
அன்னபசன வெனத3ய்யா ।।6

25 தத்வங்களால் ஆன இந்த தேகத்தை ஒரு க்ஷேத்திரம் என்று அறிய வேண்டும். இந்த தத்வங்கள் அனைத்தும் ஸ்ரீஹரியின் கட்டுப்பாட்டில் உள்ளவையே. இந்த தத்வங்களில் பகவந்தன் நிலைத்திருப்பதால், அவனுக்கு க்ஷேத்ரக்ஞன் என்ற பெயர் உண்டு. ஸ்ரீஹரியின் சரணங்களில் யாருக்கு பக்தி இருக்கிறதோ, அவருக்கு வாழ்க்கையின் பிரச்னைகள் (பிறப்பு இறப்பு சுழற்சி) இருப்பதில்லை.

த்ரிகுணமானி (மூன்று குணங்களுக்கும் அதிபதியான) மகாலட்சுமி யைவிட சிறந்தவனான பகவந்தன், அ-ஸ்வதந்த்ரனான ஜீவனுக்கு மட்டும் பாவ- புண்ணியங்கள், சுக- துக்கங்களின் பலன்களைக் கொடுக்கிறான். இதனால், அந்த பகவந்தனுக்கு எவ்வித பலன்களும் / பிரயோஜனமும் இருப்பதில்லை. புருஷோத்தம யோகத்தின் சாராம்சத்தை இந்த நுடி சொல்கிறது.

ஸ்லோகம்:

நானெ உத்தம மனஸூ என்னல்லி மாடோ ।

ஞான அஞ்ஞான பேளுவெ திளிது3னோடோ ||
ஞான துர்லப4 அவரவர ப4க்திக3ளந்தெ |
நானு கொடுவேனு ப2லவ மனஸு ப3ந்த3ந்தெ ||7

பத:
ஸ்மரணெ மாடு3த தே3ஹ பி3டு3வரோ | என்ன படெ3த3வரு |
ப3லுப4க்தி மாடு3வரோ |
அனந்தசேதன ஸுளிவேனு | ஹரி சுலப4னு | மத்தெ ஜனனவில்லவகெ3 |
என்ன ப4க்தரிகில்ல நாஷவு | ஸ்வர்க்க தா3ஷவு |
பிட்டு சரணப4குதீயு ||7

க்ஷர மற்றும் அக்ஷர புருஷர்களைவிட உத்தமனான காரணத்தால் அவன் புருஷோத்தமன். பகவத்கீதையின் வரும் 'மன்மனாபவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்கரு" வசனத்தையே இங்கு 'மனசு என்னல்லி மாடோ' என்று கூறியிருக்கிறார். 'ஞான விக்ஞான பேளுவெ' - அதாவது, விஷ்ணு சர்வோத்தமத்வத்தை விளக்கும் சாஸ்திரங்களைப் படிப்பதே ஞானம். பகவந்தனின் குண பூர்ணத்வம், தோஷங்கள் அற்ற தன்மை, அஷ்டகர்த்ருத்வ மற்றும் மகிமைகளை அறிந்துகொள்வதே விசேஷ ஞானம்.

ஏழாம் அத்தியாயம், 3லிருந்து 19வரையிலான ஸ்லோகத்தின் சாரமே 'ஞான துர்லப'. 'அவர பக்திகளந்தெ, நானு கொடுவெனு பலவ, மனசு பந்தந்தெ' என்றால், நான்கு விதமான பகவத் பக்தரின் மற்றும் பிற தேவதைகளை வழிபடும் பக்தர்களின் பக்திக்கு தக்கவாறு பலன்களைக் கொடுக்கிறேன். பலன்களைக் கொடுப்பதில், பகவந்தனுக்கு இருக்கும் பூர்ண ஸ்வாதந்த்ரயத்தை 'மனசு பந்தந்தெ' என்பதில் தெளிவுபடுத்துகிறார்.

தேகத்தை விடும் இறுதிக்காலத்தில், யார் பகவந்தனை நினைக் கிறார்களோ, அவர்கள் அவனையே அடைகிறார்கள். இந்த நிலையை அடைய வேண்டுமெனில், நிரந்தரமான சிரவணம் (பகவந்தனின் சிறப்புகளை / குணங்களைக் கேட்டல்), ஸ்மரணம்

(பகவந்தனின் சிறப்புகளை / குணங்களை நினைத்தல்), கீர்த்தனை களை பக்தியுடன் செய்யவேண்டும்.

* 'அந்தகாலே ச மாமேவ' (8-5).
* 'தஸ்மாத் சர்வேஷு காலேஷு மாமனுஸ்மர' (8-7)
* 'ஸததம் கீர்த்தயந்தோ மாம்' (9-14).

மோட்சத்தை அடையவேண்டுமெனில், ஸ்ரீமதாசார்யர் சொல்வது இது. 'சந்ததம் சிந்தயேனந்தம் அந்தகாலே விசேஷத:'. இப்படி செய்தால், மறுபிறவி வாய்ப்பதில்லை. 'என்ன பக்தரிகில்ல னாஷவு' என்றால், அவனின் பக்தர்களுக்கு நரக அவஸ்தைகள் இருப்பதில்லை என்று பொருள். 'ஸ்வர்க்கதாஷவு பிட்டு சரண பகுதிய' என்றால், பகவத் பக்தர்களுக்கு, எப்போதும் பரமாத்மனின் பாதாரவிந்தங்களையே நினைத்து பூஜிக்கும் ஆசை மட்டுமே இருக்கும். அதைத்தவிர, வேறு எந்த பலன்களையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை.

ஸ்லோகம்:
கிருஷ்ண தோரிஸு நின்ன விபூ4தி ரூப |
இஷ்ட பூர்த்திய ஆகெ3லோ எனகெ3 ஸ்ரீப |
ராமனானய்ய ராஜர கு3ம்பினல்லி |
ஸோம நானய்ய தாரக1ர மண்டலத3ல்லி ||8

பத:
அக்ஷரதொ3ளகெ3 அகாரனு | குணஸாரனு | பக்ஷிகளல்லி நானு |
கருடனு சகல ஜாதிக3ளல்லி | ஸ்ரேஷ்ட தனத3ல்லி | என்னரூப திளியல்லி |
தோரிஸோ ஸ்ரீகிருஷ்ண நின்ன ரூப | நானா ரூப | அர்ஜுனனோடோரூப
கண்டனு தன்னனு ஸஹிதாதி3 | ஹரி தே3ஹதி3 | பிரம்மாண்ட3க3ளல்லி ||8

பகவத்கீதையின் 10வது அத்தியாயமே விபூதி யோகம். இதில் சுமார் 20 ஸ்லோகங்களில், தனது பல்வேறு விபூதி ரூபங்களை நிரூபிக்கிறான் ஸ்ரீகிருஷ்ணன்.

வியாசராஜரின் கீதாசாரத்தின்படி, அர்ஜுனன் கிருஷ்ணனிடம் இவ்வாறு கேட்டுக் கொள்கிறான். 'கிருஷ்ண தோரிஸு நின்ன விபூதி ரூப'. தோரிஸு என்றால், என் கண்களுக்கும் தெரியும்படி காட்டு என்று பொருள். பகவந்தன், அனைத்து உலகங்களையும் நிர்மாணித்து, அதனை தன்னில் அடக்கிக்கொண்டிருப்பதால் 'கிருஷ்ணா' என்று அழைக்கப்படுகிறான். பகவந்தன், வெவ்வேறு ஜீவர்களில், பொருட்களில், தனதே ஆன விபூதி ரூபங்களில் அவற்றில் இருந்து, அவர்களை / அவற்றை நிர்வகித்து, நடத்துகிறான்.

கிருஷ்ண நாமத்தின் சிறப்புகளை விளக்குகிறார். 'ராம நானய்யா ராஜர கும்பினல்லி'. சூர்ய வம்சத்தில் அவதரித்த ராமாவதாரத்தின் சாட்சாத் விபூதி ரூபத்தை விளக்குகிறது. 'சோம நானய்யா தாரக மண்டலதல்லி' - சந்திர வம்சத்தில் அவதரித்த கிருஷ்ண அவதாரத்தையும், சந்திரனில் இருக்கும் விஜாதிய விபூதி ரூபத்தையும் குறிக்கிறது. அர்ஜுனனுக்குக் காட்டிய விஸ்வ ரூபத்தை 'நானா ரூப' என்கிறார். - அதாவது அந்த விஸ்வ ரூபத்தில் பிரம்மாண்டம், அனைத்து ஜீவராசிகள், பிரக்ருதி, தேவதைகள், கௌரவ பாண்டவர்கள் மற்றும் தன்னையும் (அர்ஜுனன்) ஸ்ரீஹரியின் உதரத்தில் கண்டு அர்ஜுனன் மெய் மறந்து நிற்கிறான்.

****ப்ராணேஷ கேசவ தாசர். பெங்களூரு**

தற்போதைய தொடர்கள் முடிந்தபிறகு, உங்கள் ஆதரவுடன் அடுத்து நம் பத்திரிக்கையில் வரவிருக்கும் தொடர்கள்: சுளாதி பக்கங்கள், அரிய தேவர நாமாக்கள், ஹரிகதாம்ருதசார சிறப்பு குறுக்கெழுத்துப் போட்டி, ஹரிதாச சாகித்யத்தில் வரும் அரிய கன்னட பதங்களுக்கு தமிழ் அர்த்தங்கள் & மேலும் பல.

தொடர்

ஹரிகதாம்ருதசார கட்டுரைகள்

கிரந்தத்தின் உட்பொருள்

**** கன்னட மூலம்: திரு. சி.எஸ்.ஹுச்சுராவ்**

ஹரிகதாம்ருதசாரம் - ஸ்ரீஜகன்னாததாசரின் சிறந்த கிரந்தம். தாச சாகித்யத்தில் இயற்றப்பட்ட மிகவும் அபூர்வமான காவியம். க்ருதி ரூபியான ஸ்ரீஹரி, பக்தரின் மனதில், நாக்கில், எண்ணங்களில் நிலைகொண்டு தினம்தோறும் நல்அதிர்வினைத் தரும் சப்த-பிரம்மன். இந்த காவியத்தின் 32 சந்திகளையும் பக்தர்கள் பாராயணம் செய்யும் விதத்தில், இந்த க்ருதி-பிரம்மன் கண்டிப்பாக தரிசனம் தருவார். இதை கற்றுத்தரும், படிக்கும், பாடும் பக்தர்களுக்கு வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளும் தைரியம் மற்றும் உற்சாகத்தை இந்த கிரந்தம் தருகிறது.

மருத்துவர் ஒரு நோயாளிக்குத் தேவையான மருந்துகளை ஒரு சீட்டில் எழுதித் தருவதைப் போல, நமது பவ-ரோகத்தை (பிறப்பு இறப்பு சுழற்சி) தீர்ப்பதற்கான மருந்தினை, இந்த காவியத்தின் வடிவில் எழுதித் தந்திருக்கிறார்கள். இதை பலமுறை படிக்குமாறு சொல்கிறார்கள். அப்படி இதை பலமுறை படித்து, பவ-ரோகத்தை தீர்த்துக்கொண்டவர்கள் பலர் உள்ளனர். மேலும் இதை பாராயணம் செய்பவர்களுக்கு, இந்த ஸ்லோகங்கள், அவை சொல்லும் உள் அர்த்தங்கள் ஆகியவற்றால் அவர்களின் உள்மனதிற்கு ஸ்ரீஹரியின் தரிசனம் கிடைக்கத் துவங்குகிறது. மனது தெளிவடைகிறது. வாழும் வாழ்க்கையை பார்க்கும் விதத்தில் மாறுபாடு வருகிறது. இதைப் படிப்பவர்கள், ஸ்ரீஹரியின் சர்வோத்தமத்வத்தை அறிந்து, அவரிடம் நெருங்கிப் போகின்றனர். இப்படிப்பட்ட சிறப்புகளைப் பெற்ற கிரந்தமே 'ஸ்ரீஹரிகதாம்ருத சாரம்'.

ஸ்ரீஹரியின் கதையே ஜீவனுக்கு அமிர்தம். மரணத்தை வென்று, மகிழ்ச்சியைத் தரும் அமிர்தம். அத்தகைய அமிர்த தத்வத்தின் சாரமே 'ஸ்ரீஹரிகதாம்ருதசாரம்'. 'மத்வமதத்தில் சொல்லப்பட்டி ருக்கும் ஸ்ரீஹரிபக்தி தத்வங்கள், தந்திரங்கள் ஆகியவை இங்கு சொல்லப்பட்டிருக்கின்றன. வேத புராணங்கள், உபநிஷத்கள், யோக சாஸ்திரங்கள், ஸ்ம்ருதிகள், இதிகாசங்கள் ஸ்ரீமதாசார்யரின் தத்வ கிரந்தங்கள் என இவை அனைத்தையும் முழுவதுமாகப் படித்து

அறிந்து, அவற்றிலிருக்கும் விஷயங்களை கிரகித்து, அதிலிருந்து வெளிவந்த பக்தரச அமிர்தமே, ஹரிகதாம்ருதசாரம்.

ஹரிகதாம்ருதசாரத்தின் பின் இவ்வளவு விஷயங்கள் / பொக்கிஷங்கள் உள்ளன. மத்வரின் சித்தாந்தத்தை விவரிக்கும் நூல் என்று இந்த கிரந்தத்தின் எல்லையை வரையறுத்துவிட முடியாது. சாஸ்திரங்களில், வேத உபநிஷத்களில் மறைந் திருக்கும் அரும் தத்வங்களை, சாதாரண மக்களுக்கு எட்டாமல் இருந்த, சமஸ்கிருத மொழியில் சொல்லப்பட்டிருந்த கருத்துகளை, கன்னட மொழியில் சரளமான நடையில் அனைவருக்கும் புரியுமாறு இயற்றியிருக்கிறார் தாசர். ஆனால் சமஸ்கிருத கிரந்தங்களுக்கு நடுவே கன்னடத்தில் இயற்றப்பட்ட இந்த ஹரி கதாம்ருதசாரம் பக்தர்களை நெருங்காமல் போய்விடும் அபாயம் இருந்தது. தாச சாகித்யத்தின் மிகச்சிறந்த கிரந்தமானது யாருக்கும் எட்டாமல் போய்விடக்கூடிய சூழல் இருந்தது. ஆனால் அப்படி நடக்கவில்லை. பக்தர்கள் இந்தக் கிரந்தத்தை ஏற்றுக் கொண்டு, இதிலுள்ள கருத்துகளை கற்றறிந்து அமரர் ஆகியிருக்கின்றனர். இதுவே மிகவும் மகிழ்ச்சிகரமான விஷயமாகும்.

நம் வாழ்க்கையை சுத்தப்படுத்தும், தரம் உயர்த்தும் ஒரு அரு மருந்தாக ஹரிகதாம்ருதசாரம் இருக்கிறது. இந்த மாற்றம் சுலபமான செயல் அல்ல. எப்போதும் கெட்ட / தேவையற்ற விஷயங்களைப் பற்றி சிந்தித்திருக்கும் மனதை வெல்லும் செயலாகட்டும், கோபம்-த்வேஷம் ஆகியவற்றிலிருந்து வெளி வருவதாகட்டும் மனிதனுக்கு மிகவும் கடினமான செயலாகும். ஆகையால், நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களின்போதும் ஸ்ரீஹரியை நினைத்துக்கொண்டே இருந்தால், மேற்சொன்ன மாற்றமானது மெதுவாக சாத்தியப்படும். தினமும் செய்யும் குளியலிலிருந்து, முத்ரா-தாரணம், பூஜை, பிம்போபாசனை, சிரார்த்தம் முதலானவை, சாப்பிடும்போது இப்படி ஒவ்வொரு செயல்களின்போதும், ஸ்ரீஹரியை நினைத்து, சாதனை வழியைப் பிடிக்கவேண்டும் என்று ஹரிகதாம்ருதசாரம் சொல்கிறது.

ஒரு ஸ்லோகத்தில் ஜகன்னாததாசர் இவ்வாறு சொல்கிறார்.

மூரு கா1லங்க3ளலி து1தி1ஸே ஷ
ரீர வாங்மன ஷுத்தி3மாள்பு1து3
தூ3ரகை3ஸுவுத1கி1ள பா1ப1ஸமூஹ ப்ரதி1தி3னவு |
[சந்தி 32. ஸ்லோகம் 55]

இது பக்தர்களின் மனதில் அமைதியை நிரப்புகிறது. இதுவே வாழ்க்கையில் நமக்குத் தேவையான ஒன்றாகும்.

மளே பி3ஸிலு ஹஸி த்1ருஷே ஜயாஜய
க2ளர நிந்தா3னிந்தே3 ப4யக3ளி
க3ளுக1த3லெ மத்தா3னெயந்த3தி3 சரிஸு த4ரெயொளகெ3 ||
[சந்தி 12 ஸ்லோகம் 18]

ஸ்ரீஹரியின் நற்குணங்களை நன்கு அறிபவர்கள், இந்த வாழ்க்கை என்னும் கடலை பிரச்னையில்லாமல் கடப்பார்கள். எனவே, தர்ம, அர்த்த, காமம் ஆகியவற்றைக் குறித்து எண்ணாமல், அந்த விஷ்வ குடும்பி (ஸ்ரீஹரி) கொடுத்த கணான்ன (ஒரு பருக்கை அரிசி) மற்றும் குத்ஸித (சிறிய கம்பளித் துண்டு) ஆகியவற்றையே பெரும் வரமாக / உதவியாகக் கருதி அவரின் சரணார விந்தங்களை வணங்கவேண்டும். (சந்தி 5 ஸ்லோகம் 7)

ஹரிகதாம்ருதசாரத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீஹரியானவர் மிகவும் கருணை மிக்கவர். 'பாலகன கலபாஷெ ஜனனியு கேளி சுகபடுவந்தே' (ஒரு மழலையின் பேச்சுகளைக் கேட்கும் தாய் எப்படி மகிழ்வாளோ அப்படி ஸ்ரீஹரியும் தன் பக்தர்களின் பிரார்த்தனைகளை மகிழ்ச்சியுடன் ஏற்கிறார்) என்று பக்தர்களின் ஸ்தோத்திரங்களுக்கு செவிசாய்க்கிறார். 'ஒந்தக்ஷர தப்பாகி உச்சரிசிதரு பாப' (ஒரு எழுத்து தவறாக உச்சரித்தாலும் அது பாவம்) என்று முன்னர் சொன்னதை, இந்த ஸ்தோத்திரமானது மறுத்திருக்கிறது. ஒரு தாயைப் போல பக்தர்களின் விண்ணப்பங்களைக் கேட்டு மகிழ்கிறார் ஸ்ரீஹரி என்று தைரியம் கொடுக்கிறது.

தனக்குக் கிடைத்த செல்வத்தை யாருக்கும் கொடுக்காமல் தானும் எதுவும் செய்யமுடியாமல் ஒரு பாம்பு எப்படி அதை பாதுகாத்து வருமோ, அதைப்போல ஸ்ரீஹரியும் தன் பக்தர்களை அரவணைத்து பார்த்து மகிழ்ந்திருப்பார் என்கிறார் தாசர். பெற்றோர் தன் குழந்தைகளுக்கு வந்த பிரச்னைகளைத் தீர்த்து, அவர்கள் கேட்டவற்றை எல்லாம் வாங்கிக்கொடுத்து, பார்த்துக் கொள்வதைப்போல, ஸ்ரீஹரியும் தன் பக்தர்களைக் காப்பாற்றுகிறார். எப்போதும் நம்கூடவே வரும் நிழலைப் போலவே ஸ்ரீஹரியும் தன் பக்தர்களுடன் இருக்கிறார். கண்களை இமை காப்பதுபோல, பற்கள் பழங்களை நன்கு கடித்து, அவற்றின் சாறினை மட்டும் நமக்கு அனுப்புவதைப்போல, ஸ்ரீஹரியும் நம்மை காப்பாற்றுவதற்கு ஓடி வருகிறார்.

ஒரு இருட்டறையில் ஒளிந்திருந்து, தன் குழந்தை தன்னைக் காணாமல் அழுவதைக் காணும் தாய், எப்படி நமுட்டுச் சிரிப்புடன் வெளியில் ஓடோடி வந்து அந்தக் குழந்தையை வாரி அணைத்துக் கொஞ்சுவாளோ, மதுசூதனனும் பக்தர்களைக் காப்பாற்றுகிறார். ஸ்ரீஹரியின் இந்த கருணையை விளக்குவதே ஹரிகதாம்ருதசாரத்தின் உட்பொருளாகும்.

பக்தர்களின் மனங்களுக்கும், வேதங்களில் சொன்னவற்றிற்கும் ஸ்ரீஹரியானவர் மிகவும் தூரமானவர் (அவற்றினால் தொடர்பு கொள்ளமுடியாதவர்) என்று சொன்னால், பிறகு அவரை நம்மால் மகிழ்ச்சிப்படுத்தவே முடியாதா என்னும் பக்தனின் கேள்விக்கு, அப்படியில்லை என்று சமாதானப்படுத்துகிறார் ஜகன்னாததாசர். ஸ்ரீஹரியானவர், பக்தர்களின் தூய்மையான பக்திக்கு கண்டிப்பாக செவிசாய்க்கிறார், தன்னை நினைப்பவர்களின் அருகிலேயே எப்போதும் இருக்கிறார், அவர்களின் பாடல்களுக்கு தன்னை வெளிப்படுத்துகிறார் என்கிறார் தாசர்.

ஜகத்-சத்யம் என்னும் பல தத்வங்களை உள்ளடக்கிய மஹா-அமிர்தமே ஹரிகதாம்ருதசாரம். அதுவே இந்த கிரந்தத்தின் உட் பொருளாகும். இந்த கிரந்தம் சாதகர்களின், அறிஞர்களின் கை

விளக்காகும். மத்வ தத்வங்களுக்கு காவிய நடையில் எழுதப்பட்ட உரை என்றும் இந்த கிரந்தத்தைச் சொல்லலாம். ***

போட்டி

மாதாந்திர குறும்போட்டி நவம்பர் 2019ன் விடைகள்

1. அவருக்கு தாச தீக்ஷையை பெற்றுத்தர.
2. வைராக்ய. 3. மனைவிக்கு.
4. கனகதாசர், வைகுண்ட தாசர்.
5. ஆதத்தெல்ல ஒலிதே ஆயித்து.
6. புரந்தரோபநிஷத்.
7. பிள்ளரி (பிள்ளாரி) கீதே.
8. புஷ்ய அமாவாசை.
9. நாரதர்.
10. சுதாமா சரித்ரெ, கஜேந்திர மோக்ஷ, திரௌபதி வஸ்திராபஹரண, சர்வோத்தம கத்யா.

* சில கேள்விகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான பதில்களும் இருக்கலாம். அவற்றில் ஒன்றை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

* விடையளித்த 9 பக்தர்களின் பெயர்களையும் இங்கு பட்டியலிட முடியாததற்கு மன்னிக்கவும்.

* இந்த மாதம் இப்போட்டியில் புத்தகப் பரிசினைப் பெறும் இருவர்

- திரு.ரகூத்தமன், பெங்களூரு (134)
- திருமதி.கிரிஜா ஸ்ரீனிவாஸ், சென்னை (171)

* இதனால் மற்றவர்களின் விடைகள் தவறு என்று இல்லை.

* ஹரிபக்தர்கள் அனைவரும் இப்போட்டியில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ***

ஹரிதாச விஜயம் பத்திரிக்கையை உங்கள் நண்பர்கள் / உறவினர்கள் / குழுவினர்களிடம் அறிமுகம் செய்து, அவர்களும் நமது சாகித்யத்தைப் பற்றி அறிவதற்கு உதவவும்.


BOOK POST
ஸ்ரீ குருகோவிந்தவிட்டல தாசர்
If Undelivered, please
return to:
Sathya Narayanan,
380, 2A Main,16th Cross
JP Nagar 4th Phase
Bengaluru 560078
To:
ஹரிதாச விஜயம்
மாத இதழ்
Haridasa Vijayam - Monthly
மலர் 1 ** டிசம்பர் 2019 ** இதழ் 3
ஸ்ரீவித்யா பிரசன்ன தீர்த்தர்